# உதயன்

சுடர் 30 கதிர் 229 வள்ளுவர் ஆண்டு 2046 ஆனி 28,திங்கட்கிழமை 13.07.2015


வானிலை


கூ.வெ. 30°C
கு.வெ. 29°C
தெளிவான வானிலை

உள்ளே...



சீனாவைத் தாக்கிய கடும் புயலில் சுமார் 140 பேர் உயிரிழந்துள்ளனர். 54 ஆயிரம் வீடுகள் உருக்குலைந்து போயுள்ளன. 190 பேரின் நிலை என்ன என்பதே தெரியாதுள்ளது என்று அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் கூறுகின்றன.

பக்கம் 13



# சு.கட்சித் தலைமையை மைத்திரி தூக்கி எறிகிறார்

## கொழும்பில் அரசியல் பிரளயம்


கொழும்பு, ஜூலை 13
எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ போட்டியிடுவதற்கு ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பு அனுமதித்திருப்பதைத் தொடர்ந்து கொழும்பில் அரசியல் பிரளயம் ஏற்பட்டுள்ளது. சுதந்திரக் கட்சியின் முக்கிய தலைவர்கள் சிலர் ஏற்கனவே கட்சியைவிட்டு வெளியேறி ஐக்கிய தேசிய முன்னணியுடன் இணைந்துள்ள நிலையில் அந்தக் கட்சியின் தலைவர் பதவியை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தூக்கி எறிவார் என்று கொழும்பு அரசியல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. ஜனவரி 8ஆம் திகதி நாட்டு மக்கள் தனக்களித்த ஆணையை நிறைவேற்றுவதற்குத் தடையாக இருக்கும் கட்சியின் தலைமைப் பொறுப்பை இனியும் சுமப்பதில்லை என்று அவர் முடிவெடுத்துவிட்டார் என்று அவருக்கு நெருக்கமான வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. பக்.24

## காத்துக் கிடக்கிறது மஹிந்த பட்டியல்

### மைத்திரியின் அனுமதி இன்னும் கிட்டவில்லை

கொழும்பு, ஜூலை 13
ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பின் தேசியப் பட்டிய லில் உள்ளடக்குவதற்கு, மஹிந்த ராஜபக்ஷவினால் சமர்ப்பிக்கப்பட்ட முன்னாள் கடற்படைத் தளபதி வசந்த கரன்னகொட உள்ளிட்டோரின் பட்டியலை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இன்னமும் அங்கீகரிக்கவில்லை என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.
மஹிந்த ராஜபக்ஷ ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பின் சார்பில் குருநாகல் மாவட்டத்தில் போட்டியிடவுள்ளார். அவரது ஆதரவாளர்கள் பலரும் பல்வேறு மாவட்டங்களிலும் போட்டியிடுகின்றனர்.
இந்த நிலையில், தனக்கு ஆதரவான பலரையும் உள்ளடக்கிய பட்டியல் ஒன்றையும் மஹிந்த ராஜபக்ஷ தேசியப் பட்டியல் ஆசனங்களை நிரப்புவதற்காக கையளித்திருக்கிறார்.
இந்தப் பட்டியலில் முன்னாள் கடற்படைத் தளபதியும், ஜப்பானுக்கான தூதுவராக இருந்து அண்மையில் திருப்பி அழைக்கப்பட்டவருமான பக்.24

## ஐ.தே.முன்னணிக்கு மைத்திரி ஆதரவு



கொழும்பு, ஜூலை 13
ராஜபக்ஷ ஆட்சி நாட்டில் மீண்டும் உருவாவதைத் தடுப்பதற்காக உருவாகியுள்ள நல்லாட்சிக்கான ஐக்கிய தேசிய முன்னணிக்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் ஆதரவு இருப்பதாக அறியமுடிகின்றது.
முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பில் போட்டியிடுவதற்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அனுமதி வழங்கியதையடுத்து, ஜனாதிபதி மைத்திரிக்கு ஆதரவாகச் செயற்பட்ட அனைத்துத் தரப்பினரும் அவருக்கு எதிராக விமர்சனங்களை முன்வைத்திருந்தனர். இருப்பினும், மைத்திரியின் தலைமையில் தொடர்ந்தும் செயற்படுவதற்குத் தாம் தயாராக இருக்கின்றனர் என்று நல்லாட்சிக்கான ஐக்கிய தேசிய முன்னணி நேற்றுப் பகிரங்கமாக அறிவித்தது.
நல் லாட்சிக்கான ஐக்கிய தேசிய முன்னணியின் நேற்றைய ஆரம்ப நிகழ்வில் உரையாற்றிய அமைச்சர்களான சம்பிக்க ரணவக்க, ராஜித சேனாரத்ன பக்.24

## வேட்புமனு தாக்கல் இன்றுடன் நிறைவு

### நாளை முதல் பரப்புரை ஆரம்பம்


கொழும்பு, ஜூலை 13
ஓகஸ்ட் 17ஆம் திகதி இடம்பெறவுள்ள பொதுத் தேர்தலுக்கான வேட்புமனுத் தாக்கல் இன்று நண்பகல் 12 மணியுடன் நிறைவுக்கு வரவுள்ளது.வடக்கில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி, ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பு மற்றும் சுயேச்சைக் குழுக்கள் சில தமது வேட்புமனுக்களை இன்று தாக்கல் செய்யவுள்ளன. ஐக்கிய சோசலிசக் கட்சி யாழ். மாவட்டத்துக்குரிய வேட்புமனுக்களை இன்று தாக்கல் செய்யவுள்ளது.
ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பு, ஐக்கிய தேசியக் கட்சி,ஜே.வி.பி. ஆகியன கொழும்பு உள்ளிட்ட சில மாவட்டங்களுக்குரிய வேட்பு மனுக்களை இன்று தாக்கல் செய்யவுள்ளன. சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் என்பன தனித்துப் போட்டியிடும் மாவட்டங்களுக்கான பக்.24

## ஐ.தே. முன்னணிக்கான புரிந்துணர்வு கைச்சாத்து

### அலரி மாளிகையில் நேற்று நிகழ்வு



கொழும்பு, ஜூலை 13
ஐக்கிய தேசியக் கட்சியின் யானை சின்னத்தில் நல்லாட்சிக்கான ஐக்கிய தேசிய முன்னணியில் போட்டியிட சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் மஹிந்த எதிர்ப்புக் குழு, பக்.24



## ஐ.தே.முன்னணிக்கு தலைமைத்துவ சபை

### உருவாக்கப்படும் என்கிறார் ரணில், கட்சிகள் சுயாதீனமாகச் செயற்படவும் இணக்கம்.

கொழும்பு, ஜூலை 13
ஐக்கிய தேசிய முன்னணியில் உள்ள கட்சிகளின் தனித்துவம் பாதுகாக்கப்படும். இதற்காக முன்னணிக்கான தலைமைத்துவ சபை ஒன்றை உருவாக்குவோம். முன்னணியில் அங்கம் பக்.24

## உலக வங்கி பிரதிநிதிகளை முதலமைச்சர் சந்தித்தார்

### அரசியல் வட்டாரத்தில் சலசலப்பு



கொழும்பு, ஜூலை 13
வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன், உலக வங்கிப் பிரதிநிதிகளுடன் அமெரிக்காவில் பக்.24

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# நாட்டை நேசிக்கும் அனைவரும் திரள்க

### அமைச்சர் ராஜித அழைப்பு

கொழும்பு, ஜூலை 13

பிரதமர் ரணில் விக்ரமசிங்கவுடன் இலங்கையின் வரலாற்றை மீண்டும் எழுதும் யுகத்தை ஏற்படுத்த அணி திரளுமாறு நாட்டை நேசிக்கும் அனைவரிடமும் கோரிக்கை விடுப்பதாக அமைச்சர் ராஜித சேனாரத்ன குறிப்பிட்டுள்ளார்.



அலரி மாளிகையில் நேற்று நடைபெற்ற நல்லாட்சிக்கான ஐக்கிய தேசிய முன்னணியின் புரிந்துணர்வு உடன்படிக்கையில் கையெழுத்திட்ட பின்னர் கருத்து வெளியிடும் போதே அவர் இதனை கூறியுள்ளார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் உதவியுடன் மஹிந்த ராஜபக்ஷவை தோற்கடிக்க முடிந்தது. 100 நாள்களில் தியாகங்களை செய்து 19ஆவது திருத்தச் சட்டத்தை கொண்டு வர மேற்கொண்ட முயற்சி தொடர்பில் ரணில் விக்ரமசிங்கவை பாராட்ட வேண்டும்.

தனிப்பட்ட ரீதியில் இது எமக்கு பாதிப்பானது. நாட்டுக்கு சேவையாற்றவே நாங்கள் அரசியலுக்கு வந்தோம். அமைச்சர் பதவிகளை பெற்று கொள்ள நாங்கள் வரவில்லை. இறுதி நேரத்தில் எடுத்த தீர்மானம் காரணமாக எம்மால் நல்லாட்சிக்கான ஐக்கிய தேசிய முன்னணியின் சின்னத்தில் மாற்றங்களை செய்ய முடிவில்லை.

நல்லாட்சிக்காக ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவருடன் ஏனைய அனைத்து சக்திகளையும் இணைத்து எங்கள் மனதை தேற்றிக்கொண்டுள்ளோம். மாதுளுவாவே சோபித தேரர் உட்பட அனைத்து சக்திகளின் ஆசீர்வாதத்துடன் நாங்கள் இந்த பணிகளை மேற்கொள்வோம்.

புதிய அரசாங்கத்தை அமைக்க சிறிலங்கா சுதந்திரக் கட்சியில் இருந்து பலர் இந்த பக்கம் வருவார்கள். படித்த, புத்திசாலித்தனமான அரசியல்வாதிகள் ஒன்றாக இணைவார்கள். ஜனவரி 8 ஆம் திகதி வழங்கிய ஆணையை தொடர்ந்தும் முன்னெடுத்துச் செல்ல எமக்கு மீண்டும் ஆணையை தருமாறு மக்களிடம் கேட்கிறோம்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுடன் இணைந்து எமக்கு செய்து கொள்ள முடியாது போன 20 ஆவது திருத்தச் சட்டத்தை செய்து முடிக்க எமக்கு ஆணையை வழங்குமாறு மக்களிடம் கோருகின்றோம்.

திருடர்கள், வன்முறையாளர்கள், மோசடி இல்லாத தூய்மையானவர்கள் தெரிவாகும் வகையில் தேர்தல் முறை ஒன்றை நாங்கள் ஏற்படுத்துவோம். 100 நாள்களில் பெரும் வேலைகளை செய்தோம். பாரிய பொருளாதார முன்னேற்றத்தையும் மறுசீரமைப்பையும் ஏற்படுத்தினோம். ஊடக சுதந்திரத்தை ஏற்படுத்தினோம்.- என்றார். (ற)

## இலங்கை குற்றவாளிகள் பாகிஸ்தானில் கைது

கொழும்பு, ஜூலை 13

இலங்கையில் தேடப்பட்டுவரும் போதைப்பொருள் கடத்தல்காரர்கள் இருவரை பாகிஸ்தான் சிந்தா போலிஸின் சிறப்பு விசாரணைப் பிரிவினர் கைது செய்துள்ளனர். கராச்சி மாலிர் ஹால்ட் பகுதியில் நடத்தப்பட்ட தேடுதல் நடவடிக்கையின் போதே இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதேவேளை, தாய்லாந்தைச் சேர்ந்த போதைப்பொருள் கடத்தல் காரர் ஒருவரும் இதன்போது கைது செய்யப்பட்டுள்ளதாக பாகிஸ்தான் செய்திகள் தெரிவிக்கின்றன. (ற)

## எதிர்வரும் தேர்தலில் போட்டியிடுவதில்லை

### சோமவன்ஸ தீர்மானம்

எதிர்வரும் பொதுத் தேர்தலில் போட்டியிடாதிருக்க மக்கள் விடுதலை முன்னணியின் முன்னாள் தலைவர் சோமவன்ஸ அமரசிங்க தீர்மானித்துள்ளார்.

அண்மையில் மக்கள் விடுதலை முன்னணியில் இருந்து விலகிய சோமவன்ஸ உள்ளிட்ட குழுவினர் ஜனதா சேவக பக்ஷ என்ற கட்சியைஆரம்பித்தனர்.

இதேவேளை இவர்கள் மேலும் சில கட்சிகளுடன் இணைந்து பொதுத் தேர்தலில் கூட்டமைப்பு ஒன்றை அமைக்க தயாராக இருந் தனர்.

இதில் இணையவிருந்த சில கட்சிகள் தற்போது ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து கூட்டணி அமைத்துள்ளமையால், இம்முறை தேர்தலில் களமிறங்காதிருக்க சோமவன்ஸ அமரசிங்க உள்ளிட்ட குழுவினர் தீர்மானித்துள்ளனர்.

இது எவ்வாறு இருப்பினும் தேர்தல் காலங்களில் சுயாதீனமாக செயற்பட்டு தனது கருத்துக்களை மக்கள் மத்தியில் கொண்டு செல்ல நடவடிக்கை எடுத்துள்ளதாக சோமவன்ஸ அமரசிங்க குறிப்பிட்டுள்ளார். (ற)

## அரசியலில் இருந்து அமுனுகம ஓய்வு?

முன்னாள் அமைச்சரும் கண்டி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான சரத் அமுனுகம அரசியலிலிருந்து ஓய்வுபெற தீர்மானித்துள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் கீழ் போட்டியிடுவதற்கு வேட்புமனு வழங்கியதையடுத்து, அதற்கு அதிருப்தி வெளியிட்டுவந்த சரத் அமுனுகம, எதிர்வரும் பொதுத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சியில் இணைந்து போட்டியிடுவார் என பெரிதும் எதிர்பார்க்கப்பட்டது. எனினும் தாம் எந்தவொரு கட்சியிலும் இணைந்து கொள்ள போவதில்லை யெனவும், அரசியலிலிருந்தே ஓய்வுபெற தீர்மானித்துள்ளதாகவும் அவர் கூறியுள்ளதாக தெரிவிக் கப்படுகிறது.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியிலிருந்து பிரிந்து வந்தவர்கள், நேற்று ஐக்கிய தேசியக் கட்சியின் கீழ் போட்டியிடுவதற்கு வேட்புமனு கைச்சாத்திட்டனர். எனினும், ஐக்கிய தேசியக் கட்சியில் இணைந்துகொள்வதாக தெரிவித்திருந்த சுதர்ஷினி பெர்னாண்டோபுள்ளே, பியசேன கமகே, எஸ்.பி.திஸாநாயக்க ஆகி யோர் நேற்று தமது முடிவை மாற்றிக் கொண்டனர். இவர்களுள் எஸ்.பி. திஸாநாயக்கவை, ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு தேர்தல் கடமைகளுக்கு பொறுப்பாக நியமித்துள்ளது. (ற)

## கொள்ளைச் சம்பவத்துடன் தொடர்புடையவர் கைது

கொழும்பு, ஜூலை 13

அம்பாறை மாவட்டம் தெஹியத்த கண்டிய பிரதேசத்தில் வீடொன்றில் இடம்பெற்ற கொள்ளை சம்பவத்துடன் தொடர்புடைய நபரை நேற்று தெஹியத்த கண்டிய பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கஸ்தூரிசிங்ஹ ஆராச்சிலாகே நாலந்த பிரதீப் பெரேரா (வயது 25) எனும் சந்தேக நபரை கைது செய்ததுடன், அவரிடமிருந்து வீடு புகுந்து திருடிய பொருள்களையும் மீட்டுள்ளதாகத் தெரிவித்தனர்.

குறித்த பிரதேசத்தில் நேற்று சனிக்கிழமை இரவு வீடு ஒன்றிலிருந்து ஒரு லட்சத்து 20 ஆயிரம் ரூபாய் பெறுமதியான பொருள்கள் கொள்ளையிடப்பட்டுள்ளதாக தெரியவந்துள்ளது.

வெவுகம, நவமெதகம எனுமிடத்தில் வாடகை வீட்டில் வசித்து வந்த மனமாலகே ஆரியசிங்ஹ என்பவரின் வீட்டில் குறித்த நபர் இல்லாத சமயம் பார்த்து இந்த கொள்ளைச் சம்பவம் இடம்பெற்றிருப்பதாக பொலிஸார் தெரிவித்துள்ள்னர்.

இந்நிலையில், கைது செய்யப்பட்ட நபரை நீதிமன்றில் முற்படுத்தவிருப் பதோடு, குறித்த சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வரு கின்றனர். (ற)

## ஐ.தே.கவுடன் இணைந்தோர் தேர்தலின் பின்னர் திரும்புவர்

### எஸ்.பி. திஸாநாயக்க கூறுகின்றார்

கொழும்பு, ஜூலை 13

ஐக்கிய தேசியக் கட்சியில் இணைந்து கொண்டவர்கள் பொதுத் தேர்தலின் பின்னர் மீண்டும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்புக்குத் திரும்புவார்கள் என அமைச்சர் எஸ்.பி.திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுடன் இருந்தவர்கள் எதிர்வரும் பொதுத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து போட்டியிடத் தீர்மானித்துள்ளனர்.

தேர்தலின் பின்னர் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு தேசிய அரசாங்கமொன்றை அமைக்கும். இதில் தற்போது விலகிச் சென்றவர்களும் இணைந்து கொள்வார்கள் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

சம்பிக்க ரணவக்க, ரத்ன தேரர் மற்றும் ராஜித சேனாரட்ன போன்றவர்கள் பெரும் சமூக மாற்றத்திற்கு ஒத்துழைப்பு வழங்கியவர்கள் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.(ற)

## சந்திரிகா பயணத்துக்கு மைத்திரியே காரணம்

### விஜயதாச ராஜபக்ஷ தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 13

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மீது ஏற்பட்ட அதிருப்தி காரணமாகவே முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க வெளிநாடு சென்றதாக நீதியமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தேர்தலில் போட்டியிட வாய்ப்பை வழங்கியதால், முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா அதிருப்தியடைந்தார்.


மஹிந்த ராஜபக்ஷ அரசாங்கத்தில் நடந்த ஊழல், மோசடிகளுக்கு அவர் பொறுப்புக் கூற வேண்டும் என்பதால், அவருக்கு தேர்தலில் போட்டியிட வாய்ப்பை வழங்காது இருந்திருக்கலாம்.

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா தான் அதிருப்தியடைந்த விடயம் குறித்து அவர் நாடு திரும்பியதும் அறிக்கையை வெளியிட வாய்ப்புள்ளது என்றும் அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ கூறியுள்ளார். (ற)

## மஹிந்தவுக்குத் தடையானோரே ஐ.தே.கவுடன் இணைந்துள்ளனர்

### கெஹலிய ரம்புக்வெல தெரிவிப்பு

ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பில் இருந்து விலகி சிலர் ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்திருக்கின்றார்கள். அவ்வாறு இணைந்தவர்களே, மைத்திரி மஹிந்த இணைப்பிற்கு தடையாக இருந்த வர்கள் என முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் கெஹெலிய ரம்புக்வெல்ல தெரிவித்துள்ளார்.



கண்டியில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

சிறிலங்கா சுதந்திர கட்சி உட்பட ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் சிலர் ஐக்கிய தேசிய கட்சியில் இணைந்தமை முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் வெற்றிக்காக பெற்றுக்கொண்ட ஆசீர்வாதம் என அவர் கூறியுள்ளார்.

ரணில் விக்ரமசிங்கவின் அரசாங்கம் தொடர்பில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு சிக்கல் நிலை காணப்பட்டதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ற)

## ஐ.ம.சு.மு. தேர்தல் செயற்பாடு எஸ்.பி. திஸாநாயக்க கையில்

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் தேர்தல் செயற்பாடுகள், அமைச்சர் எஸ்.பி.திஸாநாயக்கவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பில் சிங்கள ஊடகமொன்றுக்கு கருத்துத் தெரிவித்துள்ள எஸ்.பி, ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியுடன் இணைந்து செயற்படும் சிவில் அமைப்புக்கள் போன்றவற்றுடன் எதிர்வரும் நாள்களில் கலந்துரையாடவுள்ளதாக தெரிவித்தார்.

முரண்பாடுகளைத் தவிர்த்து, தேர்தல் நடவடிக்கையில் ஈடுபடவுள்ளதாக தெரிவித்த அவர், கடந்த 1994ஆம் ஆண்டு பொதுஜன ஐக்கிய முன்னணி அரசைஉருவாக்கும் நடவடிக்கையில் செயற்பட்டதைப் போன்று இம்முறையும் செயற்படவுள்ளதாக கூறியுள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சி கூட்டணியில் இணைந்து செயற்படவுள்ளதாக தெரிவித்த எஸ்.பி.திஸாநாயக்க, பின்னர் அதிலிருந்து பின்வாங்கி ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பிலேயே போட்டியிடவுள்ள தாக தெரிவித்தார்.(ற)

## மஹிந்த குழுவினரை தோற்கடிக்க ஆதரவு

### மாதுளுவாவே சோபித தேரர் கூறுகின்றார்

கொழும்பு, ஜூலை 13

ஊழல் மோசடியற்ற சிறந்த சமுதாயம் ஒன்றை கட்டியெழுப்புவதற்காக தான் மேற்கொண்டிருந்த போராட்டம் வீண் செயலாகியுள்ளதாக நியாயமான சமூகத்திற்கான தேசிய அமைப்பின் ஏற்பாட்டாளர் மாதுளுவாவே சோபித தேரர் தெரிவித்துள்ளார்.

சிங்கள ஊடகமொன்றில் இடம்பெற்ற கலந்துரையாடலில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

போதைப்பொருள் வியாபாரம் தொடர்பில் குற்றம் சுமத்தப்பட்டுள்ள வெலோ சுதா விடுதலையாகி இருந்தால் அவருக்கும் வேட்பு மனு வழங்குவது இந்நாட்டு அரசி யல் கட்சிகளுக்கு அவ்வளவு பெரிய பிரச்சினை அல்ல என்றும் தெரிவித்தார்.

ஊழல் மோசடி குற்றம் சுமத்தப்பட்டவர்களுக்கு எந்த கட்சியில் வேட்புமனு வழங்கப்பட்டாலும் தான் ஒரு போதும் அதனை அனுமதிக்கமாட்டேன் என அவர் கூறியுள்ளார்.

இதேவேளை, கடந்த ஜனாதிபதி தேர்தலின்போது, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு ஆதரவு வழங்கிய பேராசிரியர் சரத் விஜேசூரிய, மஹிந்த ராஜபக்ஷ உள்ளிட்ட குழுவினரை தொடர்ந்து தோற் கடிப்பதற்கு தனது ஆதரவை வழங்குவதாகவும் சோபித தேரர் குறிப்பிட்டுள்ளார். (ற)



கீரிமலை கடலில் நேற்று கல்லால் ஆன 4 அடி உயரமான பிள்ளையார் சிலை கரை ஒதுங்கியுள்ளது. குறித்த பிள்ளையார் சிலையை, கடற்கரையிலேயே வைத்து மக்கள் வழிபாடுகள் நடத்தியுள்ளனர். நேற்றுக் காலை 9.30 மணியளவில், கீரிமலை கடலில் அந்தியேட்டிக் கிரியைகள் நடத்துவதற்காக வந்தவர்கள், கடலில் குளித்த போது கல் ஒன்று மிதந்து வருவதை அவதானித்துள்ளனர். பின்னர் அருகில் சென்று பார்த்த போது, அது பிள்ளையார் சிலை என்பதைக் கண்டறிந்துள்ளனர். இருந்த நிலையில் பிள்ளையார் அருள் பாலிப்பதைப் போன்ற சிலையே, கடற்கரையில் நேற்று ஒதுங்கியுள்ளது. குறித்த சிலையை மீட்டு, கடற்கரையிலுள்ள கல்லின் மேல் வைத்து வழிபாடுகளை ஆரம்பித்துள்ளனர். (ற-5)

## 38 கிலோகிராம் கஞ்சா சிக்கியது

### பளை பொலிஸாரின் சுற்றிவளைப்பில்



மன்னாரில் இருந்து கடத்தி வரப்பட்ட ஒரு தொகுதி கஞ்சா பளை கச்சார்வெளியில் உள்ள வீடொன்றில் இருந்து பளைப் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளது. அதனைக் கொண்டு வந்ததாக சந்தேகிக்கப்படும்ஒருவரையும் கைது செய்ததுடன், அவர் கொண்டு வந்த மோட்டார் சைக்கிளையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர். இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை இடம்பெற்றது.

மன்னாரிலிருந்து வந்த பொலிஸ் புலனாய்வுப் பிரிவினர் பளைப் பொலிஸாருடன் இணைந்து கச்சார் வெளிப் பகுதி வீடொன்றை சுற்றி வளைத்து தேடுதல் நடத்தினர். அப்போது அங்கிருந்து 38 கிலோ கஞ்சாவைக் கைப்பற்றியுள்ளனர்.

இந்தக் கஞ்சா தென்னிந்தியாவிலிருந்து மன்னாருக்கு கொண்டு வரப்பட்டுஅங்கிருந்து பளைக்கு கொண்டு வந்ததாகவும் இங்கிருந்து ஏனைய இடங்களுக்கு விநியோகம் செய்வதற்கிடையில் பின்தொடர்ந்து வந்த பொலிஸ் புலனாய்வுப் பிரிவினர் பளைப் பொலிஸாரின் உதவியுடன் கைப்பற்றியுள்ளனர் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த நபரை அன்றைய தினமே கிளிநொச்சி நீதிவான் முன்னிலையில் முற்படுத்திய பொலிஸார் மேல் விசாரணைகள் மேற்கொள்ள அனுமதிக்குமாறு கோரியதையடுத்து விசாரணைகளை மேற்கொள்ள சந்தேக நபரை அழைத்துச் செல்ல நீதிவான் அனுமதியளித்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (ற-21,9)

## 46 கசிப்பு போத்தல்களுடன் இருவர் கைது

கொழும்பு, ஜூலை 13

சுன்னாகம் இரகசிய பொலிஸார் மேற்கொண்ட திடீர் சுற்றிவளைப்பு நடவடிக்கையின் போது, ஏழாலை தெற்கு மயிலங்காடு பகுதியில் உள்ள வீடு ஒன்றில் கசிப்பு விற்பனையில் ஈடுபட்ட இருவரை நேற்றுமுன்தினம் இரவு கைது செய்துள்ளதாக சுன்னாகம் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி எச்.வீ.எல். துஷ்மந்த தெரிவித்துள்ளார்.

இரகசிய பொலிஸாருக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் குறித்த வீட்டினை முற்றுகையிட்ட பொலிஸார், 46 கசிப்பு போத்தல்களையும் மீட்டுள்ளனர். இவ்விடயம் குறித்த மேலதிக விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்துள்ளதாக தெரிவித்தனர். (ற)

## தேர்தல் விதி மீறல் குறித்து 135 முறைப்பாடுகள் பதிவு

### தேர்தல்கள் செயலகம் தெரிவிப்பு




கொழும்பு, ஜூலை 13

பொதுத் தேர்தலுடன் தொடர்புடைய 135 முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாகத் தேர்தல்கள் செயலகம் தெரிவித்துள்ளது.

சட்டவிரோத நியமனங்கள் மற்றும் பதவி உயர்வு வழங்குதல் என்பன தொடர்பிலேயே அதிக முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாகத் தேர்தல்கள் செயலகத்தின் முறைப்பாட்டுப் பணியகம் குறிப்பிட்டுள்ளது.

அவ்வாறான 72 முறைப்பாடுகள் பதிவாகியுள்ளதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும் சட்டவிரோத சுவரொட்டிகள் மற்றும் பதாகைகளை காட்சிப்படுத்துதல் தொடர்பில் 19 முறைப்பாடுகள் பதிவாகியுள்ளன.

பொருள்கள் பகிர்ந்தளித்தமை குறித்து 13 முறைப்பாடுகள் கிடைத் துள்ளதாகவும் தேர்தல்கள் செயலகம் தெரிவித்துள்ளது.

அரச வளங்களை முறைக்கேடாகப் பயன்படுத்தியமை குறித்து 8 முறைப்பாடுகளும், அரச அதிகாரிகளைத் தேர்தல் நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்தியமை தொடர் பில் ஒரு முறைப்பாடும் பதிவாகியுள்ளது.

இதனிடையே பொதுத் தேர்தல் குறித்து 15 முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாகப் பொலிஸார் தெரிவிக்கின்றனர். கிடைத்துள்ள முறைப்பாடுகள் தொடர்பில் பொலிஸ் தேர்தல் முறைப்பாட்டு விசாரணைப் பிரிவினர் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். (ற-சி)

## கசிப்பு காய்ச்சிய இருவர் குப்பிளானில் சிக்கினர்



வலி.வடக்கு, ஜூலை 13

குப்பிளான் பகுதியில் கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்ட இருவரை நேற்றுமுன்தினம் சுன்னாகம் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

குப்பிளான் தைலங்கடவைப் பகுதியில் ஆள்கள் நடமாட்டம் அற்ற பற்றைகள் நிறைந்த பகுதியில் சிலர் கசிப்பு உற்பத்தியில் ஈடுபடுவதாக பொலிஸாருக்குத் தகவல் கிடைத்துள்ளது. அதையடுத்து அங்கு சென்ற சுன்னாகம் பொலிஸ் நிலைய குற்றத் தடுப்பு பொலிஸ் பொறுப்பதிகாரி பொலிஸ் பரிசோதகர் பிரதீப தலைமையில் சென்ற பொலிஸ் குழுவினர் குறித்த இடத்தைச் சுற்றி வளைத்தனர்.

அங்கிருந்த இருவர் சிக்கிக்கொள்ள ஒருவர் பற்றைகள் ஊடாக தப்பி ஓடி தலைமறைவாகியுள்ளார். அங்கிருந்து 24 போத்தல் கசிப்பு மற்றும் கசிப்பு உற்பத்திக்குப் பயன்படுத்திய பொருள்கள் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன. (ற-86)

## மாடுகளை வதைத்தவர் கைது



பளை, ஜூலை 13

ஐந்து மாடுகளை சிறிய வாகனம் ஒன்றில் ஏற்றிச் சென்ற ஒருவரை பளைப் பொலிஸார் நேற்று பளை நகர்ப் பகுதியில் வைத்துக் கைது செய்தனர்.

பளை நகர்ப்பகுதியில் நிறுத்தப்பட்டிருந்த வாகனத்தைச் சோதனையிட்ட பொலிஸார் மிருகங்களை சித்திரவதைப்படுத்தும் வகையில் ஐந்து மாடுகளை சிறிய வாகனத்தில் ஏற்றி வந்ததைக் கண்டு பிடித் தனர். மாடுகளை மீட்ட பொலிஸார் வாகனத்தில் கொண்டுவந்த நபரையும் கைது செய்துள்ளனர். (ற-9)

## மாணவருக்கு பாதணிகள்

தென்மராட்சி, ஜூலை 13

சாவகச்சேரி சக்தி அம்மன் தமிழ் வித்தியாலய மாணவர்களுக்கு பாதணிகள் வழங்கும் நிகழ்வு இன்று மு.ப. 9.00 மணிக்கு வித்தியாலய மண்டபத்தில் இடம்பெறும்.

புலம்பெயர் நாடொன்றில் உள்ள அறக்கட்டளை நிறுவனத்தால் வித்தியாலயத்தில் கல்வி பயிலும் அனைத்து மாணவர்களுக்கும் பாதணிகள் வழங்கவுள்ளதாக பாடசாலை நிர்வாகத்தினர் அறிவித் துள்ளனர். (ற-9)

## கடந்த 6 மாதங்களில் விபத்துகளால் காயமடைந்தோர் 275 பேர்

### சாவகச்சேரி ஆதார மருத்துவமனையின் புள்ளி விவரங்கள் கூறுகின்றன

தென்மராட்சி, ஜூலை 13

சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் கடந்த ஆறு மாதங்களில் வீதி விபத்துக்களில் சிக்கி காயமடைந்த 275 பேர் சேர்க்கப்பட்டுள்ளனர் என்று மருத்துவமனை செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவர்களில் இருவர் சாவடைந்தனர் என்றும், 62 பேர் மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டனர் என்றும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

வீதி விபத்துக்களில் பெரும்பாலானவை மோட்டார் சைக்கிள்களால் ஏற்பட்டவையெனத் தெரிவிக்கப்பட்டது.

**வீதிகள் கார்பெற் வீதிகளாகவும் தார் வீதிகளாகவும் மாற்றப்பட்டதால் வாகனங்களை அளவுக்கு அதிகமான வேகத்தில் செலுத்தி கட்டுப்பாட்டை இழந்து விபத்துக்களை ஏற்படுத்துவதாகவும் தெரிவிக்கப்பட்டது.**

வீதி விபத்துக்கள் அதிகளவில் ஏற்பட காரணம் வீதி அமைப்புக்களில் ஏற்பட்டுள்ள மாற்றமும் வாகனம் செலுத்துவோர் வேகக் கட்டப்பாட்டை மீறி வாக னங்களைச் செலுத்துவதுமாகும். தென்மராட்சி பிரதேசத்தின் பெரும் பாலான வீதிகள் கார்பெற் வீதிக ளாகவும் தார் வீதிகளாகவும் மாற் றப்பட்டதால் வாகனங்களை அள வுக்கு அதிகமான வேகத்தில் செலுத்தி கட்டுப்பாட்டை இழந்து விபத்துக்களை ஏற்படுத்துவதாகவும் தெரிவிக்கப்பட்டது.


முன்னைய காலத்தில் வாகனங்களை வேகமாகச் செலுத்த முடியாத நிலையில் வீதிகள் காணப்பட்டதால் விபத்துக்களும் பெருமளவில் ஏற்படவில்லை.

கடந்த ஐந்து வருடங்களில் பல வீதிகள் கார்பெற் வீதிகளாகவும் தார் வீதிகளாகவும் மாற்றப்பட்ட அதே வேளையில் இக்காலப்பகுதியில் சுமார் இரண்டு லட்சம் வாகனங்களும் யாழ்.மாவட்டத்திற்கு வந்து சேர்ந்தன. இவற்றுடன் தென் பகுதிகளிலிருந்து தினமும் பெரும் எண்ணிக்கையான வாகனங்களும் ஏ-9 வீதியூடாக யாழ்.மாவட்டத் திற்கு வந்து செல்கின்றன.

விபத்துக்களைத் தடுக்க அனைத்துப் பொலிஸ் நிலையங்களின் போக்குவரத்துப் பொலிஸாரும் தம்மாலான முழு முயற்சிகளும் மேற்கொள்கின்ற போதிலும் வாகனச் சாரதிகளின் பொறுப்பற்ற செயலினால் விபத்துக்கள் இடம்பெறுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (ற-9)

# ஐ.தே.கவை விமர்சித்தோர் தற்போது இணைந்துள்ளனர்

## ஜோன் செனவிரத்ன கூறுகின்றார்



கொழும்பு, ஜூலை 13

ஐக்கிய தேசிய கட்சியால் ஒரு போதும் அதிகாரத்தை கைப்பற்றத் தெரியாதென கூறியவர்கள் தற்போது ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்துள்ளதாக சிறிலங்கா சுதந்திர கட்சியின் சிரேஷ்ட உப தலைவர் ஜோன் செனவிரத்ன தெரிவித்துள்ளார்.

சர்வதேச செய்திச் சேவையொன்றுக்கு வழங்கிய செவ்வியிலேயே அவர் இதனை குறிப்பிட்டுள்ளார்.

அவர்களின் எதிர்பார்ப்பாக இருப்பது எப்படியாவது அதிகாரத்தை பெற்றுக்கொள்வதெனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஐக்கிய தேசிய கட்சியுடன் ஒரு போதும் இணைய மாட்டேன், ஒன்றாக இணைந்து வேலை செய்யக்கூடிய திறன் காணப்பட்டாலும் ஐக்கிய தேசிய கட்சிக்கு அதிகாரத்தைக் கைப்பற்றத் தெரியாதென கூறிய ஜாதிக ஹெல உறுமயவின் சம்பிக்க ரணவக்கவும், அத்துரலிய ரத்ன தேரரும் தற்போது ஐக்கிய தேசிய கட்சியில் இணைந்துள்ளதாக அவர் கூறியுள்ளார்.

பல கட்சிகள் அவ்வாறு இணைந்திருந்தாலும் அவ்வாறான கட்சிகளின் கொள்கைகள் முரண்பாடானவைகள் என்பதனால் அவற்றுடன் இணைந்து மேற்கொள்ளப்படும் அரசு நிலையற்றதென அவர் தெரிவித்துள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுடன் இணைந்து செயற்பட பெரிய அளவிலான நபர்கள் இணைந்துள்ளதாக தெரிவித்தவர், சிலர் மாத்திரம் இணையாமல் இருப்பதென்றால் பாசாங்குத்தனம் மற்றும் தனிப்பட்ட காரணங்களினாலே என அவர் குறிப்பிட் டுள்ளார். (ற)




கிண்ணியா பிரதேச செயலகத்தால் ஏற்பாடுசெய்யப்பட்ட 'சுயகண்ணால் போதையற்ற உலகை காண்போம்' எனும் தொனிப்பொருளில் போதைப் பொருள் பாவனைக்கு எதிரான ஊர்வலம் கடந்த வெள்ளிக்கிழமை கிண்ணியாவில் இடம்பெற்றது. கிண்ணியா பிரதேச செயலாளர் எம்.ஏ. அனஸ் தலைமையில் நடைபெற்ற இந்த ஊர்வலத்தில் கிண்ணியா பிரதேச திட்டமிடல் உதவிப் பணிப்பாளர், கணக்காளர், கிராம சேவை உத்தியோகஸ்தர்கள் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர். (ற)

# கஞ்சாவுடன் ஒருவர் அம்பாறையில் கைது

அம்பாறை, ஜூலை 13

அம்பாறை மாவட்டம் நற்பிட்டிமுனை பொது விளையாட்டு மைதானத்தில் கஞ்சாவுடன் நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த நபரை நேற்றுமுன்தினம் சனிக்கிழமை இரவு கஞ்சா வைத்திருந்த விலையில் கல்முனைப் பொலிஸார் கைது செய்துள்ளதாக தெரிவித்தனர்.

பொதுமக்களிடமிருந்து கிடைத்த ரகசியத் தகவல் ஒன்றையடுத்து மேற்கொள்ளப்பட்ட சுற்றி வளைப்பின் போது 8 கிராம் கஞ் சாவைத் தம் வசம் வைத்திருந்த நபரை பொலிஸார் கைது செய் துள்ளனர்.

நற்பிட்டிமுனை மத்ரசா வீதியைச் சேர்ந்த கலந்தர் அப்துல் கபூர் (வயது 48) என்ற நபரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்நிலையில் இச்சம்பவம் குறித்து கல்முனைப் பொலிஸார் மேலதிக விசாரணைகளில் ஈடுபட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை மட்டக்களப்பு மாவட்டத் தின் ஏறாவூர் மாவடிவேம்பில் 10 கிராம் கஞ்சாவுடன் நேற்று சனிக்கிழமை இரவு நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

தெருவில் சென்று கொண்டிருந்த வேளை மேற்கொள்ளப்பட்ட திடீர் சோதனையின் போது யோகதாஸன் பிரதீபன் (வயது 25) என்ற நபரை பொலிஸார் கைது செய் துள்ளனர்.

இதனை தொடர்ந்து ஆள் நடமாட்டம் இல்லாத இடத்தில் மாவடி வேம்புப் பிரதேசத்தில் அநாதரவாகக் கிடந்த 100 கிராம் கஞ்சா பொதியொன்றையும் ஏறாவூர் பொலிஸார் நேற்று சனிக்கிழமை கைப்பற்றியுள்ளனர்.

எனவே இது தொடர்பான மேலதிக விசாரணைகளை ஏறாவூர்ப் பொலிஸார் மேற்கொண்டு வருவதாக தெரிவிக்கப்படுகின்றது. (ற)

# ஐ.தே.கவை பாதுகாக்கின்றது மக்கள் விடுதலை முன்னணி

*சாடுகின்றது முன்னிலை சோஷலிஸக் கட்சி*

கொழும்பு, ஜூலை 13

ஐக்கிய தேசியக் கட்சியின் நலன்களை பாதுகாக்கும் வகையில், மக்கள் விடுதலை முன்னணியின் செயற்பாடுகள் அமைந்துள்ளதாக, முன்னிலை சோஷலிஸக் கட்சியின் உறுப்பினர் துமிந்த நாகமுவ குற்றஞ்சாட்டியுள்ளார்.

இந்நிலையில், மக்கள் விடுதலை முன்னணி ஒரு இடதுசாரி கட்சியா என சந்தேகம் எழுந்துள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

மஹரகம பிரதேசத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற கூட்டமொன்றிலேயே, அவர் இதனை தெரிவித்தார்.

கடந்த நாடாளுமன்ற அமர்வுகளிலும் இரு கட்சிகளும் ஒருமித்து செயற்பட்டதாக குறிப்பிட்ட அவர், ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சியமைப்பதற்காக, மக்கள் விடுதலை முன்னணி திரைமறைவில் செயற்பட்டு வருவதாக குற்றஞ் சுமத்தியுள்ளார். (ற)

# தரம் ஐந்து மாணவருக்கு புத்தகம் வழங்கும் நிகழ்வு



வவுனியா, ஜூலை 13

தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சைக்கு தோற்றும் மாணவர்களுக்கு புத்தகங்கள் வழங்கும் நிகழ்வு நேற்றுமுன்தினம் சனிக் கிழமை வவுனியா கோட்டக் கல்வி அதிகாரி பணிமனையில் இடம்பெற்றது.

மாணவர்களை வலுப்படுத்தும் நோக்கில் அறக்கட்டளை ஒன்றால் வடக்கு கிழக்கு மாகாணங்களிலுள்ள பாடசாலைகளுக்கு 10 ஆயிரம் புத்தகங்கள் வழங்கப்பட்டு வருகின்றன.

வவுனியா வடக்கு கல்வி வலயத்தை சேர்ந்த 57 பாடசாலைகளுக்கு 615 புத்தகங்கள் வழங்கும் நிகழ்ச்சி, கோட்டக்கல்வி பணிப்பாளர் திரு.அமிர்தலிங்கம் தலைமையில் நடைபெற்றது.

இதில் வன்னி முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன், வடக்கு மாகாணசபை உறுப்பினர் இந்திரராசா, அதிபர்கள், தொண்டு நிறுவனத்தின் இணைப்பாளர் திரு.சுபாஸ்கரன், உதவிக் கல்வி பணிப்பாளர், வலயக்கல்வி பிரதிநிதிகள், ஆசிரிய ஆலோசகர்கள் கலந்துகொண்டனர். (ற)

# இலங்கைப் பெண் தாக்கி பணிப் பெண் உயிரிழப்பு

## ஐக்கிய அரபு இராஜ்ஜியத்தில் சம்பவம்

ஐக்கிய அரபு இராஜ்ஜியத்தில் தொழில் புரிந்து வரும் இலங்கையை சேர்ந்த வீட்டுப் பணிப் பெண்ணொருவர் தாக்கியதில் மற்றுமொரு வீட்டுப் பணிப்பெண் உயிரிழந்துள்ளார்.

இருவருக்கும் இடையில் ஏற்பட்ட வாக்குவாதம் முற்றியதில் இந்த தாக்குதல் சம்பவம் நடந்துள்ளது.

தாக்குதலுக்கு உள்ளான பெண் காயமடைந்த நிலையில், வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளார்.

ஃஹுஜிரா என்ற பிரதேசத்தில் இந்தப் பெண்கள் தொழில் புரிந்து வந்துள்ளனர். சம்பவத்தில் உயிரிழந்த பெண் பிலிப்பைன்ஸ் நாட்டைச் சேர்ந்தவர் என ஐக்கிய அரபு இராஜ்ஜிய பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ற)

# சட்டவிரோத மணல் அகழ்வு: நால்வர் கைது



அம்பாறை, ஜூலை 13

சட்டவிரோதமாக ஆற்றுமணல் அகழ்வில் ஈடுபட்டதாகக் கூறப்படும் நான்கு பேர் அம்பாறை, திருக்கோவில் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட காஞ்சிரம்குடா பகுதியில் நேற்றுமுன்தினம் கைதுசெய்யப்பட்டதுடன், இவர்களிடமிருந்து மணலுடன் இரண்டு உழவு இயந்திரங்களையும் கைப்பற்றியதாகவும் திருக்கோவில் பொலிஸார் தெரிவித்தனர்.

இவ்வாறிருக்க கடந்த வெள் ளிக்கிழமையும் சட்டவிரோதமாக மணல் அகழ்ந்ததாக கூறப்படும் இருவரை கைதுசெய்ததுடன், உழவு இயந்திரமொன்றையும் கைப்பற்றியதாகவும் பொலிஸார் கூறினர். (ற)

# 50 ஆயிரம் ரூபா பிணையில் இஸ்ரேல் பிரஜைகள் விடுவிப்பு

அம்பாறை, ஜூலை 13

அம்பாறை அறுகம்பை கடலோரத்தில் புத்தரின் உருவம் பொறிக்கப்பட்டிருந்த தரைவிரிப்பில் அமர்ந்திருந்தார்கள் என்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட இஸ்ரேலியப் பிரஜைகள் இருவரும் ஐம்பதாயிரம் ரூபா ரொக்கப் பிணையில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை விடுவிக்கப்பட்டுள்ளதாக பொத்துவில் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இவர்கள் மீதான வழக்கு விசாரணை இன்று இடம்பெறவுள்ளது.

கடந்த வெள்ளிக்கிழமை இரவு கைது செய்யப்பட்ட இந்த இஸ்ரேலியப் பிரஜைகள் இருவரும் சனிக்கிழமை பொத்துவில் பதில் நீதிபதி முன்னிலையில் முற்படுத்தப்பட்டபோது 50 ஆயிரம் ரூபா ரொக்கப் பிணையில் விடுவிக்கப்பட்டதோடு வழக்கு விசாரணை இன்று திங்கட்கிழமை வரை ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

இந்த இரு இஸ்ரேலியப் பிரஜைகளும் சுற்றுலா நோக்கமாக கடந்த 4ஆம் திகதி இந்தியாவிருந்து இலங்கைக்கு வந்து, மறுநாள் 5ஆம் திகதி அறுகம்பைக்கு சென்றிருந்தனர்.

இதன் போது பௌத்த மதத்திற்கும் புத்த பெருமானுக்கும் அவமானத்தை ஏற்படுத்தும் வகையில் இவர்கள் நடந்து கொண்டதாக பொலிஸாரால் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளதாக தெரியவந்துள்ளது.

இஸ்ரேலிய பிரஜைகள் பொலிஸ் விசாரணைகளின் போது இது தண்டனைக்குரிய குற்றம் என தாங்கள் அறிந்திருக்கவில்லை என தெரிவித்துள்ளனர்.

இந்தியாவிற்கு சுற்றுலா சென்றிருந்தவேளை அங்கேயே அந்த விரிப்பை தாங்கள் கொள்வனவு செய்ததாக இஸ்ரேலிய பிரஜைகள் தமது வாக்கு மூலத்தில் தெரிவித்துள்ளனர். (ற)



நல்லூர் பிரதேசசபை புதிதாகக் கொள்வனவு செய்யப்பட்ட காணியில் விளையாட்டு மைதானத்தை கடந்த புதன்கிழமை நல்லூர் பிரதேசசபைத் தலைவர் ப.வசந்தகுமார் திறந்து வைத்தார். அன்றைய தினம் மைதானத்தில் நல்லூர் பிரதேசசபை உத்தியோகத்தர் குழுவுக்கும் கொக்குவில் விளையாட்டுக் கழகத்துக்குமிடையில் சினேகபூர்வ மென் பந்துக் கிரிக்கெட் போட்டியும் இடம்பெற்றது. நல்லூர் பிரதேசசபை உறுப்பினர்கள், உத்தியோகத்தர்கள், விளையாட்டுத்துறை அதிகாரிகள், விளையாட்டுக் கழகங்களின் பிரதிநிதிகள் இந்த நிகழ்வில் கலந்துகொண்டனர். (ற-7)

# மஹிந்தவுக்கு வேட்புமனு வழங்கி புண்ணியம் தேடினார் மைத்திரி

## நிஷாந்த முத்துஹெட்டிகம தெரிவிப்பு



கொழும்பு, ஜூலை 13
முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு வேட்புமனு வழங்கியதன் ஊடாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பெரிய அளவிலான புண்ணியம் ஒன்றைச் செய்துள்ளார் என முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் நிஷாந்த முத்துஹெட்டிகம தெரிவித்துள்ளார்.

காலி பிரதேசத்தில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு குறிப் பிட்டுள்ளார்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, பிறந்த நாளில் இருந்து செய்த புண்ணியங்களை விடவும் பெரிய புண்ணியம் மஹிந்த ராஜபக்ஷவுக்கு வேட்பு மனு வழங்கியதென அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

மஹிந்தவுக்கு வேட்பு மனு வழங்காமல் இந்த பிரச்சினையை தொடர்ந்து கொண்டு சென்றிருந்தால் இன்னும் 20 ஆண்டுகள் நாங்கள் எதிர்கட்சியிலேயே இருந்திருக்க வேண்டிய நிலைமை வந்திருக்கும் என அவர் மேலும் கூறியுள்ளார். (ற)

# ஐ.ம.சு. கூட்டமைப்பில் இ.தொ.காவினர் போட்டி



கொழும்பு, ஜூலை 13
இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் வேட்பாளர்கள், ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பில் வெற்றிலை சின்னத்தில் போட்டியிடும் முகமாக நுவரெலியா மாவட்ட வேட்புமனுவில் கையெழுத்திட்டுள்ளனர்.

நேற்றுப் பிற்பகல் கையெழுத்திடும் நிகழ்வு ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு தலைமையகத்தில் இடம் பெற்றது.

இதன்படி இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொது செயலாளர் ஆறுமுகன் தொண்டமான், கட்சியின் தலைவர் முத்து சிவலிங்கம், இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் உப தலைவி அனுஷியா சிவராஜா ஆகியோர் நுவரெலியா மாவட்ட வேட்புமனுவில் கையெழுத்திட்டு உள்ளார்கள். (ற)





# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா

**மேடம்:** பேச்சில் அதிருப்தி கலந்திருக்கும். குடும்பத்தினர் பாசத்துடன் நடந்து கொள்வார். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சிக்கான புதிய வாய்ப்பு கிடைக்கும். பணக்கடனில் ஒரு பகுதியை செலுத்துவீர்கள்.

**இடபம்:** எதிர்கால வாழ்வு சிறக்கப் பாடுபடுவீர்கள். பெரிய வர்களின் ஆசியும், வழிகாட்டுதலும் கிடைக்கும். தொழில் வளர்ச்சியின் இலக்குத் திட்டமிட்டபடி நிறைவேறும். இலாபம் உயரும். புத்திரர் விரும்பியதை வாங்கித் தருவீர்கள்.

**மிதுனம்**: சுய தேவை நல்லமுறையில் நிறைவேறும். தொழில், வியாபாரத்தில் உழைப்புக்கேற்ப இலாபம் கிடைக்கும். முக்கிய செலவுக்குச் சேமிப்பைப் பயன்படுத்துவீர்கள். வாகனப் பயணத்தில் கவனம் தேவை.

**கடகம்**: மனம், உடலில் புத்துணர்வு மேலோங்கும். புதிய முயற்சியில் ஈடுபட்டு வெற்றி காண்பீர்கள். தொழில், வியாபாரத்தில் வருமானம் அதிகரிக்கும். பூர்வீக சொத்துப் பிரச்னை நல்லமுறையில் தீரும்.

**சிங்கம்**: பிறருக்கு உதவும் எண்ணம் உண்டாகும். தொழில், வியாபாரத்தில் தடை விலகி ஆதாயம் உயரும். வீட்டை அழகுபடுத்த அலங்காரப் பொருள்கள் வாங்குவீர்கள். பிள்ளைகளின் செயல்பாட்டால் பெருமை உண்டாகும்.

**கன்னி**: நண்பர்களின் உதவி தக்க சமயத்தில் கிடைக்கும். தொழில், வியாபாரத்தில் நல்ல முன்னேற்றம் ஏற்படும். விருந்தினர் வருகையால் பணச்செலவு ஏற்படலாம். குடும்பத்தினர் ஆதரவு, மனதுக்கு நம்பிக்கை தரும்.

**துலாம்**: எதிலும் நிதானத்தைப் பின்பற்றுவது நல்லது. மனைவியின் செயல்பாடு நிம்மதிக்கு வழிவகுக்கும். தொழில், வியாபாரத்தில் முயற்சிக்கேற்ப வருமானம் கிடைக்கும். விலை உயர்ந்த பொருள்களை இரவல் வாங்கக் கூடாது.

**விருச்சிகம்**: பொது விடயங்களில் ஆர்வமுடன் ஈடுபடுவீர்கள். இஷ்ட தெய்வ வழிபாடு மனதுக்கு மகிழ்ச்சி தரும். தொழில், வியாபாரத்தில் எதிர்பார்த்த வளர்ச்சி உண்டாகும்.

**தனுசு**: இனிமையாகப் பேசி, பிறர் மனதில் இடம் பெறுவீர்கள். பணிகள் அனைத்தும் எளிதில் நிறைவேறும். தொழில், வியாபாரத்தில் இலாபம் பன்மடங்கு உயரும். இல்லறத் துணை விரும்பியதை வாங்கித் தருவீர்கள்.

**மகரம்**: மறைமுக எதிரியை இனம் கண்டு ஒதுங்குவீர்கள். தொழில், வியாபாரத்தில் கடின உழைப்புத் தேவைப்படும். இலாபம் சுமாராக இருக்கும். பிள்ளைகளின் செயல்பாடு மனதுக்கு நிம்மதியளிக்கும்.

**கும்பம்**: பொது விடயங்களில் அக்கறை கொள்வீர்கள். தொழில், வியாபாரத்தில் உழைப்புக்கேற்ப ஆதாயம் கிடைக்கும். உடல்நலனில் அக்கறை கொள்வது நல்லது. எதிர்பார்த்த நல்லசெய்தி வீடு தேடி வரும்.

**மீனம்**: சாதுரியமாகச் செயல்பட்டு நன்மை காண்பீர்கள். உறவினர் மத்தியில் செல்வாக்கு உண்டாகும். தொழில், வியாபார வளர்ச்சி திருப்திகரமாகும். பிள்ளைகளின் நலனில் அக்கறை ஏற்படும்.

# விஜய் ரசிகர்களுக்கு விருந்தளித்த பாகுபலி




ராஜமௌலி இயக்கத்தில் பிரபாஸ், ராணா, அனுஷ்கா, தமன்னா, ரம்யா கிருஷ்ணன், சத்யராஜ், நாசர், அர்ச்சனா உள்ளிட்ட பலர் நடிப்பில் தமிழ், தெலுங்கு, இந்தி, மலையாளம் என்று நான்கு மொழிகளில் பிரம்மாண்டமாக வெளியாகியுள்ள படம் பாகுபலி. தெரிந்த கதைதான் என்றாலும், பிரம்மாண்டமான உருவாக்கம், காட்சியமைப்பு ஆகியனவற்றால் அனைத்துத் தரப்பு மக்களிடமும் பாராட்டுகளைப் பெற்று வருகிறது.

இந்தப் படம் ஓடும் திரையரங்குகளில் விஜய் ரசிகர்களுக்கு எதிர்பாராத விருந்து கிடைத்துள்ளது. விஜய்யின் 58 ஆவது படமாக சிம்புதேவன் இயக்கத்தில், விஜய், ஹன்சிகா, ஸ்ருதிஹாசன், ஸ்ரீதேவி, சுதீப், என பலரும் நடித்துவரும் புலி படத்தின் டீஸர் பாகுபலி வெளியாகியுள்ள திரையரங்குகளில் திரையிடப்பட்டது.

பாகுபலி படமும் அரசர் காலக் கதை என்பதுடன், போர்க் காட்சிகளும் என இருப்பதால், மற்ற சினிமா ரசிகர்களுக்கும் பாகுபலி படத்தைக் கண்டு தங்களை இன்னும் தயார்ப்படுத்திக் கொள்ள ஒரு வாய்ப்பாகவே புலி டீஸர் அமைந்தது. மேலும் சின்னத் திரையில் யூடியூப், அல்லது தொலைக்காட்சிகளில் மட்டுமே காணக் கிடைத்த புலி டீஸர் பெரிய திரையில் ஒளிபரப்பானவுடன் ரசிகர்கள் ஆரவாரம் செய்து கொண்டாடினர்.

# கொஞ்சம் சிரிங்க பாஸ்...

டார்லிங்... என்னை மன்னிச்சிடுங்க! என்னை மறந்துடுங்க! எனக்கு வேற ஒரு பையனோட கல்யாணம் நிச்சயம் ஆகிடுச்சு...



எனக்குத் தெரியும்! எப்படி..? இனிமேல் நம்ம காதலுக்கு எங்க அக்கா இடைஞ்சலா இருக்க மாட்டான்னு உன் தங்கச்சி ஏற்கனவே சொல்லிட்டா...!

**நீதிபதி:** நீ செய்த திருட்டுக்கு என்ன தண்டனை தெரியுமா?

**குற்றவாளி:** நான் என் திருட்டுத் தொழில ராஜினாமா பண்ணிடறேன் எசமான்!

**நீதிபதி:** என்ன சொல்லுறாய் ?

**குற்றவாளி:** என்ன எசமான், எல்லாரும் தப்பு செஞ்சா, ராஜினாமாதானே செய்றாங்க!



# பணத் திமிர்

சீனாவில் உள்ள 70 பணக்காரர்களின் பிள்ளைகள் ஒருவருக்கு ஒருவர் போட்டி போட்டு கொண்டு அவர்கள், பெரிய பணக் காரர்கள் என்பதை நிரூபித்துக் கொள்வதற்காக பணத்தை எரித்து மற்றும் நாசம் செய்து அதனை புகைப் படம் எடுத்து இணையத்தில் வெளியிட்டுள்ளனர். இவ்வாறு பெரும் தொகையான பணத்தை நாசமாக்கியமைக்கு எதிர்ப்பு தெரிவித்து சீன அரசு இவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுத்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.


குறித்த இளைஞர் யுவதிகளை சமூக சேவையில் ஈடுபடுத்துவதற்கு சீன அரசு முடிவு செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# பிரமிக்க வைத்த மம்மி

500 வருடத்துக்கு முந்தைய பெண் மம்மி ஆர்ஜென்டினாவின் லூலைலிகோ என்ற எரிமலை பகுதியில் ஒரு குகையில் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. இந்தப் பெண் மம்மி உயிர்த்தியாகம் செய்த ஒரு பெண்ணின் மம்மியாகும். இதில் ஆச்சரியம் என்னவென்றால் இதைப் பார்த்தால் இது 500 வருடத்துக்கு முன் இறந்து போன பெண்ணின் மம்மியாக தெரியவில்லை. கடந்த வாரம் இறந்து போன ஒரு பெண்ணைபோல மம்மி உருவம் மெருகு குலையாமல் உள்ளது. மம்மியைப் பார்க்கும் போது பெண் உயிருடன் இருப்பது போல் ஒரு தோற்றம் உள்ளது. அது கை ஊன்றி இருக்கும் விதத்தைப் பார்க்க ஆச்சரியமாக உள்ளது.

இந்த மம்மி தொல்பொருள் ஆய்வாளர் ஜோகன் ரெயின் கார்டு குழு மூலம் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. பண்டைய காலங்களில் கபகோச்சா என்ற திருவிழாவின் மூலம் குழந்தைகளைத் தேர்வு செய்து உயிர்த்தியாகம் செய்யும் திருவிழா நடந்துள்ளது. இந்தப் விழாவின் மூலம் உயிர்தியாகத்துக்கு தேர்வு செய்யப்படுவோர் இன்கா குழந்தைகள் என அழைக்கபட்டனர்.

ஆனால் மம்மியை ஆய்வு செய்த வைத்தியர்கள் இறக்கும் போது இந்த பெண் நுரையீரல் நோயினால் அவதிப்பட்டதாகக் கூறி உள்ளனர். இந்த மம்மி மூலம் பழங்காலத்தில் எந்த விதமான நோய்கள் இருந்தன என்பதை அறியலாம் என்று வைத்தியர்கள் கூறி உள்ளனர்.



## விழுமிய கல்வி நூல்கள் வழங்கல்

தென்மராட்சி, ஜூலை 13
தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளுக்கு மாகாண கல்வி அமைச்சால் வழங்கப்பட்ட ஆரம்பப் பிரிவு வகுப்புகளுக்கான விழுமியக் கல்வி நூல்கள் வழங்கப்படவுள்ளன. அத்துடன் பாடசாலைகளில் உள்ள நூலகங்களுக்கும் இந்த நூல் வழங்கப்படவுள்ளன.
ஆரம்பப் பிரிவில் உள்ள ஒவ்வொரு வகுப்புக்கும் ஒரு நூல் என்ற ரீதியிலும் நூலகத்துக்கு ஒரு நூலும் வழங்கப்படவுள்ளதால் பாடசாலைக்குத் தேவையான நூல்களின் விவரங்கள் அடங்கிய பெறுதற் கட்டளையை இன்று பி.ப. 2 மணிக்குவலயக்களஞ்சியப்பொறுப்பாளரிடம் சமர்ப்பித்து நூல்களைப் பெற்றக் கொள்ளமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் சு.கிருஷ்ணகுமார் அறிவித்துள்ளார்.
தென்மராட்சி கல்வி வலய ஆரம்பப் பிரிவினரால் தயாரிக்கப்பட்டு 'வேள்ட் விஷன்' நிறுவன அனுசரணையுடன் தயாரிக்கப்பட்ட விழுமியக் கல்வி நூல் மாகாண கல்வி அமைச்சரின் வேண்டுகோளின் பிரகாரம் வேள்ட் விஷன் நிறுவனத்தினரால் மறுபதிப்பு செய்யப்பட்ட 5 ஆயிரம் நூல்கள் அண்மையில் சாவகச்சேரியில் வெளியிடப்பட்டு மாகாணத்தில் உள்ள அனைத்து பாடசாலைகளுக்கும் வழங்கப்பட்டுள்ளன. (ற-9)




உலக உணவுத்திட்டம் நடத்திய சித்திரப்போட்டியில் உடுப்பிட்டி அமெரிக்கன்மிஷன் கல்லூரி மாணவன் நவரட்ணம் ஆர்த்திகன் தேசிய மட்டத்தில் முதலிடம் பெற்றுள்ளார். அத்துடன் இவர் உலகளாவிய ரீதியில் பதினைந்தாவது இடத்தைப்பெற்றுள்ளார். இவருக்கான சான்றிதழும் பரிசுத்தொகையும் இன்று கொழும்பிலிருந்து வந்த அதிகாரிகளால் அமெரிக்கன்மிஷன் கல்லூரியில் வைத்து வழங்கப்பட்டது. (ற)

## போதையில் இடையூறு; மூவருக்கு சமூகப்பணி

தென்மராட்சி, ஜூலை 13
மதுபோதையில் பொதுமக்களுக்கு இடையூறு விளைவிக்கும் வகையில் செயற்பட்ட மூவரை சமூகப் பணியில் ஈடுபடுத்துமாறு கடந்த வியாழக்கிழமை சாவகச்சேரி நீதிமன்று உத்தரவிட்டுள்ளது.
பொலிஸாரால் தாக்கல் செய்யப் பட்ட வழக்குகளை விசாரித்த நீதிவான் மூவரையும் தலா 80 மணித்தியாலங்கள் சமூகப் பணியில் ஈடுபடுத்த நீதிமன்ற சமுதாயம்சார் சீர்திருத்தப் பிரிவில் ஒப்படைக்குமாறு பொலிஸாருக்கு உத்தரவிட்டதுடன் தலா 25 ஆயிரம் ரூபா பெறுமதியான ஆட்பிணையில் செல்ல அனுமதித்தார். (ற-9)

**HOME VISIT CLASSES**
ACCOUNTING - A/L, O/L
ENG, TAMIL MEDIUM
ENGLISH LANG - ANY GRADE
077 331 6402
(61597) (45.3.7)

**ICT - Personal Classes**
Gr.10, Gr. 11
"Ontarget Tm"
System Analyst
Call:0776277189
(Thirunelverly)
(61834) (3.5)

## இலவசக் கண்காட்சி

கொழும்பு, ஜூலை 13
இலங்கை உணவு பதப்படுத்தல் சம்மேளனத்தினால் ஒழுங்கமைக்கப்பட்ட 'விவசாயம் தொடக்கம் சமையலறை' வரை என்ற தொனிப்பொருளில் புறோபூட் புறோ பக் 2015 கண்காட்சி அடுத்த மாதம் 7,8,9 ஆம் திகதிகளில் கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டப கண்காட்சிக் கூடத்தில் இடம்பெறவுள்ளது.
இந்தக் கண்காட்சி நிகழ்வில் வடபகுதியைச் சேர்ந்த சிறிய மற்றும் நடுத்தர உணவுஉற்பத்தி நிறுவனங்கள் தங்களது உணவு பொருள் தயாரிப்புக்களை காட்சிப்படுத்துவதற்கான ஏற்பாடுகளை இலங்கை உணவு உற்பத்தியாளர் சங்கம் மற்றும் GIZ நிறுவனம் மேற்கொண்டுள்ளது.
கண்காட்சியில் பங்குகொள்ள விரும்பும் சிறிய மற்றும் நடுத்தர உணவு உற்பத்தி நிறுவனங்கள் தங்களுடைய விவரங்கள் உள்ளடங்கிய விண்ணப்பங்களை எதிர்வரும் 17ஆம் திகதி வெள்ளிக்கிழமைக்கு முன்னர் செயற்றிட்ட முகாமையாளர், இலங்கை உணவு உற்பத்தியாளர் சங்கம் 1,1/11 அன்டர்சன் வீதி, கொழும்பு5 என்ற முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு ஏற்பாட்டாளர்கள் கேட்டுக்கொண்டுள்ளனர். (ற-ரி)

**காணியுடன் வீடு விற்பனைக்கு**
137/3 (501 - புதிய இலக்கம்), ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணத்தில் ஒரு பரப்புக் காணியுடன் புதிய வீடு விற்பனைக்கு உண்டு.
(தரகர் தேவையில்லை)
தொடர்பு: 076 698 1759, 075 854 4358
077 271 9162
Note: - உதயன் இணையத் தளத்திலும் இதனைப் பார்வையிடலாம்.
(61898)(9.3.7)

## மாணவியைக் காணவில்லை என முறைப்பாடு

அம்பாறை, ஜூலை 13
அம்பாறை மாவட்டத்தில் சாதாரண தரத்தில் கற்று வந்த மாணவி ஒருவரை நேற்றுமுன்தினம் சனிக்கிழமை முதல் காணவில்லை என கல்முனை பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.
கல்முனை பெரிய நீலாவணையில் வசிக்கும் 16 வயதுடைய மாணவி ஒருவரே காணாமற் போயுள்ளார் என்று பொலிஸ் முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.
பெற்றோர் இல்லாத இந்த மாணவி தனது பாட்டியின் பராமரிப்பிலேயே இருந்து வந்த நிலையில், கடந்த சனிக்கிழமை பிற்பகல் 2.30 மணியளவில் காணாமற் போயுள்ளதாக முறைப்பாட்டில் தெரிவித்துள்ளார். இச்சம்பவம் குறித்து கல்முனை பொலிஸார் தீவிர விசாரணைகளை மேற்கொண்டு வருவதாக தெரிவிக்கப்படுகின்றது. (ற)

## தொண்டர் ஆசிரியருக்கு கலந்துரையாடல்

கிளிநொச்சி, ஜூலை 13
கிளிநொச்சி மாவட்ட தொண்டராசிரியராகக் கடமையாற்றிக் கொண்டிருக்கும் ஆசிரியர்களுக்கான விசேட கலந்துரையாடல் ஒன்று நாளை கிளிநொச்சி எடிசன் கல்வி நிலையத்தில் இடம்பெற உள்ளதாகவும், எனவே கிளிநொச்சி மாவட்ட தொண்டராசிரியர்கள் தவறாது இதில் கலந்து கொள்ளுமாறும் கிளிநொச்சி மாவட்ட தொண்டராசிரியர் சங்க தலைவர் கேட்டுக் கொண்டுள்ளார்.
எந்தவிதமான பாகுபாடுகளும் இன்றி தொண்டராசிரியர்களாக தொடர் பணியில் ஈடுபடும் அனைத்து தொண்டராசிரியர்களையும் இந்த கலந்துரையாடலில் ஈடுபடுமாறும் எதிர்கால திட்டங்கள் , நியமனங்கள் சம்பந்தமான தீர்க்கமான முடிவுகள் எடுக்கப்பட உள்ளதாகவும் தொண்டராசிரியர் சங்க தலைவர் இ.ஜெயராஜ் தெரிவித்துள்ளார். (ற-21)

**பதவி வெற்றிடம்**
**இயந்திர இயக்குநர்கள் (Machine Operators)**
யாழ் மாவட்டத்தில் இயந்திர இயக்குநர்களுக்கான பதவி வெற்றிடங்களுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.
ஆண்கள் மட்டும் விண்ணப்பிக்கலாம். அனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
விண்ணப்ப முடிவு திகதி : 25.07.2015
விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி :
விளம்பர இல, 5070, மே/பா உதயன் விளம்பர பணிமனை,
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

**மாடி வீடும் காணியும் விற்பனைக்கு**
உரும்பிராயில், இலக்கம் 6, பழைய டிஸ்பென்சரி ஒழுங்கையில் ஏழுஅரை(7½) பரப்புக் காணியில் அமைந்துள்ள மூன்று அறைகள், பெரிய சமையலறை, இரண்டு வரவேற்பறைகள், (HALL), STORE ROOM, இரண்டு குளியல் அறைகள், இரண்டு கழிவறைகள், மோட்டர் பூட்டிய கிணறு, மூன்று பக்க மதிலுடன் மாடி வீடு விற்பனைக்கு உண்டு.
தொடர்பு : ராசா : 021 223 1148
இளங்கோ :004 474 174 44910

## கத்திக்குத்தில் தமிழர்கள் காயம்: ஆஸியில் சம்பவம்

ஆஸ்ரேலியாவில் நேற்றிரவு நடந்த கைகலப்பு கத்திக்குத்தாக மாறியதில் இரு தமிழர்கள் காயமடைந்து வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.
சிட்னி வென்வர்த்துவில் என்னும் இடத்தில் நடந்த இந்தச் சம்பவத்தில் ஒருவரின் நிலைமை கவலைக்கிடமாக உள்ளதாக வைத்தியசாலை தகவல்கள் தெரிவிக்கின்றன.
இந்த சம்பவம் தொடர்பாக 6 பேர் கைது செய்யப்பட்டுள்ளதுடன், மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.
இதேவேளை– அதிக மதுபோதையில் வாகனத்தை செலுத்திய நிலையில், வாகனம் வேக கட்டுப்பாடை இழந்து வீடொன்றுக்குள் புகுந்துள்ளது. இந்தச் சம்பவம் தொடர்பாக ஒரு தமிழர் கைது செய்யப்பட்டுள்ள துடன் வீடு முற்றாக சேதமடைந்துள்ளது.(ற)

## கர்ப்பிணியும் மகனும் கிணற்றில் சடலமாக மீட்பு

குருநாகல், ஜூலை 13
குருநாகல், நிகதலுபொத பகுதியில் 39 வயதுடைய கர்ப்பிணியொரு வரையும் அவரது 9 வயது மகனையும், கிணறு ஒன்றில் இருந்து நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை சடலங்களாக மீட்கப்பட்டதாக வாரிய பொல பொலிஸார் தெரிவித்தனர்.



பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற தகவலையடுத்து சம்பவ இடத்துக்கு விரைந்த பொலிஸார் சடலங்களை மீட்டுள்ளதுடன் இதுதொடர்பில் விசாரணைகளையும் மேற்கொண்டு வருகின்றனர். குடும்பச் சண்டை காரணமாக இவ்விருவரும் தற்கொலை செய்துகொண் டிருக்கலாம் என சந்தேகிப்பதாகவும் சடலங்கள் தற்போது, உடற்கூற்றுப் பரிசோதனைக்காக வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். (ற)


**BA, Bcom, BBA (MANAGEMENT) (MEDIUM TAMIL)**
இலங்கை தென்கிழக்கு பல்கலைக்கழகம் ஒலுவில் (வெளிவாரி)
பல்கலைக்கழகத்தினால் மேற்குறிப்பிட்ட பட்ட நெறிகளுக்கு இரண்டு வாரகாலம் பதிவுகள் நீடிக்கப்பட்டுள்ளன.
* A/L இல் கலை,வர்த்தகம்,கணிதம்,விஞ்ஞானம் ஆகிய பிரிவுகளில் மூன்று பாடம் சித்தி அடைந்தவர்கள் விண்ணப்பிக்கமுடியும்.
* A/L இல் 2014 ஆம் ஆண்டு பரீட்சை எடுத்தவர்களும் இதற்கு முன்னர் பரீட்சை எடுத்தவர்களும் பதிவினை மேற்கொள்ள முடியும்.
* இப்பட்ட நெறிகளுக்கான கால ஆண்டு மூன்றாகும்
* பதிவுகள் யாவும் தென்கிழக்கு பல்கலைக்கழகத்தினால் அங்கீகரிக்கப்பட்ட எமது நிறுவனத்தினூடாக நடைபெறுகின்றன.
* கருத்தரங்குகள்,பரீட்சைகள் யாவும் தென்கிழக்கு பல்கலைக் கழகத்தினால் அங்கீகரிக்கப்பட்ட ஒரே நிறுவனமாகிய புதிய உயர்கல்லூரி வளாகத்தில் நடைபெறும்.
* பதிவு முடிவு திகதி - 20.07.2015
* பிரிவு II இற்குரிய விரிவுரைகள் ஆரம்பம்:11.07.2015 காலை 8மணி
விவரங்களுக்கு -S. அருள்நங்கை
புதிய உயர் கல்லூரி
ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணம்.
T.P.021 222 8148,077 846 9721, 077 801 9187, 021 568 9477
(சி. 16688) (45,3)

## மரண அறிவித்தல்

### கணபதிப்பிள்ளை மாதவராஜா

(இளைப்பாறிய நீர்ப்பாசனத் திணைக்கள உத்தியோகத்தர்)

மண்ணில் 07 . 10 . 1949



விண்ணில் 11 . 07 . 2015

வவுனியாவைப் பிறப்பிடமாகவும் இல:- 65/3, அண்ணாவீதி, தோணிக்கல், வவுனியாவை வசிப்பிடமாகவும் கொண்ட கணபதிப்பிள்ளை மாதவராஜா 11.07.2015 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை- இராசமணி தம்பதியரின் அன்பு மகனும் இந்திராதேவியின் அன்புக் கணவரும், சுதாத்மிகா(வவுனியா),சுஜாதா(ஜேர்மனி),சுதாகரன் (லண்டன்) , சுபாஜினி (ஓமந்தை மகாவித்தியாலய ஆசிரியர்), சுஜாந்தன் (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் கருணாகரன்(ஜேர்மனி), காருண்யா (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனும் சோமசுந்தரம் (இளைப்பாறிய நீர்ப்பாசனத்திணைக்கள உத்தியோகத்தர்) ,செல்வரட்ணம் (இளைப்பாறிய தேசிய வீடமைப்பு அதிகாரசபை உத்தியோகத்தர்), இந்திராணி,பரமேஸ்வரன்(பிரான்ஸ்), காலஞ்சென்றவர்களான அன்னலட்சுமி, பாக்கியலட்சுமி ஆகியோரின் அருமைச்சகோதரனும் லக்சன், சுவேதன்,சுரேன் ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(13.07.2015 )திங்கட் கிழமை மாலை 4.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக தோணிக்கல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.


65/3, அண்ணா வீதி,
தோணிக்கல், வவுனியா.

தகவல்:
குடும்பத்தினர்.
024 222 6265

## மரண அறிவித்தல்

### சொக்கலிங்கம் விஜயராஜா(சொக்கன்/டானியல்)

பிறப்பு 07 . 02 . 1960



இறப்பு 11 . 07 . 2015

பருத்தித்துறை, ஐயனார் வீதியைப் பிறப்பிடமாகவும் தற்போது லண்டனில் வசித்து வந்தவருமான சொக்கலிங்கம் விஜயராஜா (சொக்கன்/டானியல்) 11.07.2015 சனிக்கிழமை லண்டனில் காலமானார்.

அன்னார் சொக்கலிங்கம் - மகேஸ்வரி தம்பதியினரின் புதல்வரும் வேணியின் (லண்டன்) அன்புக் கணவரும் வருணா (லண்டன்), வைதேகன்(வர்சன் - லண்டன்) ஆகியோரின் தந்தையும் தவராசா (ஓய்வுபெற்ற பொறியியலாளர் வீதி அபிவிருத்தி அதிகார திணைக்களம், நியூவே நிறுவனத் தலைவர்) ஜெயராஜா (நியூவே - முகாமையாளர்), ரமணி (பிரான்ஸ்), வளர்மதி (ஆசிரியை - புற்றளை மகாவித்தியாலயம் கற்கோவளம் மெ.மி.த.க பாடசாலை) ஆகியோரின் சகோதரரும் ராஜினி, ஜெயலட்சுமி (தாதிய உத்தியோகத்தர் - கிளிநொச்சி வைத்தியசாலை), சிவராசா (பிரான்ஸ் - நியூவே நிறுவனப் பங்காளர்), புஸ்பராசா(ஆசிரியர் - ஹாட்லிக் கல்லூரி) ஆகியோரின் மைத்துனரும் ரஜீசன்(நியூவே நிறுவனப் பங்காளரும் முகாமைத்துவப் பணிப்பாளரும்), தனஞ்சன்(பொறியியலாளர் - சிங்கப்பூர் - நியூவே நிறுவனப்பங்காளர்) ஆகியோரின் சிறியதந்தையும் சிவதனுஸ் (பிரான்ஸ்), சிவரமணன் (பிரான்ஸ்), சிவஜெனன்(பிரான்ஸ்), கனிமருதன் (ஹாட்லிக் கல்லூரி), புகழினி (மெதடிஸ்தமிஷன் பெண்கள் பாடசாலை) ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரது மரணச்சடங்கு பற்றிய விவரம் பின்னர் அறியத் தரப்படும்.இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

ஐயனார் வீதி,
பருத்தித்துறை.

தகவல்
குடும்பத்தினர்.
021 226 4403


(17920)(3.9)

# 30 ஆவது வருட நிறைவில் பிரதேச அபிவிருத்தி வங்கி



கொழும்பு,ஜூலை 13
கிராமிய மக்களின் பொருளாதார அபிவிருத்தி முன்னேற்றத்தை நோக்காகக் கொண்டு ஆரம்பிக்கப்பட்ட பிரதேச அபிவிருத்தி வங்கி 30 ஆவது வருடத்தில் இன்று காலடி வைத்துள்ளது. இது வரை நாடளாவிய ரீதியில் பல்லாயிரக்கணக்கான சுய தொழில் முயற்சியாளர்களை உருவாக்கிய பெருமையை இந்த வங்கி பெற்றுள்ளது என்று பிரதேச அபிவிருத்தி வங்கியின் தலைவர் பிரசன்ன பிரேமரத்ன தெரிவித்துள்ளார்.

பிரதேச அவிவிருத்தி வங்கியின் 30 ஆவது வருட நிறைவை முன் னிட்டு அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் குறிப்பிடப் பட் டுள்ளதாவது:



நாட்டின் விசேட தேவைகளை நிறைவேற்றும் நோக்கில் பிரதேச அபிவிருத்தி வங்கி கடந்த 1985 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. நாடளாவிய ரீதியில் 17 மாவட்டங் களில் விஸ்தரிக்கப்பட்டுள்ள இந்த வங்கியின் சேவைகள் 265 கிளைகள் ஊடாக இடம்பெற்று வருகின்றன. இரண் டாயிரத்து 340 ஊழியர் களைக் கொண்டு வங்கியின் சேவைகள் கிராமிய மட்டத்தில் பொருளாதார மேம் பாட்டுக்கு சிறந்த பங்காற்றி வருகிறது.

வழமையான வங்கிகளின் முறைகளுடன் தொடர்புறாது, கிராமிய மக்களின் சிக்கனம், நிதி குறித்த அறிவை மேம் படுத்தி சொந்தக் கால்களில் நிற்பதற்கு பொருளாதார மற்றும் சமூக ரீதியாகச் செயற்படுத்தி கிராமிய பொருளாதாரத்தை வலுவூட்டுதல் மூலம் நாட்டின் மொத்த பொருளாதாரத்தையும் மேம்படுத்தி வருகிறது.

தற்போதுள்ள 265 கிளைகளில் 6 மில்லியனுக்கும் மேற்பட்ட வாடிக்கையாளர்களை இந்த வங்கி தன்னகத்தே கொண்டுள்ளது. கெகுளு கணக்கு, யொவுன் கணக்கு, லியசவிய கணக்கு சுபமங்களம் கணக்கு, திவிநெகும கணக்கு, சிரேஷ்ட பிரஜைகள் கணக்கு, சாதரண சேமிப்புக் கணக்கு மற்றும் நிலையான வைப்புக் கணக்கு உட்பட சேமிப்புத் திட்டங்கள் பலவற்றையும் இந்த வங்கி கொண்டுள்ளது.

கைத்தொழில், மீன்பிடி, மிருகவளர்ப்பு, வர்த்தக வாணிபம், உட்பட சிறிய நடுத்தரவிலான நிதித் தேவைப்பாடுகளுக்கு ஏற்ப கடனுதவிகளையும் இந்த வங்கி வழங்கி வருகிறது.


விசேடமாக சுயதொழில் உதவிக் குழுக்கள் முறைமை ஊடாக பெண்களின் சேமிப்பை ஊக்குவிக்கும் சுயதொழில் முயற்சிக்கான கடனுதவிகள் படிப்படியாக வழங்கப்பட்டு வருகின்றன எனக் குறிப்பிட் டுள்ளார்.

இந்த வங்கியின் 30 ஆவது வருட நிறைவை முன்னிட்டு அபிமானத்துக்குரிய முப்பது வருடங்கள் எனும் தொணிப்பொருளிலில் கிளைகள், மற்றும் பிராந்திய அலுவலகங்கள் தோறும் இன்று திங்கட் கிழமை பல்வேறு செயற்திட்டங்கள் முன்னெடுக் கப்படவுள்ளன. அத்துடன் 25 வருடங்கள் வங்கிளில் சேவை புரிந்த ஊழியர்களும் கௌரவிக்கப் படவுள்ளனர்.

(ஐ)

## மரண அறிவித்தல்

### சிவபாலசிங்கம் சுகுணரஞ்சன்



இணுவிலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சிவபாலசிங்கம் சுகுணரஞ்சன் 10.07.2015 வெள்ளிக் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சிவபாலசிங்கம்(அதிபர்) - சரஸ்வதி(அதிபர்) தம்பதியினரின் அன்பு மகனும் கமலராணியின் அன்புக்கணவரும்ஜீவநந்தினி, பிரஜீவன்ராம் (யாழ் பல்கலைக்கழக மாணவன்) ஆகியோரின் அன்புத் தந்தையும் கோபிரமணனின் அன்பு மாமனாரும். சுகுணபரராஜன், சுகுணகபிலன், சுகுணநாவலன், சுகுணரஞ்சனா, சுகுணபாரதி காலஞ்சென்ற சுகுணஜீவன் ஆகியோரின் அன்புச் சகோதரனும் கணேந்திரராஜா, சிவபாலன், கல்பனா, மாலா, நோறா ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.07.2015) திங்கட்கிழமை காலை 09.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக பூவோடை இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

அறிவகம்
உடுவில் கிழக்கு, சுன்னாகம்.

தகவல்-
குடும்பத்தினர்.

# வீதிகளை புனரமைக்குமாறு சிவபுரம் மக்கள் கோரிக்கை

வவுனியா, ஜூலை 13

பரந்தன்சிவபுரம் கிராமத்தின் வீதிகள் நீண்ட காலமாகத் திருத்தியமைக்கப்படாது பழுதடைந்து காணப்படும் நிலையில் அந்த வீதிகளுக்குக் குறுக்காகப் பாலம் அமைப்பதெனக் கூறி ஆழமாக, அகலமாக வெட்டப்பட்ட வாய்க்கால் போன்ற குழிகளில் பாலம்(போக்கு) வைக்கப்படாத நிலையில் நீண்ட நாள்களாக விடப்பட்டுள்ளமையாலும் வீதிகளினூடாகப் போக்குவரத்துச் செய்பவர்கள் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றார்கள்.

கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள சிவபுரம் கிராமம் கிராமிய அபிவிருத்தித் திட்டங்கள் எதிலுமே இதுவரை உள்ளீர்க்கப்படாது புறக்கணிக்கப்பட்டே காணப்படுகிறது. சிவபுரம் கிராமத்திலுள்ள வீதிகள் எதுவுமே இதுவரை திருத்தியமைக்கப்படாது மிகமோசமாகப்பழுதடைந்த நிலையில் காணப்படுகிறது. இந்தக் கிராமத்தில் வசிக்கும் 320 குடும்பங்களும் மிகவும் மோசமான நிலையில் காணப்படும் வீதிகளாலேயே தினமும் போக்குவரத்துச் செய்கின்றார்கள்.

இதேபோன்று இந்தக் கிராமத்து வீதிகளுக்கு பாலம் போடவென கூறி வீதிகளின் குறுக்காக ஆழமாகவும் அகலமாகவும் வாய்க்காலாக வெட்டப்பட்ட குழிகளில் பாலம் எதுவும் போடப்படாத நிலையில் நீண்ட நாள்களாகக் காணப்படுகின்றது. அதனால் அந்தப் பகுதிகளால் போக்குவரத்துச் செய்யும் மக்கள் குழிகளுக்குள் இறங்கி விழுந்தெழும்பி சிரமப்படுவதை அவதானிக்க முடிகின்றது.

2012ஆம் ஆண்டு சிவபுரம் கிராமத்து வீதிகளைத் திருத்தியமைத்து உரிய இடங்களில் பாலம் (போக்கு) வைப்பதாகக் கூறி கிராமத்து மக்களைக் கொண்டு பீப்பிள் இன் நீட் என்னும் நிறுவனத்தால் வீதிகளின் குறுக்காக நீளத்துக்கு வெட்டப்பட்ட குழிகள் 2012ஆம் ஆண்டிலிருந்து இன்னும் பாலம் (போக்கு) வைக்கப்படாத நிலையில் குழிகள் தூர்ந்தது பாதி தூராதது பாதியாக தற்போதும் காணப்படுகின்றன. 2012 ஆம் ஆண்டு சிவபுரம் கிராம வீதிகளைத் திருத்தியமைப்பதற்கென ஒதுக்கப்பட்ட நிறுவனத்தின் நிதி பொறுப்பு வாய்ந்த அதிகாரிகளால் சிவபுரம் கிராமத்து வேலைகளை இடைநிறுத்திவிட்டு வேறு கிராமத்துக்கு மாற்றப்பட்டதாக மக்களால் கூறப்படுகின்றது.

தற்போதும் இந்தக் கிராம வீதிகளைத் திருத்தவென அரசால் பத்து லட்சம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளதாகக் கூறப்படுகின்ற போதிலும் வீதிக்குக் குறுக்காக வெட்டப்பட்டு நீண்ட நாள்கள் ஆகின்ற போதிலும் வேலைகள் இடைநிறுத்தப்பட்டுள்ளதை அவதானிக்கின்ற போது இந்த முறையும் 2012ஆம் ஆண்டு நடைபெற்றதைப் போல சிவபுரம் கிராம வீதிகள் திருத்தியமைப்புக்கான நிதி ஒதுக்கீடு என்று குறிப்பிடப்பட்டு இந்தக் கிராமத்தைப் புறக்கணித்து வேறுபடுத்தி விடுவதற்கான நிலைமைகளே உள்ளதாக பலராலும் கவலை தெரிவிக்கப்படுகிறது.

சிவபுரம் கிராமத்து மக்கள் அரசாலும் ஏனையோராலும் தொடர்ந்தும் ஏமாற்றப்பட்டு புறக்கணிக்கப்பட்டே வருவதை இந்தக் கிராமத்தை நேரடியாக அவதானிக்கும் போது நோக்கமுடிகின்றது.

சிவபுரம் கிராமத்து வீதிகளையும் திருத்தியமைக்க பொறுப்பு வாய்ந்த அதிகாரிகள் முன்வந்து உதவ வேண்டும் என இந்தக் கிராம மக்கள் நீண்டகாலமாகக் கோருகின்றனர்.(ற-426)

## மூக்குக் கண்ணாடி பெறுவோர் விவரம்

தென்மராட்சி, ஜூலை 13

சாவகச்சேரி சுகாதார மருத்துவ அதிகாரி பணிமனையில் ஹெல்ப் ஏஜ் நிறுவனத்தினரால் தென்மராட்சி பிரதேச மக்களுக்கு நடாத்தப்பட்ட கண் பரிசோதனையில் பார்வையில் குறைபாடு காணப்பட்டு மூக்குக் கண்ணாடிக்குத் தெரிவு செய்யப்பட்டவர்களில் மேலும் எட்டுப் பேருக்கான மூக்குக் கண்ணாடிகள் சுகாதார மருத்துவ அதிகாரி பணிமனைக்கு வந்துள்ளன.

பின்வரும் பயனாளிகள் நேரில் வருகைதந்து பெற்றுக் கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

எஸ்.இரத்தினம் சங்கத்தானை,
என்.கந்தசாமி வெள்ளாம்போக்கட்டி, கொடிகாமம்
எஸ்.ராசாத்தி கல்வயல், மட்டுவில்
ஆர்.நாகேஸ்வரி – கைதடி தெற்கு
புஸ்பலீலா நாவற்குளி தெற்கு
கே.இராசம்மா – கைதடி வடக்கு
ஸ்ரீ.செல்வராணி – தனங்களப்பு
ஏ.நாகம்மா – கச்சாய் வீதி கொடிகாமம்

கண் பரிசோதனையில் தெரிவு செய்யப்பட்ட ஒரு தொகுதியினருக்கான மூக்குக்கண்ணாடிகள் ஏற்கனவே சுகாதார மருத்துவ அதிகாரி பணிமனைக்கு அனுப்பப்பட்டு உரியவர்களிடம் ஒப்படைக்கப்பட்டன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற-9)

## சாரதி அனுமதி பத்திரம் இல்லாது வாகனம் ஓட்டியோருக்கு அபராதம்

தென்மராட்சி, ஜூலை 13

சாரத்திய அனுமதிப் பத்திரமில்லாத நபர்களுக்கு வாகனத்தை வழங்கிய வாகன உரிமையாளர்களுக்கு சாவகச்சேரி நீதிமன்றில் கடந்த வெள்ளிக்கிழமை தலா 3 ஆயிரம் ரூபா வீதம் அபராதம் விதிக்கப்பட்டது

கடந்த முதலாந் திகதி கொடிகாமம் பொலிஸார் வீதிச் சோதனைகளில் ஈடுபட்ட போது சாரத்திய அனுமதிப் பத்திரமின்றி உழவு இயந்திரம் செலுத்திய ஒருவரையும் சாரத்திய அனுமதிப் பத்திரமில்லாமலும் இலக்கத் தகடு இல்லாத நிலையிலும் உழவு இயந்திரம் செலுத்தி வந்த மற்றொருவரையும் பிடித்து அவர்கள் இருவருக்கு எதிராக சாவகச்சேரி நீதிமன்றில் வழக்குகள் தாக்கல் செய்தனர்.

இந்த வழக்குகள் விசாரணைக்கு எடுக்கப்பட்ட போது பயிற்சியில் ஈடுபட்ட வேளையில் பொலிஸாரால் பிடிக்கப்பட்டதாக தெரிவித்ததையடுத்து சாரத்திய அனுமதிப் பத்திரமின்றி வாகனம் செலுத்தியவருக்கு 3 ஆயிரம் ரூபாவும் சாரத்திய அனுமதிப் பத்திரம் மற்றும் வாகன இலக்கத் தகடு ஆகியவை இல்லாத நிலையில் வாகனம் செலுத்தியவருக்கு 7 ஆயிரம் ரூபாவும்அபராதம் விதிக்கப்பட்டன.

அத்துடன் சாரத்திய அனுமதிப் பத்திரம் இல்லாதவர்களுக்கு உழவு இயந்திரங்களை வழங்கிய வாகன உரிமையாளர்கள் நீதிமன்றுக்கு அழைக்கப்பட்டு எச்சரிக்கை செய்யப்பட்டதுடன் தலா 3 ஆயிரம் ரூபா அபராதமும் விதிக்கப்பட்டது. (ற-9)

# வருமானப் பரிசோதகர் வினைத்திறன் காண் பரீட்சை ஒத்திவைப்பு

தென்மராட்சி, ஜூலை 13

வட மாகாண பொதுச் சேவை ஆணைக்குழுவினால் உள்ளூராட்சி சபைகளில் கடமையாற்றும் வருமானப் பரிசோதகர்களுக்கு நடத்தவிருந்த வினைத்திறன்காண் பரீட்சை விண்ணப்ப முடிவு திகதி காலநீடிப்பு செய்யப்பட்டுள்ளது என்றும் விண்ணப்ப முடிவு திகதி பற்றிய விபரம் பின்னர் அறிவிப்பதாகவும் வடமாகாண பொதுச் சேவைகள் ஆணைக்குழுவின் செயலாளர் திருமதி ரூபிணி வரதலிங்கம் அறிவித்துள்ளனர்.

உள்ளூராட்சி சபைகளில் 2010ஆம் ஆண்டில் வருமானப் மேற்பார்வையாளர்களாக கடமையாற்றிய அனைத்து உத்தியோகத்தர்களையும் வருமானப் பரிசோதகர் தரம் 111 பதவிக்குள் உள்வாங்கியதுடன் வருமான மேற்பார்வையாளர் பதவிகளை வெறிதாக்கினர்.

இந்நிலையில் அண்மையில் வருமான பரிசோதகர் பதவியில் வகுப்பு 11, வகுப்பு 111 ஆகியவற்றில் உள்ள உத்தியோகத்தர்களுக்கான வினைத்திறன் காண் பரீட்சைக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டு ஜூலை 15 ஆம் திகதி விண்ணப்ப முடிவு திகதியென அறிவிக்கப்பட்டிருந்தது.

வருமானமேற்பார்வையாளர் சேவையில் பத்து வருடங்களுக்கு மேல் கடமையாற்றிய பலர் வருமான பரிசோதகர்களாக உள்வாங்கப்பட்ட போதிலும் அவர்களின் சேவை மூப்பின் அடிப்படையில் தரம் பிரிக்கப்படவில்லை. இதனால் குழப்பமடைந்த உத்தியோகத்தர்கள் உள்ளூராட்சி திணைக்களத்துடன் தொடர்பு கொண்டனர். இதனையடுத்து பரீட்சை நடாத்துவது தொடர்பாக காலநீடிப்பு செய்யப்பட்டதுடன் விண்ணப்ப முடிவு திகதி பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படுமென தெரிவிக்கப்பட்டது. (ற-9)


கர்நாடக இசை அரங்கு

வழங்குபவர்: பேராசிரியர், முனைவர் பிரமிலா குருமூர்த்தி
(இசைத்துறை சென்னைப்பல்கலைக்கழகம்)



வயலின் : - முதுகலைமாணி க. சுகபரன்
மிருதங்கம் : - கலாவித்தகர் நா.மாதவன்
கெஞ்சிரா : - கலைமாணி நா.சிவசுந்தர்சர்மா
முகர்சிங் : - கலாவித்தகர் சி.செந்தூரன்

இடம்: கலைத்தூது கலையரங்கம் திருமறைக்கலா மன்றம்
காலம்: 16.07.2015 வியாழக்கிழமை
(மாலை 05 மணி)

Note: தவிர்க்கமுடியாத காரணத்தால் திகதி மாற்றப்பட்டுள்ளது

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.
- நிகழ்ச்சி ஏற்பாட்டாளர்கள் -



யாழ்/மாவட்ட கைப்பணி அபிவிருத்திச் சங்கம்
கைப்பணியாளர் விவரம் திரட்டல்

யாழ்/மாவட்ட கைப்பணி அபிவிருத்திச் சங்கம் யாழ் மாவட்டத்திலுள்ள கைப்பணியாளர்களை இனங்கண்டு அவர்களின்திறன்களை வெளிக்கொணரும்நோக்கத்துடன் ஒரு விவரக் கொத்து ஒன்றை வெளியிட எண்ணியுள்ளோம். எனவே தற்பொழுது கைப்பணி-கைத்தொழிலில் ஈடுபட்டுக்கொண்டிருக்கும் கைப்பணியாளர்கள் பெயர் விவரங்கள் எமது விவரக்கொத்தில் இடம்பெற விருப்பமாக இருப்பின் கீழ்வரும் தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளுமாறு தயவுடன் கேட்டுக் கொள்கிறோம். அத்துடன் தங்கள் பிரதேசங்களில் உள்ள கைப்பணிக் கிராமங்கள், மற்றும் கைப்பணித்துறை சம்பந்தமான தகவல்களை எங்களுக்கு அறியத்தரும்படி கேட்டுக்கொள்கிறோம்.

தொடர்பு : யாழ் மாவட்டக் கைப்பணி அபிவிருத்திச் சங்கம்,
இல, 958/36, கே.கே.எஸ் வீதி,
யாழ்ப்பாணம்.
T.P : 077 640 4383,077 384 2191


## அறிவித்தல்

### தேர்தல்கள் திணைக்களம்
### பாராளுமன்றப் பொதுத்தேர்தல் - 2015

வாக்கெடுப்பு நிலையம் அமைந்திருக்கும் பிரதேசத்தில் நிகழும் நிலைமை காரணமாக அந்த வாக்கெடுப்பு நிலையத்திற்குச் சென்று வாக்களிக்க முடியாமல் போகுமென்ற நியாயமான அச்சத்தைக் கொண்டுள்ள வாக்காளர்களுக்கு வேறொரு வாக்கெடுப்பு நிலையத்தில் வாக்களிப்பதற்கான வசதிகளைப் பெற்றுக்கொள்வதற்கான விண்ணப்பப்பத்திரங்களைப் பொறுப்பேற்றல்
2015.07.14 ஆம் திகதி முடிவடையுமென்பதை அறிவித்தல்

01. 2015 பாராளுமன்றப் பொதுத் தேர்தலின்போது தமது வாக்கெடுப்பு நிலையம் அமைந்துள்ள பிரதேசத்தில் நிகழும் நிலைமை காரணமாக வாக்கெடுப்பு நிலையத்திற்குச் சென்று வாக்களிக்க முடியாமல் போகுமென்ற நியாயமான அச்சத்தைக் கொண்டுள்ள வாக்காளர்களுக்கு வேறொரு வாக்கெடுப்பு நிலையத்தில் வாக்களிப்பதற்கான வசதிகளைப் பெற்றுக்கொள்வதற்கான விண்ணப்பப்படிவங்களைக் கையளிக்கக் கூடியதான காலஎல்லை 2015.07.10 ஆம் திகதியுடன் முடிவடைவதற்கு நியமித்திருந்த போதிலும் பொதுமக்கள், சிவில் அமைப்புக்கள் மற்றும் அரசியல் கட்சிகளால் விடுக்கப்பட்ட கோரிக்கைகளைக் கவனத்திற்கொண்டதன் பின்னர் விண்ணப்பப்பத்திரங்களை ஏற்றுக்கொள்ளும் காலஎல்லை 2015.07.14 ஆம் திகதிவரை நீடிக்கப்பட்டுள்ளது.

02. விண்ணப்பப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித்தினம், எக்காரணம் கொண்டும் மீண்டும் நீடிக்கப்படமாட்டாது. எனவே இதுவரையில் அதற்காக விண்ணப்பிக்க முடியாமல் போன மேற்படி தகைமைகளைப் பூர்த்திசெய்த மற்றும் 2014 தேருநர் இடாப்பில் பெயர்களைப் பதிவுசெய்த வாக்காளர்கள் தவறின்றி பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப்பத்திரங்களை தாங்கள் தற்போது வதியும் பிரிவின் கிராம அலுவலரது சான்றிதழுடன் 2015.07.14 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் இராஜகிரியவில் அமைந்துள்ள தேர்தல்கள் செயலகத்திற்கு அல்லது அண்மையிலுள்ள மாவட்டத் தேர்தல்கள் அலுவலகத்திற்குக் கையளிப்பதற்கு நடவடிக்கையெடுக்குமாறு தயவன்புடன் அறியத் தருகின்றேன்.

03. 2015.07.14 ஆம் திகதிக்கு பின்னர் அஞ்சல் மூலமாகவோ அல்லது நேரடியாகவோ சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பப்பத்திரங்கள் எவ்வித காரணத்தைக் கொண்டும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாதென்பதுடன் அவை தாமதமாகிக் கிடைத்த விண்ணப்பப்பத்திரங்கள் எனக் கருதி நிராகரிக்கப்படும்.

மஹிந்த தேசப்பிரிய,
தேர்தல்கள் ஆணையாளர்.

2015.07.11 ஆம் திகதி
இராஜகிரியவில் அமைந்துள்ள தேர்தல்கள் செயலகத்திலிருந்து

(சி.17822)
(45.3.7)

## தலைக்கவச கண்ணாடிகளை வீசியெறியும் பொதுமக்கள்

தென்மராட்சி, ஜூலை 13

தென்மராட்சி பிரதேச வீதிகளில் தலைக்கவசத்தில் பொருத்தப்பட்டிருந்த கறுப்புக் கண்ணாடிகள் வீசியெறியப்பட்டுக் காணப்படுகின்றன.

மோட்டார் சைக்கிள் செலுத்தும் போது அணியும் தலைக்கவசத்தில் கறுப்புக்கண்ணாடி பொருத்தியிருப்பது தடை செய்யப்பட்டுள்ளது. இதனையடுத்து பொலிஸாரால் கறுப்புக் கண்ணாடி பொருத்திய நிலையில் தலைக்கவசம் அணிந்திருந்தவர்கள் மீது வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டு வருகின்றது. கறுப்புக் கண்ணாடி பொருத்தப்பட்ட தலைக்கவசம் அணிந்து மோட்டார் சைக்கிள் செலுத்தினால் முதல் தடவை ஆயிரம் ரூபாவும், இரண்டாம் தடவை 2 ஆயிரம் ரூபாவும், மூன்றாம் தடவை 3 ஆயிரம் ரூபாவும், அதற்கு மேல் இவ்வாறான தவறு செய்தால் சாரதிய அனுமதிப் பத்திரம் இரத்துச் செய்யப்படுமென்பதால் தலைக்கவசத்தில் பொருத்தப்பட்டுள்ள கறுப்புக் கண்ணாடிகளை வீதிகளில் எறிந்துவிட்டுச் செல்வதாகத் தெரிவிக்கப்பட்டது. போக்குவரத்துப் பொலிஸார் அண்மைக் காலமாக அனைத்து வீதிகளிலும் சோதனைகளில் ஈடுபடுவதால் பொலிஸாரைக் கண்டதும் கறுப்புக் கண்ணாடியை கழற்றி எறிந்து விட்டுச் செல்கின்றனர் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

சாவகச்சேரி நீதிமன்றில் கடந்த முதலாம் திகதிக்குப் பின்னர் கறுப்புக் கண்ணாடி பொருத்திய தவைக்கவசம் அணிந்த நிலையில் மோட்டார் சைக்கிள் செலுத்திய 26 பேருக்கு எதிராக சாவகச்சேரி நீதிமன்றில் வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டு அனைவருக்கும் தலா ஆயிரம் ரூபா வீதம் அபராதம் விதிக்கப்பட்டது.

(ற-9)


### முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர் சுப்பிரமணியம் தற்பரன்

திதி : துவாதசி



மண்ணில் 13.06.1992

விண்ணில் 24.06.2014

அச்சுவேலி வடக்கு, அச்சுவேலியைப் பிறப்பிடமாகவும் அச்சுவேலி தெற்கு பயிற்றோலையை வசிப்பிடமாகவும் கொண்ட அமரர் சுப்பிரமணியம் தற்பரனின் முதலாம் ஆண்டு நினைவு அஞ்சலிக் கிரியை இன்று (13.07.2015) திங்கட்கிழமை இல்லத்தில் நடைபெறவுள்ளதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மாசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத்தொடர்ந்து இடம்பெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

அச்சுவேலி தெற்கு,
பயிற்றோலை.

குடும்பத்தினர்.
T.P : 076 609 3937


## மட்டுவில் தெற்கு சரஸ்வதி வித்தியாலய மாணவர் நாடாளுமன்ற ஆரம்ப நிகழ்வு






தென்மராட்சி, ஜூலை 13

மட்டுவில்தெற்கு சரஸ்வதி வித்தியாலய மாணவர் நாடாளுமன்ற ஆரம்ப நிகழ்வும் பிரதமர், அமைச்சர்கள், சபாநாயகர், அவைத் தலைவர் மற்றம் உறுப்பினர்கள் பதவியேற்பும் கன்னி அமர்வும் கடந்த வெள்ளிக்கிழமை வித்தியாலய மண்டபத்தில் இடம்பெற்றது.

வித்தியாலய அதிபர் செ.பேரின்பநாதன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக தென்மராட்சி பிரதேச பிரதி திட்டமிடல் பணிப்பாளர் திருமதி இ. ரகுநாதனும் சிறப்பு விருந்தினராக தென்மராட்சி கல்வி வலய கல்வி அபிவிருத்தி பிரதிக் கல்விப் பணிப்பாளர் சு.சுந்தரசிவமும், கௌரவ விருந்தினராக வித்தியாலய பழைய மாணவியும் யாழ்.பல்கலைக் கழக வருகைதரு விரிவுரையாளருமான செல்வி அம்பிகை குமாரசாமியும் கலந்து கொண்டனர்.

நாடாளுமன்ற மரபுரிமைகளின்படி புதிய நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு பதவிப்பிரமாணமும் இரகசியக்காப்புப் பிரமாணமும், சத்தியப்பிரமாணமும் முதலில் இடம்பெற்றது. அமர்வுக்கு வித்தியாலய அதிபர் செ.பேரின்பநாதன் நாடாளுமன்ற செயலாளர் நாயகமாக பணியாற்றி முதலில் சபாநாயகராக தெரிவு செய்யப்பட்ட செ.ஜெனார்த்தனனுக்கு பதவிப்பிரமாணம் செய்து வைத்தார்.

இதனையடுத்து சபாநாயகர் முன்னிலையில் பிரதமராக கு.லக்ஸனும் அவைத் தலைவராக கெ.சஞ்சித்தும் பிரதிச் சபாநாயகராக த.கிருஸிகாவும் பிரதி அவைத்தலைவராக இ.மிதுலாவும் பத்து அமைச்சர்களும் பத்து பிரதி அமைச்சர்களும் சத்தியப் பிரமாணம் செய்து கொண்டனர். அதனையடுத்து ஏனைய நாடாளுமன்ற உறுப்பினர்களும் சபாநாயகர் முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்து கொண்டனர்.



சிறிதுநேர இடைவெளியின் பின் மாணவர் நாடாளுமன்றின் கன்னி அமர்வுக்கு நாடாளுமன்ற பாரம்பரியங்களுக்கேற்ற வகையில் படைக்கல சேவிதர்கள் சகிதம் பிரதமர் தலைமையிலான அனைத்து அமைச்சர்கள் பிரதி அமைச்சர்கள் உறுப்பினர்கள் ஆகியோர் மன்றுக்கு அழைத்து வரப்பட்டனர்.

அவ்வேளையில் நாடாளுமன்ற உறுப்பினர்களின் பெற்றோர், உறவினர்கள் மலர்ச்செண்டுகள் கொடுத்து வரவேற்றனர். பின்னர் ஒவ்வொரு உறுப்பினரும் தனது சேவைக்காலப் பகுதியில் பாடசாலையில் காணப்படும் தேவைகள் மாணவர் தொடர்பான பிரச்சினைகள் போன்றவற்றை தீர்ப்பதற்கு எடுக்கும் நடவடிக்கைகள் தொடர்பாக கன்னியுரை நிகழ்த்தினர். இதன் பின்னர் நிகழ்வில் பார்வையாளர்களாக கலந்து கொண்ட விருந்தினர்கள் உரையாற்றியுள்ளனர்.

(ற-9)


### இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

திருமதி பத்மதேவி மகாலிங்கம்

வியாபாரி மூலையைப் பிறப்பிடமாகவும், திருகோணமலை, இந்தியா – மதுரையை வசிப்பிடமாகவும் கொண்டிருந்தவர்



தோற்றம் 29.06.1948

மறைவு 13.07.2013

எங்கள் இனிய தெய்வமே
இப்பாரினில் இருந்து
நீங்கள் பிரிந்து இரண்டாண்டுகள் ஆகிறது
எங்கள் உயிர் இருக்கும்வரை
எங்களுடன் நீங்கள்
என்றும் இருக்கின்றீர்கள் அம்மா!
எங்கள் வாழ்வில்
நீங்கள் ஏற்றிவைத்த தீபம்
என்றும் பிரகாசமாக
ஒளிவீசிக் கொண்டே
இருக்கும் அம்மா!

உங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம்வல்ல இறைவனை வேண்டி நிற்கும்.

பிள்ளைகள்:
420,வடக்கு குறுக்குத்தெரு,
அண்ணாநகர், மதுரை 20 - இந்தியா.
0091 995 253 8558

கணவர்: K.மகாலிங்கம்,
கனகம் மில், 108, திருஞானசம்பந்தர் வீதி,
திருகோணமலை & கொழும்பு.
077 759 9161

பிள்ளைகள்:
G. விஜிதா (MBA) இந்தியா
G. தயாநிதி (MBM,UK)
M. கோபிகுமார் (Mcom, UK)
M. நிஷாந்தகுமார் (BE,UAE)
M. டீபகரன் (BE இந்தியா)

மருமக்கள்:
Dr.S. ஞானமோகன் (MBBS)
M. கஜேந்திரன் (BE,UK)
M. ரம்மியா (BBA, UK)
N. கிருஷாந்தி (MSC, UAE)
D. அருள்மொழி (BE இந்தியா)

அன்புள்ள கணவர், மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

(60239) (45.6)


## வேகக் கட்டுப்பாட்டைச் செயற்படுத்த 89 மார்க்கங்களில் அறிவிப்பு பலகை

கொழும்பு, ஜூலை 13

வேகக்கட்டுப்பாட்டுச் சட்டத்தை மீளவும் செயற்படுத்துவது தொடர்பாக 89 பிரதான மார்க்கங்களில் வேக அளவுகளைக் குறிப்பிடும் அறிவிப்பு பலகைகள் வீதி அபிவிருத்தி அதிகார சபையின் ஒத்துழைப்புடன் நடப்பட்டிருப்பதாக மோட்டார் வாகனப் பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

2005 ஆண்டில் வீதிகளில் வேகக்கட்டுப்பாட்டு அறிவித்தல் பலகைகள் நடப்படாதிருந்ததன் காரணமாக அதிகரித்த வேகத்தில் மோட்டார் வாகனங்களைச் செலுத்திச் செல்வோருக்கு எதிராக வழக்குகளைத் தொடுப்பது 10 ஆண்டுகளாக இடைநிறுத்தி வைக்கப்பட்டிருந்ததாக மோட்டார் வாகனப் பொலிஸ் தலைமையகத்தின் உயரதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

தற்போது 89 வேகக் கட்டுப்பாட்டு அறிவித்தல் பலகைகள் நடப்பட்டுள்ள பிரதான வீதிகளில் நகரங்களை அண்டிப் பயணிக்க வேண்டியுள்ள வேகத்தில் அளவு மணித்தியாலத்துக்கு 50 கிலோ மீற்றர்கள் எனவும், நகர்ப்புறங்கள் அல்லாத வீதிகளில் மணித்தியாலத்துக்கு 70 கிலோ மீற்றர் வேகத்தில் பயணிக்கத்தக்கதாக அந்த வேகக் கட்டுப்பாட்டு அளவுகள் விதிக்கப்பட்டுள்ளன.

மேலும் வேகக் கட்டுப்பாட்டு அறிவிப்புப் பலகைகள் நடப்பட்டுள்ள மார்க்கங்களில் அந்தச் சட்டத்தை மீளவும் முறைப்படுத்தி அந்த விதியை மீறிச்செல்லும் சாரதிகளுக்கு எதிராக சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு சட்டமா அதிபர் திணைக்களத்திடம் மோட்டார் வாகனப் பொலிஸ் தலைமையகம் பணிப்புரையைக் கோரியிருப்பதாகவும், இந்த ஆண்டில் கடந்த 9 ஆம் திகதி வரையான காலத்தில் பாரதூரமான வாகன விபத்துக்களில் 1,494 பேர் மரணமடைந்திருப்பதோடு அந்த எண்ணிக்கையில் 519 பேரும் மோட்டார் சைக்கிளோட்டிகளும், அவர்களுக்குப் பின்னால் இருந்து பயணித்தவர்களுமேயாவர் எனவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

தற்போது இந்த வேகக் கட்டுப்பாட்டு அறிவித்தல் பலகைகள் நடப்பட்டுள்ள பிரதேசங்களிடையே கொழும்பு காலியூடாக வெல்லவாய, கண்டி வீதி புத்தளம், ஹய்லேவல் வீதி கொழும்பிலிருந்து இரத்தினபுரி ஊடாக வெல்லவாய மரதங்கடவல, மட்டக்களப்பு, கண்டி, மாவித்தகம, குருநாகல் ஊடாக புத்தளம், மதவாச்சி, மன்னார் ஆகிய பிரதானமான மார்க்கங்கள் உரித்தாகின்றன.

ஆனாலும் கொழும்பு பிரதேசத்திலும் மற்றும் மாகாணங்களின் வீதி அபிவிருத்தி அதிகார சபைக்குச் சொந்தமான சீ வகையைச் சேர்ந்த கிராமங்களுக்கிடையில் உள்ள மார்க்கங்களில் இதுவரையிலும் வேகக் கட்டுப்பாட்டு அறிவிப்புப் பலகைகள் நடப்படாதிருப்பதானது மோட்டார் வாகனப் பொலிஸாருக்கு பிரச்சினைக்குரியதாகி இருப்பதாகவும் அந்த அதிகாரி தெரிவித்தார். இந்த விதமாக வேக அளவுமானிகளை கைகளில் வைத்திராத மோட்டார் வாகனப் பொலிஸார் அதைப் பெற்றுப் பயன்படுத்துவதற்கு சட்டமா அதிபர் திணைக்களத்தின் பணிப்புரையை எதிர்பார்த்துக் காத்திருப்பதாகவும் அந்த அதிகாரி மேலும் தெரிவித்தார்.


(ற-22)

## சக்தியை வழங்கும் டெட்ரிஸ் ஹேம்

சமகாலத்தில் பல வகையான கணினி ஹேம்கள் அறிமுகம் செய்யப்பட்டிருந்த நிலையிலும் டெட்ரிஸ் எனும் ஹேம் ஆனது பல வருடங்களுக்கு முன்னிருந்தே ஹேம் பிரியர்கள் மத்தியில் பலத்த வரவேற்பைப் பெற்றிருந்தது. இந்தக் ஹேமை உயர் வேகத்தில் விளையாடி வருவதனால் திடீரென ஏற்படும் அதிர்ச்சிகளைத் தாங் கும் வல்லமையைப் பெற முடியும் என ஐக்கிய இராச்சியத்தைச் சேர்ந்த ஆய்வாளர்கள் தெரிவித் துள்ளனர்.

இதேவேளை– இதற்கு முன்னர் மேற்கொண்ட ஆய்வொன்றின் படி டெட்ரிஸ் ஹேமை தொடர்ச்சியாக நான்கு மணித்தியாலங்கள்வரைவிளையாடும்பொழுது பழைய நினைவுகளை மூளையில் இருந்து அழிக்கின்றது எனத் தெரிவிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.






## உலக சாதனை படைத்த Honda

உலகளவில் மக்களின் நன் நம்பிக்கையைப் வென்ற மோட்டார் வாகன நிறுவனங்களுள் ஒன்றாக விளங்கும் Honda நிறுவனத்தினால், புதிதாக வடிவமைக்கப்பட்ட கார், எரிபொருள் பாவனையில் உலக சாதனை படைத்துள்ளது.

எரிபொருள் தாங்கியில் முற்றாக எரிபொருள் நிரப்பப்பட்ட நிலையில் கடந்த மாதம் முதலாம் திகதி இதற்கான சோதனை நிகழ்த்தப்பட்ட போது 24 ஐரோப்பிய நாடுகளின் ஊடாக சுமார் 8,287 மைல் தூரம் பயணம் செய்துள்ளது. அதாவது சராசரியாக ஒரு கலன் எரிபொருளில் 100.31 மைல்கள் தூரம் பயணித்துள்ளது.

**இதன் பின்னர் ஆரம்பிக்கப்பட்ட இடத்தை ஜூன் மாதம் 24 ஆம் திகதி மீண்டும் வந்தடைந்துள்ளது. இதனை ஒரு புதிய கின்னஸ் சாதனையாகப் பதிவு செய்ய ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ள நிலையில் எரிபொருள்சிக்கனம்கொண்ட இந்தக்கார்கள் எதிர்காலத்தில் சந்தையில் பலத்த வரவேற்பைப் பெறும் என எதிர்பார்க்கப்படுகின்றது.**

இணையத் தேடலுக்குப் பயன்படுத்தப்படும் மென்பொருளான இணைய உலாவிகளில் (Browsers) கூகுள் குரோமுக்கு அடுத்தபடியாக அதிகளவில் பயன்படுத்தப்படுவது Mozilla Firefox இணைய உலாவி ஆகும்.

இந்த உலாவியில் பல பதிப்புக்கள் வெளியிடப்பட்டுள்ள நிலையில் தற்போது இதன் பயனர் இடைமுகமானது மீண்டும் வடிவமைவமைக்கவுள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளது.

இந்தத் தகவலை Mozilla நிறுவனத்தின் பொறியியல் பகுதி இயக்குநரான Dave Camp உத்தி யோகபூர்வமாகஅறிவித்துள்ளார். இதன் போது XML User Interface Language (XUL) எனும் இணைய மொழி பயன்படுத்தப்படவுள்ளது. எனினும் இந்த மொழியானது புதிதாக அறிமுகம் செய்யப்பட்டு சில காலமே ஆன நிலையில் இதன் பயன்பாடு வெற்றியளிக்குமா என்பதை பொறுத் திருந்தே பார்க்க வேண்டும்.



## Mozilla Firefox பயனர் இடைமுகத்தில் மாற்றம்




கல்விச்சுற்றுலாவை மேற்கொண்டிருந்த கிளிநொச்சி இராமநாதபுரம் மகாவித்தியாலய மாணவர்கள் உதயன் பணிமனைக்கு வந்த பத்திரிகையின் செயற்பாடுகளையும் பார்வையிட்டுள்ளனர். (ற–10)

## அகுரஸ்ஸ தோட்டத்தில் மெதுவாக பணி செய்யும் போராட்டம் பாதிப்பு

ஹற்றன், ஜூலை 13

அகுரஸ்ஸ உளந்தாவ தோட்ட பகுதியில் உள்ள பிரதான பிரிவு தோட்டத் தொழிலாளர்கள் மெதுவாகப் பணியைத் தொடர முடியாத நிலை காணப்படுவதாக சுட்டிக் காட்டப்படுகின்றது.

கடந்த மூன்று மாதங்களாக தோட்டத் தொழிலாளர்கள் 1000 ரூபா சம்பளம் கோரிக்கையை முன் வைத்து வருகின்றனர். தொழிற் சங்கங்களால் பேச்சுவார்த்தை முன்னெடுக்கப்பட்டு வருகின்ற போதிலும் அதற்கான தீர்வு எட்டப்படாததால் நாட்டின் பல பகுதிகளிலும் தொழிலாளர்கள் ஆர்ப்பாட்டங்கள் மற்றும் மெதுவாக வேலை செய்யும் பணியை முன்னெடுத்து வருகின்றனர்.

இறப்பர்தோட்டத் தொழிலாளர் கள் வேலை நிறுத்தப் போராட்டத் தில் ஈடுபட்டு வருகின்றனர். மெது வாக பணியில் ஈடுபடுவதால் தோட்ட நிர்வாகத்துக்கு நட்டம் ஏற்படுவதாகக் கூறி நிர்வாகிகள் சேவைக்கு வரவில்லை. இதனால் தொழிலாளர்களுக்கு மெதுவாக பணியை தொடர முடியாத நிலை காணப்பட்டது.

காலையில் சேகரித்த இறப்பர் பாலை அளவையிடவும், சேகரிக்கவும் எந்த அதிகாரியும் வரவில்லை என பிரதேசவாசிகள் தெரிவிக்கின்றனர். இதனால் இவர்கள் இறப்பர் பாலை தொட்டியில் ஊற்றிவிட்டு வந்துவிட்டதாகத் தெரிவித்தனர். (ற)

## துர்நாற்றம் வீசும் வடிகால்கள்

### புத்தளத்தில் அவலம்



கொழும்பு, ஜூலை 13

புத்தளம் மாவட்டத்தின் கொத்தாந் தீவுப் பகுதியில் உள்ள வடிகால்கள் துப்புரவு செய்யப்படாமல் துர் நாற்றம் வீசுவதாக அங்குள்ள மக்கள் தெரிவிக்கின்றனர்.

குறித்த வடிகால்களினுள் குப்பை கூளங்களும், கழிவு நீரும் தேங்கி துர்நாற்றம் வீசுவதுடன், நுளம்புத் தொல்லைகளும் அதிகரித்துள்ளதாக மக்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

மேலும், துர்நாற்றம் காரணமாக அங்குள்ள மக்கள் பெரும் அசௌகரியங்களுக்கு முகம் கொடுத்து வருகின்றனர்.

குறித்த பகுதியில் வடிகால்கள் துப்புரவு செய்யப்படாமல் இருப்பதன் காரணமாக மலேரியா, டெங்கு போன்ற நோய்கள் பரவ வாய்ப்புகள் காணப்படுவதாகவும் அச்சம் வெளியிட்டுள்ளனர்.

இந்நிலையில், வடிகால்களை துப்புரவு செய்வதற்கு கல்பிட்டி பிரதேச சபை நடவடிக்கை எடுக்க வேண்டும் என மக்கள் வேண்டுக்கோள் விடுத்துள்ளனர். (ற)




இரண்டாம் உலகப் போர் காலத்து யூத இனப்படுகொலைக்குப் பின்னர் ஐரோப்பாவில் நடைபெற்ற மிக மோசமான ஸ்ரெப்ரனீட்சா படுகொலைகளின் இருபதாவது ஆண்டு நினைவு நிகழ்வு போஸ்னியாவில் உள்ள ஸ்ரெப்ரனீட்சா நகரில் நடைபெற்றது.

## இங்கிலாந்தில் 'வாட்ஸ்அப்' தடை

லண்டன், ஜூலை 13

இங்கிலாந்தில் விரைவில் வாட்ஸ் அப் வலைத்தளத்துக்கு தடை விதிக்கப்படலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. மறைமுகக் குறியீடுகள் கொண்ட குறுஞ்செய்திகளை அனுப்பத் தடைவிதிக்கும் புதிய சட்டத்தை இங்கிலாந்து பிரதமர் டேவிட் கமரூன் விரைவில் நிறை வேற்றுவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இங்கிலாந்தில் அண்மையில் அதிகரித்து வரும் பயங்கரவாத அச்சுறுத்தலையடுத்து, செய்திகளை சமூக வலைத்தளங்கள் மூலம் பதிவு செய்து கண்காணிக்க வகை செய்யும் சட்டப் பிரேரணை தயாரிக்கப்பட்டுள்ளது. இணையத் தொடர்பு வசதிகளே பயங்கரவாதிகள் எளிதாகத் தகவல் பறிமாறிக்கொள்ள ஏதுவாக இருப்பதாகவும், எனவே இங்கிலாந்து புலனாய்வுத்துறை இந்த இணையத் தொடர்புகளுக்கு கடுமையான கட்டுப்பாடுகளைக் கொண்டு வரும் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது.

இந்தச் சட்டம் நடைமுறைக்கு வந்தால் ஸ்நாப் சாட், அப்பிள் நிறுவனத்தின் ஐமெசேஜ், வாட்ஸ்–அப் போன்றவைகளுக்கு இங்கிலாந்தில் நிரந்தரமாகத் தடை விதிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. தகவல்கள் அனைத்தும் ஓராண்டுக்கு சேமிக்கப்பட்டு ஆய்வுக்குட்படுத்தப்படும். இந்தப் புதிய சட்டம் மக்களின் தனிப்பட்ட உரிமையை பாதிக்கும் என்ற சர்ச்சையும் எழுந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)



# வெளிநாட்டவர்களுக்கு தஞ்சம் அளிப்பதற்கு பிரான்ஸ் அரசு முடிவு

பாரிஸ்,ஜூலை 13

ஐக்கிய நாடுகள் சபையின் அறிவுறுத்தலை ஏற்ற பிரான்ஸ் அரசு, வெளிநாடுகளைச் சேர்ந்த 9 ஆயிரத்து 100 பேருக்கு பிரான்ஸில் தஞ்சம் அளிக்க முடிவு செய்துள்ளதாக அந்த நாட்டின் உள்துறை அமைச்சர் அறிவித்துள்ளார்.

ஐக்கிய நாடுகளின் சபையில் உறுப்பினர்களாக உள்ள நாடுகளின் தலைவர்கள் அடுத்த 2 வருடங்களில் சுமார் 60 ஆயிரம் வெளிநாட்டவர்களுக்கு தன்னார்வ அடிப்படையில் தஞ்சம் அளிக்கக் கடந்த மாதம் ஒப்புக் கொண்டனர்.

உள்நாட்டுப் போரில் பாதிக்கப்பட்ட வட ஆபிரிக்கா மற்றும் மத்திய ஆசிய நாடுகளைச் சேர்ந்த எரித்தியா மற்றும் சிரியாவைச் சேர்ந்த 60 ஆயிரம் பேருக்கு ஐரோப்பியாவில் உள்ள 28 நாடுகளிலும் அடைக்கலம் அளிக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

பிரான்ஸ் அரசு வெளிநாட்டு நபர்களை அன்புடன் வரவேற்க உள்ளதாகவும், அவர்களுக்கு அகதிகள் உரிமை அளிக்க உள்ளதாகவும் உள்துறை அமைச்சர் தெரிவித்துள்ளார்.



ஐக்கிய நாடுகளின் அறிவுறுத்தலின் அடிப்படையில், அடுத்த 2 வருடங்களில்; பிரான்ஸ் அரசு 9 ஆயிரத்து 100 பேருக்கும், ஜேர்மனி அரசு 12 ஆயிரத்து 100 பேருக்கும் அடைக்கலம் அளிக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

நடப்பாண்டில் மட்டும் ஐரோப்பாவில் குடியேற ஆபிரிக்க நாடுகளைச் சேர்ந்த சுமார் ஒரு லட்சத்து 40 ஆயிரம் மக்கள் மத்திய தரைக் கடலைக் கடந்து இத்தாலி, கிரீஸ், ஹங்கேரி உள்ளிட்ட நாடுகளில் முகாம்கள் அமைத்துத் தங்கியுள்ளனர்.

இந்த மக்களை ஒருங்கிணைத்து ஒவ்வொரு ஐரோப்பிய நாட்டின் பொருளாதாரம் மற்றும் வேலை வாய்ப்புகளின் அடிப்படையில் அதிக எண்ணிக்கையில் அடைக்கலம் அளிக்க வேண்டும் என ஐ.நா. சபை அறிவுறுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## மாமனார் கொடுமை மருமகன் தற்கொலை

புதுடில்லி,ஜூலை 13

ஹரியானா மாநிலத்தில் மாமனார் மற்றும் மைத்துனர்களின் கொடுமை தாங்க முடியாமல் நபர் ஒருவர் தற்கொலை செய்துள்ள சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

ஹரியானாவில் பரிதாபாத் மாவட்டத்தைச் சேர்ந்த அமீர் என்பவர், மாமனார் மற்றும் மைத்துனர்களின் கொடுமை தாங்க முடியாமல் தற்கொலை செய்துள்ளார்.

அவர் தற்கொலை செய்வதற்கு முன்னர் எழுதிய கடிதத்தில், தன்னையும் தனது குடும்பத்தாரையும் மாமனாரும், நான்கு மைத்துனர்களும் கொன்று விடுவார்கள் எனச் சந்தேகிப்பதாகவும், அதனால் இந்த முடிவெடுத்ததாகவும் குறிப்பிட்டுள்ளார்.

அந்தக் கடிதத்தை அடிப்படையாக வைத்து, அமீரின் தந்தையார் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு வழங்கியுள்ளார். (ஐ)

## சாவுத் தண்டனையை ஒழிக்க வேண்டும்

### அப்துல்கலாம் பரிந்துரை



புதுடில்லி,ஜூலை 13

இந்தியாவில் சாவுத் தண்டனையை அறவே ஒழிக்க வேண்டும் என்று முன்னாள் ஜனாதிபதி அப்துல் கலாம் பரிந்துரைத்துள்ளார்.

உலகின் பல நாடுகள் சாவுத் தண்டனையை முற்றிலும் தடை செய்துள்ள நிலையில், இந்தியா உள்ளிட்ட நாடுகளில் தற்போதும் சாவுத் தண்டனை நடைமுறையில் உள்ளது.

கடந்த 15 வருடங்களில் இந்திய நீதிமன்றங்களால் ஆயிரத்து 52 பேருக்கு சாவுத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

அதில் மிக அதிகபட்சமாக 2007 ஆம் ஆண்டு 186 பேருக்கு சாவுத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளதாகப் புள்ளி விவரங்கள் தெரிவித்துள்ளன.


அதிக அளவில் சாவுத்தண்டனை விதிக்கப்பட்ட மாநிலங்களில் உத்திர பிரதேசம் முதல் இடத்திலும், பீகார் 2 ஆவது இடத்திலும், மத்திய பிரதேசம் 3 ஆவது இடத்திலும் உள்ளன. 2013 ஆம் ஆண்டு நிலைவரப்படி சாவுத் தண்டனை அளித்த மாநிலங்களில் தமிழகம் 3 ஆவது இடத்தில் உள்ளது.

இந்த நிலையில் இந்திய முன்னாள் ஜனாதிபதி சட்ட ஆணையத்துக்கு பரிந்துரை ஒன்றை வழங்கியுள்ளார். இந்தநிலையில் சாவுத்தண்டனையை ஒழிப்பது குறித்த ஒரு நாள் ஆலோசனைக் கூட்டத்துக்கு சட்ட ஆணையம் ஏற்பாடு செய்துள்ளது. (ஐ)

# 2020 - 2030 சூரியன் இல்லை

எதிர்வரும் 2020 ஆண்டு முதல் 2030 வரை சூரியனில் இருந்து வரும் கதிர்களின் • அளவுகள் குறையக்கூடும் என்று விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.

கடந்த 1645 ஆம் ஆண்டு முதல் 1715 ஆம் ஆண்டு வரை சூரியனில் இருந்து வரும் கதிர்களின் தாக்கம் குறைந்ததால் பூமியில் கடும் குளிர் நிலவியது. அதன் காரணமாக லண்டனின் தேம்ஸ் நதிகூட முழுமையாக உறைந்திருந்ததாகக் கூறப்படுகிறது.



இந்த நிலையில் எதிர்வரும் 2020 ஆம் ஆண்டு முதல் 2030 ஆம் ஆண்டு வரை மீண்டும் அதேபோன்று ஒரு நிலை ஏற்படக்கூடும் என்று விஞ்ஞானிகள் கணித்துள்ளனர்.

பிரிட்டனின் லெண்டுட்னொப் பகுதியில் தேசிய வானவியல் தொடர்பான கூட்டம் நடைபெற்றது. அதில் கலந்து கொண்ட பேராசிரியர் வாலெண்டின ஷர்கோவா சமர்ப்பித்துள்ள கட்டுரையில் கூறப்பட்டுள்ளதாவது:– சூரியனின் கதிர்வீச்சில் 11 ஆண்டுகளுக்கு ஒரு முறை மாற்றம் ஏற்படுகிறது. இந்த நிலையில் எதிர்வரும் 2020 ஆம் ஆண்டு சூரிய னின்கதிர் வீச்சு குறையத் தொடங்கும். மீண்டும் உயராமல் சிறிய அளவிலேயே இது இருக்கக்கூடும்.

அதன் காரணமாக 2030 ஆம் ஆண்டு சூரிய செயற்பாடுகளில் பெரிய தேக்கம் ஏற்படும். இந்த நிலை 2030– 2040 வரை கூட தொடரக்கூடும். எனவே பூமியில் சூரியனின் கதிர் வீச்சுகள் இல்லாமல் குளிர் அதிகமாக இருக்கும். மீண்டும் கடும் குளிர் நிலைக்கு பூமி செல்ல வாய்ப்பிருக்கிறது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)



# இனிப்புச் சாப்பிட்ட மாணவர்கள் பாதிப்பு

## 1,350 மாணவர்கள் வைத்தியசாலையில்

பிலிப்பைன்ஸ் நாட்டில் உள்ள 9 பாடசாலைகளில் இனிப்பு சாப்பிட்ட சுமார் ஆயிரத்து 350 மாணவர்கள் திடீரென நோய்வாய்ப்பட்டு மருத்துவமனைகளில் அனுமதிக்கப்பட்ட சம்பவம் அந்த நாட்டில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

பிலிப்பைன்ஸில் 9 நகரங்களில் உள்ள பாடசாலைகளுக்கு தனியார் வாகனம் ஒன்றில் வந்த 9 பேர் இனிப்புத்திண்பண்டங்களை மாணவர்களுக்கு விற்பனை செய்துள்ளனர். அந்த இனிப்புகளைச் சாப்பிட்ட மாணவர்கள் வாந்தி, வயிற்றுப் போக்கு, தலைவலி உள்ளிட்ட நோய்கள் ஏற்பட அவர்கள் உடனடியாக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர்.

சுமார் ஆயிரத்து 350 சிறுவர்களுக்கு ஒரே நேரத்தில் திடீர் நோய் ஏற்பட்டமை பதற்றத்தை ஏற்படுத்தியது உடனடியாக பொலிஸாருக்குத் தகவல் வழங்கப்பட்டது.

மாணவர்களுக்கு விற்பனை செய்யப்பட்ட இனிப்புக்களின் விற்பனை காலம் முடிந்துவிட்டதா? அல்லது இனிப்புக்களில் வேண்டுமென்றே விஷம் கலக்கப்பட்டதா? என்பது குறித்து பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

# சீனாவில் கடும் புயல்

## 104 பேர் சாவு: 190 பேர் மாயம்







பிஜிங்,ஜூலை 13

சீனாவை நேற்று முன்தினம் கடுமையான புயல் தாக்கியதில் சுமார் 104 பேர் உயிரிழந்துள்ளதாகவும், 54 ஆயிரம் வீடுகள் உருக்குலைந்து போயுள்ளதாகவும் அதிர்ச்சித் தகவல்கள் வெளியாகியுள்ளன.

சீனாவில் உள்ள ஜின்ஷியாங் மாகாணத்தில் சூறாவளிக் காற்று தாக்கும் என அந்த நாட்டின் வானிலை மையம் ஏற்கனவே எச்சரிக்கை விடுத்திருந்தது.

இந்த நிலையில் நேற்று முன்தினம் மாலை சௌமை எனப் பெயரிடப்பட்ட புயல் மணிக்கு சுமார் 216 கி.மீ வேகத்தில் கடுமையாகத் தாக்கத் தொடங்கியது.

புயல் காற்றுடன் தொடர்ந்து 15 மணி நேரங்கள் பலத்த மழை பெய்ய ஆரம்பித்ததால், மாகாணம் முழுவதும் பலத்த உயிர்ச் சேதம் ஏற்பட்டது.

ஹங்னான் எனும் நகரில் உள்ள ஒரு கட்டடம் இடிந்து விழுந்ததில், சுமார் 41 பேர் உயிரிழந்துள்ளனர். கடும்புயலில் சிக்கி இதுவரை சுமார் 104 பேர் உயிரிழந்துள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன. புயலில் சிக்கிய சுமார் 190 நபர்கள் காணாமற்போயுள்ளனர், அவர்களின் நிலை குறித்து எந்தத் தகவலும் இதுவரை கிடைக்கவில்லை. மேலும், மாகாணம் முழுவதும் புயல் ஏற்படுத்திய பாதிப்பில் சுமார் 54 ஆயிரம் வீடுகள் சேதம் அடைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடற்கரை ஓரமாகக் குடியுள்ள சுமார் 1.6 மில்லியன் மக்கள் பாதுகாப்பான இடங்களுக்கு மாற்றப்பட்டுள்ளனர். கடந்த 50 ஆண்டுகளில் இல்லாத அளவுக்கு புயல் மிக பயங்கரமான சேதத்தை ஏற்படுத்தியுள்ளது.

சீனாவில் இயற்கைச் சீற்றங்களினால் இந்த வருடம் மட்டும் சுமார் ஆயிரத்து 699 பேர் உயிரிழந்துள்ளதாகவும் 415 பேரை இதுவரை கண்டுபிடிக்கப்படவில்லை எனவும் சீனாவின் செஞ்சிலுவைச் சங்கம் அறிவித்துள்ளது. (ஐ)

# கனடாப் போர் விமானங்கள் ஈராக்கில் தாக்குதல்

பாக்தாத்,ஜூலை 13

ஈராக்கிலுள்ள ஐ.எஸ். அமைப்பின் நிலைகள் மீது கனடாப் போர் விமானங்கள் நேற்றுமுன்தினம் தாக்குதல் நடத்தியதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஈராக் படையினருக்கும் இஸ்லாமியத் தீவிரவாதிகளுக்கும் இடையில் நடைபெற்றுவரும் மோதலின் ஒரு பகுதியாக கனடாப் படையினரின் இந்தத் தாக்குதல் அமைந்துள்ளது.

இதன்போது கனடாப் போர் விமானங்கள் இரண்டு ஐ.எஸ். தீவிரவாதிகளின் தாக்குதல் மையமான ஈராக் பல்லூஜாவின் வடகிழக்குப் பகுதியில் தாக்குதல் நடத்தியதாக இராணுவத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

எனினும் தாக்குதல் தொடர்பான மேலதிக தகவல்கள் எவையும் வெளியிடப்படவில்லை. ஈராக் மற்றும் சிரியாவில் நிலைகொண்டுள்ள ஐ.எஸ். தீவிரவாதிகளுக்கு எதிரான போராட்டத்தில் அமெரிக்கா தலைமையிலான சர்வதேச நாடுகள் ஈடுபட்டு வருகின்றன. இந்த நாடுகளுடன் இணைந்து கனடாவும் தாக்குதல் நடத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# இந்தோனேஷியாவில் ஐந்து விமான நிலையங்கள் மூடப்பட்டன

ஜகர்தா,ஜூலை 13

இந்தோனேஷியாவின் கிழக்கு ஜாவா தீவில் உள்ள மவுண்ட் ரங் எரிமலை வெடிக்கத் தொடங்கியதை அடுத்து ஐந்து விமான நிலையங்கள் மூடப்பட்டுள்ளன. கடந்த முறை அந்த எரிமலை வெடித்தபோது ஆஸ்திரேலியா – இந்தோனேஷியா இடையிலான அனைத்து விமான சேவைகளும் ஒரு வாரத்துக்கு ரத்துச் செய்யப்பட்டன. இந்த நிலையில் நேற்று முன்தினம் காலை இந்த எரிமலை



மீண்டும் வெடிக்கத்தொடங்கியதை அடுத்து ஐந்து விமான நிலையங்கள் மூடப்பட்டுள்ளதாகத் தகவல்கள் வெளியிடப்பட்டுள்ளன. (ஐ)

## மெக்ஸிக்கோவில் துப்பாக்கிச்சூடு: பொலிஸார் உட்பட 6 பேர் சாவு

மெக்ஸிக்கோ, ஜூலை 13

மெக்ஸிக்கோவில் பொலிஸார் மீது துப்பாக்கிப் பிரயோகம் நடத்திய மர்ம நபர்கள் 5 பேர் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர். வடக்கு மெக்ஸிக்கோவின் மாட்டமோரோஸ் பகுதியில் உள்ள டமாயுலிபஸ் நகரில் இந்தச் சம்பவம் நடைபெற்றுள்ளது. ஆயுதங்கள் நிரம்பிய காரில் வந்த மர்ம நபர்கள், அங்கிருந்த பொலிஸாரின் வாகனம் மீது சரமாரியாகத் துப்பாக்கிப் பிரயோகம் நடத்தினர். சுதாரித்துக் கொண்ட பொலிஸார் பதில் தாக்குதல் நடத்தினர். அதில் நான்கு பேர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளனர். தப்பிச் செல்ல முயன்ற மற்றொரு நபரை பொலிஸார்; விரட்டிச் சென்று சுட்டுக் கொன்றனர்.

மர்ம நபர்களுடன் நடத்திய போராட்டத்தில் பொலிஸார் ஒருவரும் பரிதாபகரமாக உயிரிழந்துள்ளார். (ஐ)

# பெண் குத்திக்கொலை [illegible] 12 பேர் படுகாயம்

ஷாங்காய், ஜூலை 13

அமெரிக்காவில் துப்பாக்கிக் கலா[illegible]ம் பெருகி வருவது போன்று சீனாவில் க[illegible]க் கலாசாரம் வளர்ந்து வருகிறது. அங்கு [illegible]து இடங்களில் மக்கள், கத்திக்குத்துக்கு [illegible]ா கும் சம்பவங்கள் அதிகரித்து வருகின்[illegible]. கடந்த வருடம் மார்ச் மாதம் ரயில் நிலை[illegible]ம் ஒன் றில் நடந்த கத்திக்குத்துச் சம்பவத்தி[illegible]31 பேர் உயிரிழந்தனர். இந்த நிலையில் [illegible]த ஷென்ஜென் நகரில் உள்ள சந்தையில் [illegible]று முன்தினம், 32 வயதான நபர் ஒருவர் பு[illegible]ு, அங்கிருந்தவர்களைச் சரமாரியாகக் [illegible]தி யால் குத்தித் தாக்குதல் நடத்தினர். [illegible]ல் பெண் ஒருவர் சம்பவ இடத்திலேயே [illegible]பி ரிழந்துள்ளார். 12 பேர் கத்திக்குத்தில் படு[illegible]ம் அடைந்துள்ளனர். அவர்கள் மீட்க[illegible]டு உடனடியாக மருத்துவமனையில் சேர்க்[illegible]ட டனர். திருமண வாழ்வில் ஏற் பட்ட விரி[illegible]ன் காரணமாக மன உளைச்சல் ஏற்பட்டு, [illegible]ன காரணமாகவே அந்த நபர் கத்தியால் [illegible]த தல் நடத்தி இருப்பதாகக் கூறப்படுகிறது

மு.ஈழத்தமிழ்மணி

# தளராத தளபதி அண்ணன் அமிர்

ஈழத்தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டத்தில் அகிம்சைப் போராட்டக் காலத்திலும், ஆயுதப்போராட்டக் காலத்திலும் தமிழினத்துக்கு குரல் கொடுத்துப் போராடிய மகோன்னத தலைவர் அப்பாப்பிள்ளை அமிர்தலிங்கம்.

தந்தை செல்வா 1949 ஆம் ஆண்டு தமிழரசுக்கட்சியை ஆரம்பித்தபோது அவருக்கு தளபதிகளாய், ஈடுஇணையற்றவர்களாய் பலர் உருவாகினர். தந்தை செல்வாவினது வழித்தோன்றலாக தளபதி நாவலர் அமிர்தலிங்கமும் ஒப்பற்றவராகத் திகழ்ந்தார். 1927 ஆம் ஆண்டு ஆவணி மாதம் 26 ஆம் திகதி வட்டுக்கோட்டைத் தொகுதியில் உள்ள பண்ணாகத்தில் பிறந்தவர். 1945 இல் இலங்கைப் பல்கலைக்கழகம் சென்று பட்டதாரியாகி பின் சட்டக்கல்லூரியில் சட்டக் கல்வி பயின்று 1951 ஆம் ஆண்டு வழக்கறிஞரானார்.

1948 ஆம் ஆண்டு முதல் 1989 வரை அமரர் அப்பாப்பிள்ளை அமிர்தலிங்கம் தமிழினத்துக்கு ஆற்றிய சேவைகள் அளப்பரியன.

22 வயது இளைஞனாக சட்டக் கல்லூரியில் படித்துக் கொண்டிருந்த காலத்திலேயே துடிப்புடன் தமிழினத்தின் உரிமைகளுக்காக குரல் கொடுக்கப்புறப்பட்ட தீரமிக்க இளம் தலைவராக பரிணமித்தார். அமிர்தலிங்கம் சட்டத் தொழிலூடாக லட்சம் லட்சமாக சம்பாதித்து தனது வாழ்க்கையை மேம்படுத்தியிருக்கலாம். பணத்தையோ, வசதியையோ குறிவைக்காது தமிழினத்தின் போராட்டப் பாதையைக் குறிவைத்தார். இதனாலேதான் அமிர்தலிங்கம் தந்தை செல்வா தலைமையிலான தமிழரசுக்கட்சியில் இளைஞனாக இணைந்து கொண்டார். இளைஞனாக இருந்தாலும் உறுதியான கொள்கைப் பிடிப்போடு தமிழரசுக்கட்சியை அவர் தேர்ந்தெடுத்தமையே அவருடைய ஆற்றலையும், அறிவையும் தமிழினத்துக்கு எடுத்துச் சொல்கின்றது.

அமிர்தலிங்கத்தின் நாவினிலே தமிழன்னை குடியிருந்ததனால் அன்னைத் தமிழ் கொஞ்சி விளையாடியது. அவரது நாவிலிருந்து வருகின்ற தமிழ் இலக்கியச் சொற்கள் யாவும் அரசியலில் பொருந்தக் கூடியதாகவும், அறத்தையும் வீரத்தையும் தெளிவுபடுத்தக் கூடியதாகவும் காணப்பட்டன.

1956 ஆம் ஆண்டு நடைபெற்ற பொதுத்தேர்தலில் தமிழரசுக் கட்சி சார்பில் வட்டுக்கோட்டைத் தொகுதியில்இரண்டாவது தடவையாக போட்டியிட்ட அமிர்தலிங்கம் வெற்றி பெற்று நாடாளுமன்றம் சென்றார். 1956 ஆம் ஆண்டு தொடக்கம் 1970 வரை வட்டுக்கோட்டைத் தொகுதியில் 14 ஆண்டுகள் வரை தொடர்ச்சியாக பிரதிநிதித்துவம் செய்து வந்துள்ளார்.

போர்க்குணம் கொண்ட தலைவர் அமிர்தலிங்கம் தலைமையில் சிங்கள சிறி எதிர்ப்புப் போராட்டத்தை தமிழரசுக்கட்சி ஆரம்பித்திருந்தது. கடைகளில் உள்ள பெயர்ப்பலகைகளில் எல்லைக்கற்களிலும் காணப்பட சிங்கள சிறி எழுத்துக்கள் யாவும் தார்பூசி அழிக்கப்பட்டன. அமிர்தலிங்கம் ஆரம்பித்த சிங்கள சிறி எதிர்ப்பு போராட்டம் மக்கள் போராட்டமாக மாறியது. அமிர்தலிங்கத்தின் முன்மாதிரியைப் பின்பற்றி ஆங்கில எழுத்துக்குப் பதிலாக தமிழ் எழுத்தோட தொடங்கும் இலக்கத்தகடுகளுடன் மோட்டார் வாகனங்கள் யாழ்ப்பாண வீதிகளில் பவனி வந்தன. தமிழ் மக்கள் புரட்சிப் போராட்டமாகக் கணித்தனர். அமிர்தலிங்கத்தின் துணிவே துணை போராட்டத்துக்கு பலமூட்டியது.

தமிழரசுக்கட்சியின் முன்னெடுப்பின்றியே அந்தப் போராட்டம் ஆரம்பிக்கப்பட்டபோது கட்சியின் மூத்த தலைவர்கள் அமிர்தலிங்கத்தின் செயலில் குற்றம்கண்டனர். இருந்தாலும் தனது வாதத் திறமையால் தலைவர்களையும் போராட்டத்தில் உள்வாங்கிக் கொண்டார். கட்சி சிங்கள சிறி எதிர்ப்பு போராட்டத்தை வடக்கு–கிழக்கு தமிழர் தாயகமும் முழுவதும் விஸ்தரித்தது கட்சித்தலைவர் தாம் முன்னே நின்று ஆதரவாளர்களைப் பின்னே வைத்து போராட்டத்தை நடத்தினார்.

இந்தப் போராட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர்களும், ஆதரவாளர்களும் படையினரால் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் நிறுத்தப்பட்டனர். தலைவர் அமிர்தலிங்கம் தலைமையில் செனட்டர் ஜி.நல்லையா, ரி. சிறிதரன் ஆகியோர் யாழ். பஸ் நிலையத்தில் வைத்து சிங்கள சிறி எழுத்துப் பொறித்த பஸ் வண்டியில் சிங்கள எழுத்தை அழித்து தமிழில் எழுதிய போது கைது செய்யப்பட்டனர். அவர்கள் நீதிமன்றத்தில் நிறுத்தப்பட்டனர். நீதிபதியான பி.சி.எஸ். டேவிட் 25 ரூபா தண்டம் விதித்திருந்தார். அபராதம் செலுத்த மறுத்தமையால் அமிர்தலிங்கம் 15 நாள்கள் வரை யாழ்ப்பாணம் சிறையிலடைக்கப்பட்டார். முதலாவது சிறைப்பிரவேசத்தை எதிர்கொண்ட அமிர்தலிங்கம் சிறையிலிருந்து மீண்டபின் அமிர்தலிங்கத்துக்கு மக்களால் யாழ். கோட்டை முனியப்பர் கோயில் முன்றிலில் வரவேற்பு வழங்கப்பட்டது. தமிழ் மக்கள் சிங்களப்பேரின வாதிகளுக்கு எதிராக பின்னர் நடத்திய போராட்டங்களுக்கு ஆரம்பப்படியாகவே சிறி அழிப்புப் போராட்டம் தமிழரசுக்கட்சியின் எதிர்காலப் போக்கை தீர்மானித்திருந்தது.

தமிழரசுக்கட்சியின் பன்னிரண்டாவது மாநாடு மல்லாகத்தில் நடைபெற்றபோது ஆறாவது தலைவராக அமிர்தலிங்கம் தெரிவு செய்யப்பட்டார். 1970இல் தோற்ற பின்னர் அமிர்தலிங்கத்தின் பணி என்பது முக்கியத்துவம் பெற்றதாக இருந்தது. தமிழ் இளைஞர் பேரவை உருவாகியது. தான் உருவாக்கிய வாலிப முன்னணி தமிழ் இளைஞர் பேரவையின் முன்னோடி தமிழ் இளைஞர் பேரவை ஆயுத முனையில் போராட முனைந்து செயற்பட்ட இயக்கங்களுக்கெல் லாம் முன்னோடி. மூத்த பரம்பரையுடன் இளைஞனாக இணைந்து அந்த மூத்த பரம்பரையிடமிருந்து தலைமைப்பொறுப்பைத் தமது தியாகத்தால் பெற்று இளைஞர் பரம்பரையையும் தன்னுடன் இணைந்து அவர்களையும் இயக்கவாதிகளாக உண்டாக்கிய பெருமை அமிர்தலிங்கத்தையே சாரும்.

சிறிமாவோ அரசு கொண்டு வந்த அரசியலமைப்புச் சட்டத்தினால் தமிழினத்துக்கு ஏற்பட்ட விளைவுகள் காரணமாகவும் தமிழினம் சேர்ந்து வாழமுடியாது என்ற நிலையில் 1976 ஆம் ஆண்டு தமிழினம் தமிழீழமே முடிந்த முடிவான தீர்மானம் என்ற கோரிக்கையை முன்வைத்திருந்தது. தமிழர் விடுதலைக் கூட்டணியால் முன்வைத்த கோரிக்கைகள் துண்டுப்பிரசுரமாக மக்கள் மத்தியில் யாழ். நகரில் விநியோகிக்கப்பட்ட வேளையில் அரசியலமைப்புச் சட்டத்தை மீறியவர்கள் என்ற வகையில் படையினரால் கைது செய்யப்பட்ட தலைவர்களில் அமிர்தலிங்கமும் ஒருவராவார்.

ட்ரயல் அற்பார் நீதிமன்றத்தில் இது சம்பந்தமான வழக்கு நடைபெற்ற நிலையில் வழக்கிலிருந்து நான்கு தலைவர்களும் விடுதலையாகினர். குற்றவாளிகளாக்கப்பட்டிருப்பின் 20 ஆண்டுகள் சிறைவாசத்தை அனுபவிக்க வேண்டிய நிலையேற்பட்டிருக்கும். அதற்கும் தலைவர் அமிர்தலிங்கம் தயாராகவே வழக்கை எதிர்கொண்டிருந்தார்.

1977ஆம் ஆண்டு பொதுத் தேர்தல் நடைபெற்றபோது காங்கேசன் துறைத் தொகுதியில் வேட்பாளராக போட்டியிட்டு வெற்றி பெற்றதும் மட்டுமல்லாமல் நாட்டின் எதிர்க் கட்சித்தலைவருமானார். குள்ள நரியாக வர்ணிக்கப்பட்ட முதலாவது நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியான ஜே.ஆர்.ஜெயவர்த்தனா பல தடவைகளில் அமிர்தலிங்கத்தை தனது சாதுரியத்தினால் காலடியில் விழ வைக்கலாமென்று பகற்கனவு கண்டார். அமிர்தலிங்கத்தை விழ வைக்கவும் முடியவில்லை. பணிந்து செல்லவும் அமிர்தலிங்கம் கோழையாயிருக்கவும் இல்லை. 1977ஆம் ஆண்டு பொதுத் தேர்தலில் நாட்டின் எதிர்க் கட்சித் தலைவராக அமிர்தலிங்கம் தேர்ந்தெடுக்கப்பட்டது ஐக்கிய தேசியக் கட்சி அரசுக்கு பெரும் தலையிடியையும், நெருக்கடிகளையும் கொடுத்தது. அமிர்தலிங்கம் சிங்கள மக்களுக்கும், முஸ்லிம் மக்களுக்குமாக சேர்ந்து குரல் கொடுத்திருந்தார்.

1977ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சியில் இனக்கலவரம் வெடித்தது. தமிழ் மக்கள் பலர் கொல்லப்பட்டனர். சொத்துக்கள் பெரும் பான்மையினத்தவர்களால் சூறையாடப்பட்டன. தமிழ் மக்கள் ஏதிலிகளாயினர். இனக்கலவரம் இடம்பெற்றுக் கொண்டிருந்த வேளையில் நாடாளுமன்றத்தில் இனக்கலவரத்தை கட்டுப்படுத்தி தமிழ் மக்களைப் பாதுகாக்குமாறு அமிர்தலிங்கம், உட்பட பலரும் சேர்ந்து ஜே.ஆர்.ஜெயவர்த்தனாவை கேட்டிருந்த நிலையில் ஜே.ஆர்.ஜெயவர்த்தனா போர் என்றால் போர்– சமாதானம் என்றால் சமாதானம் என்று தமிழ்த் தலைவர்களைப் பார்த்து கூறியிருந்தார். அந்த நிலையிலும் அசையாது இனக்கலவரம் உண்டாக்கப்பட்ட பின்னணிகளை ஐக்கிய தேசியக் கட்சி அரசுக்கு எடுத்து விளக்கிக் கொண்டிருந்தார்.


இலங்கைக்கு வருகின்ற வெளிநாட்டு அரசியல் தலைவர்கள், இராஜதந்திரிகள், அரச பிரதிநிதிகளைச் சந்தித்த பின்னர் அமிர்தலிங்கத்தையும் சந்திக்கத் தவறிவிடமாட்டார்கள். இதனால் இலங்கையிலும், வெளிநாடுகளிலும் அமிர்தலிங்கத்தின் திறனுக்கும், கருத்துக்களுக்கும் அங்கீகாரம் வழங்கப்பட்டது. அமிர்தலிங்கத்தின் புகழ், ஆற்றல், அறிவு என்பன சர்வதேச மட்டத்தில் மேம்பட்ட நிலையில் தமிழினத்தின் தலைவராக உயர்ந்தார்.

இலங்கை இந்திய ஒப்பந்தத்தின் பின்னர் நாடு திரும்பிய தமிழ்த் தலைவர்கள் 1989ஆம் ஆண்டு நடைபெற்ற பொதுத்தேர்தலில் தமிழர் விடுதலைக் கூட்டணி போட்டியிட்டிருந்தது. தலைவர் அமிர்தலிங்கம் மட்டக்களப்பு மாவட்டத்தில் போட்டியிட்டிருந்தார். ஆனால் நாடாளுமன்ற உறுப்பினராக வர முடியவில்லை. தேசியப் பட்டியல் மூலமாகவே நாடாளுமன்றம் சென்றார்.

தமிழினத்துக்காக தனது இறுதி மூச்சு வரை உழைத்தவர் தலைவர் அமிர்தலிங்கம். தமிழ்த்தேசியத்தை இறுக்கப்பற்றி நின்றவர். யாருக்கும் விலைபோகாத தலைவர். தமிழர்கள் தமது உரிமைகளைப் பெற்றுக் கொள்வதற்காக அர்ப்பணிப் போடும் தியாக உணர்வோடும் தனக்கு வந்த நெருக்கடிகளையும், சோதனைகளையும் தாங்கியவாறு 40 ஆண்டுகள் உடல், பொருள், ஆவி என்ற மூன்றையும் தமிழினத்துக்காக வழங்கிய நிலையில் 13.07.1989அன்று எதிர்பாராத வாறு தான் தங்கியிருந்த இல்லத்தில் வைத்து அங்கு வந்த இளைஞர்களினால் சுட்டுக்கொல்லப்பட்டார்.

ஈழ விடுதலைப் போராட்டத்தில் இரண்டு பக்கங்களில் அமிர்தலிங்கத்தின் பணி காத்திரமாக இருந்தது. தனது ஆரம்பக் கால அரசியல் தொடக்கம் மரணத்தின் தறுவாயிலும் தமிழினத்துக்காகவே உழைத்து இறக்க வேண்டுமென்ற விதி தலைவர் அமிர்தலிங்கத்தை சார்ந்திருந்தது போலும்.

தமிழ்த் தேசியப் போராட்டத்தை இராஜதந்திரப் போராட்டமாக மாற்றியமைத்தவர் தலைவர் அமிர்தலிங்கம். தளபதி, நாவலர் என்றால் அமிர்தலிங்கமே என்பது போல் ஈழப்போராட்டத்தின் தந்தையாகவும் தலைவர் அமிர்தலிங்கம் விளங்கினார்.




இன்று அவரது 26 ஆவது நினைவு தினம்

1956 ஆம் ஆண்டு நடைபெற்ற பொதுத் தேர்தலில் தமிழரசுக் கட்சி சார்பில் வட்டுக் கோட்டைத் தொகுதியில் இரண்டாவது தடவையாக போட்டியிட்ட அமிர்தலிங்கம் வெற்றி பெற்று நாடாளுமன்றம் சென்றார். 1956ஆம் ஆண்டு தொடக்கம் 1970 வரை வட்டுக்கோட்டைத் தொகுதியில் 14 ஆண்டுகள் வரை தொடர்ச்சியாக பிரதிநிதித்துவம் செய்து வந்துள்ளார். போர்க்குணம் கொண்ட தலைவர் அமிர்தலிங்கம் தலைமையில் சிங்கள சிறி எதிர்ப்புப் போராட்டத்தை தமிழரசுக்கட்சி ஆரம்பித்திருந்தது.

## தேர்தல் சுவரொட்டிகள் வேண்டவே வேண்டாம்

தேர்தல் சுவரொட்டிகளை அகற்றுமாறு யாழ்ப்பாண மாவட்ட அரச அதிபரும், தெரிவத்தாட்சி அலுவலருமான நா. வேதநாயகன் பொலிஸாரைப் பணித்துள்ளதாக பத்திரிகைகளில் செய்திகள் வெளிவந்துள்ளன.
தேர்தல் வேளைகளில் கண்ட கண்ட இடங்களிலும் சுவெராட்டிகளை ஒட்டுவது இங்கு தடை செய்யப்படாத ஒன்றாகவே காணப்படுகின்றது.
கூட்டமாக வருகின்ற அரசியல் கட்சிகளின் ஆதரவாளர்கள் வீட்டு மதில் களில் சுவரொட்டிகளை ஒட்டும் போது அதைத் தடுக்கின்ற சக்தி வீட்டு உரிமையாளர்களிடம் இருப் பதில்லை. அவ்வாறு தடுக்கின்ற வேளையிலும் வீண் தகராறுகள் ஏற்படுவதால் அவர்கள் மௌன மாக இருந்து விடுகின்றனர்.
புதிதாக வர்ணம் பூசப்பட்ட மதில்களிலும் சுவெராட்டிகளை ஒட்டி அசிங்கப்படுத்துகின்றனர். ஏட்டிக்குப்போட்டியாக இது நடைபெறுவதால் மதில்கள்தான் பாதிக்கப்படுகின்றன.
பிரதான வீதிகளில் மட்டுமல்லாது உட்பகுதிகளிலும் இவ்வாறு வீட்டு மதில்களில் சுவரொட்டிகளை ஒட்டும் செயற்பாடுகள் அதிகளவில் இடம்பெற்று வருகின்றன. இதனால் சில இடங்களில் முறுகல் நிலை ஏற்பட்டு இறுதியில் சண்டையில் முடிந்த வரலாறுகளும் உண்டு.
பொலிஸார் இத்தகைய சகல சுவரொட்டிகளையும் அகற்றுவதென்பது இயலாத காரியமாகும். அவர்கள் அகற்றிய பின்னரும் மீண்டும், மீண்டும் ஒட்டவே செய்வார்கள். ஆகவே அரசியல் கட்சிகள் மற் றும் சுயேச்சை வேட்பாளர்களுக்கு இறுக்கமான அறிவுறுத்தலை வழங்குவதன் மூலமாகச் சுவரொட்டிகள் ஒட்டப்படுவதை ஓரளவு குறைக்க முடியும்.
பொலிஸாரும் தமது கண்காணிப்பை தேர்தல் முடியும் வரை அதிகரித்தல் வேண்டும். இதனால் கண்ட கண்ட இடங்களிலும் சுவரொட்டிகளை ஒட்டி அசிங்கப்படுத்தவதைத் தவிர்க்க முடியும்.
கட்சிகளின் வேட்பாளர்களும், சுயேச்சையாகப் போட்டியிடுபவர்களும் இதனைக் கவனத்தில் கொண்டு செயற்படுவது மிகவும் அவசியமானது.

## வியாழ மாற்றம்




தற்போது வியாழ மாற்றம் தொடர்பாக பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதோடு புத்தகங்களும் அச்சடிக்கப்பட்டு விற்பனையாகி வருகின்றன.
மக்களுக்குச் சோதிடத்தில் அதிக நம்பிக்கை இருப்பதால் தங்களது பலன்களை அறிந்து கொள்வதில் ஆர்வம் காட்டி வருகின்றனர்.
மக்களின் பலவீனத்தைப் புரிந்து வைத்திருக்கும் சோதிடர்களும் வியாழ பகவானை முன்னிலைப் படுத்தி தமது கைவரிசையைக் காட்டி வருகின்றனர்.
உண்மையில் ஒருவரது சாதகத்தில் உள்ள அனைத்துக் கிரகங்களின் நிலையையும் ஆராய்ந்து பலனைக் காண்பதே சிறந்தது. ஆனால் நாம் சனிக்கும், வியாழனுக்கும் மட்டுமே முக்கியத்துவம் கொடுத்து வருகின்றோம். இவையிரண்டும் பிரதானமான இரண்டு கிரகங்கள் என்பதில் மாற்றுக் கருத்து இல்லை. ஆனால் ஏனைய கிரகங்களின் பலன்களும் எம்மை வழி நடத்துகின்றன என்பதை நாம் மறந்துவிட முடியாது.சில சோதிடர்கள் எழுந்த மானத்துக்குப் பலன்களைக் கூறி மக்களை அச்சமடையச் செய்வதையும் காண முடிகின்றது. இதுவொரு தவறான செயலாகும்.

*கா.சுந்தரராஜன், நல்லூர்*

## விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும்

கடந்த 07.07.2015 அன்று வெளிவந்த உதயன் நாளிதழில் தலைப்புச் செய்தியாக வெளிவந்த இரா.சம்பந்தன் ஐயா கூறியது; வவுனியாவில் வைத்து நாடாளுமன்ற தேர்தல் ஆசன பங்கீட்டின் போது தமிழ் தேசியக் கூட்டமைப்பினர் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் இந்தமுறை இருபது ஆசனங்களைப் பெற்றால் த.தே.கூட்டமைப்பு பேரம் பேசும் சக்தியாக இருக்கும் என்றார். இதில் எனது கருத்து:- சம்பந்தன் ஐயா சொன்னது உண்மையாக இருக்கலாம். ஆனால் சம்பந்தன் ஐயா சொன்னது போன்று கட்சித் தலைவர்களும் வேட்பாளர்களும் பத்திரிகைகளுக்கும் வானொலிகளுக்கும் சொல்லிவிட்டு மட்டும் இருந்தால் இருபது ஆசனங்களை பெறமுடியுமா? ஆகவே கட்சித் தலைவர்களும் வேட்பாளர்களும் முக்கியமாக கிராமப் புறங்களுக்கு சென்று வீடு வீடாக மக்களுக்கு விழிப் புணர்வை ஏற்படுத்த வேண்டும். கிராமப்புற மக்கள் பெரும்பாலும் பத்திரிகைகள் படிப்பதும் செய்திகள் கேட்பதும் அரிது. அதனால் கட்சி வேட்பாளர்கள் தங்கள் ஆதரவாளர்களுடன் ஒவ்வொரு வீடுவீடாக சென்று மக்களை தெளிவு படுத்தி வாக்களிக்க வைத்தால் மட்டுமே இருபது ஆசனங்களை பெறமுடியும். குறிப்பாக போஸ்ரர்கள் ஒட்டுவதைக் குறைத்து விட்டு மேற்குறிப்பிட்டதைச் செய்யுங்கள். இதுவே எனது கருத்து.

*ஐ.சாந்தன், இலுப்பைக் கடவை*

### கேலிச் சித்திரம்



நன்றி: லங்காதீப

## சரியான வழிகாட்டி யார் ?

நாடாளுமன்றத் தேர்தல் களம் தென்பகுதியில் சூடுபிடிக்கத் தொடங்கியுள்ளது. மஹிந்தவின் மீள் வரவும், ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பிளவும், ஐக்கிய தேசியக் கட்சியே மீண்டும் ஆட்சி அமைக்கக் கூடிய சாத்தியங்களை ஏற்படுத்தியுள்ளன.
மஹிந்த என்ற தனிமனித எழுச்சி - அவர் மீதான வாக்கு வங்கி என்பது நாடாளுமன்றத் தேர்தலில் அவருக்குப் பெரியதொரு வெற்றியைப் பெற்றுக் கொடுக்காது.
மஹிந்த தரப்பினால் ஆகக் கூடுதலாக 30 தொடக்கம் 40 நாடாளுமன்ற உறுப்பினர்கள் வரையில் வெற்றி பெறுவதே கடினமான விடயம்தான். இவ்வாறான நிலையில், 113 ஆசனங்களைப் பெற்று ஆட்சி அமைப்பார்கள் என்பது நடவாத காரியமே.
மறுபுறம் வடபகுதித் தேர்தல்களம் இன்னமும் சூடுபிடிக்கவில்லை. ஆனாலும் சூடான வாசகங்களுடன் தேர்தல் கால சுவரொட்டிகள் மாத்திரம் தெருவுக்குத் தெரு ஒட்டப்பட்டுள்ளன. மக்களிடத்தில் செல்வாக்கு இல்லாதவர்கள் - யாரென்பதை மக்களுக்கு அடையாளப்படுத்த வேண்டியவர்களுக்கு, இந்த அவசர அவசரமான சுவரொட்டிப் பிரசாரம் தேவைதான். இதனால் பல வீடுகளின் புதிய வர்ணச் சுவர்களும் நாசமானதுதான் மிச்சம்.
வடபகுதியில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, ஐக்கிய தேசியக் கட்சி, ஈ.பி.டி.பி ஆகிய கட்சிகள் இதுவரையில் வேட்புமனுக்களைத் தாக்கல் செய்துள் ளன. ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி மற்றும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி என்பன இன்று வேட்புமனுக்களை தாக்கல் செய்யக் கூடும்.
ஐந்து கட்சிகளில் மக்கள் எந்தக் கட்சிக்கு வாக்களிப்பது என்பது பெரும்பாடுதான். வாக்களித்து சரியானவர்களைத் தேர்வு செய்யாவிட்டால் அடுத்த 5 ஆண்டுகளுக்கு நடப்பதைப் பார்த்துக் கொண்டிருக்க வேண்டியதுதான். எனவே, தமிழ் மக்களை சரியான திசையில் வழிகாட்டக் கூடியவர்களைத் தேர்ந்தெடுக்க வேண்டியது மக்களின் கடமை. இந்தக் கடமையைச் செய்யத் தவறி விட்டுப் பின்னர் புலம்பில், பயனில்லை.
கடந்த, ஜனாதிபதித் தேர்தல் காலத்தில் தமிழ் மக்களின் வடக்கு - கிழக்குத் தாயகத்தில் பல்வேறு பரப்புரைகள் முன்னெடுக்கப்பட்டிருந்தன. மஹிந்த ராஜபக்ஷவுக்கு எதிராக மைத்திரியை ஆதரிப்பது, மஹிந்தவை ஆதரிப்பது, தேர்தலைப் புறக்கணிப்பது என்று மூன்று வகையான கோஷங்களும், வடக்கு - கிழக்கு மக்கள் மத்தியில் முன்னெடுத்துச் செல்லப் பட்டது.
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, மஹிந்தவுக்கு எதிராக மைத்திரியை ஆதரிப்பது என்ற நிலைப் பாட்டை தமிழ் மக்கள் மத்தியில் முன்வைத்தது. மஹிந்தவை ஆதரிப்பது என்ற நிலைப்பாட்டை, மஹிந்தவுடன் ஒட்டிக் கொண்டிருந்த, ஈ.பி.டி.பி. மற்றும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி என்பன எடுத்திருந்தன. இந்தத் தேர்தலை தமிழ் மக்கள் பகிஷ்கரிக்க வேண்டும் என்ற நிலைப்பாட்டை, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி எடுத்திருந்தது.
இதில் மஹிந்தவை ஆதரிப்பது என்பதும், தேர்தலை பகிஷ்கரிப்பது என்பதும் ஒரே முடிவையே கொடுக்கக் கூடியன.
இவ்வாறன நிலையில் தமிழ் மக்கள் தெளிவாக தமது நிலைப்பாட்டை வாக்குகளின் ஊடாக வெளிப் படுத்தினர். மஹிந்தவை தோற்கடிப்பதற்காக, தேர்தல் பகிஷ்கரிப்பு என்ற கோஷத்தை புறம் தள்ளினர்.
தமிழ் மக்கள் தேர்தல் புறக்கணிப்பு என்ற கோஷத்தை ஏற்றுக் கொண்டிருந்தால், இன்று என்ன நடந்திருக்கும். மீண்டும் மஹிந்த ராஜபக்ஷ மூன்றாவது தடவையாக ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டிருப்பார். தற்போது மைத்திரி ஆட்சியில் இருக்கின்ற வெளிகூட இருந்திருக்காது. அத்துடன் நிலங்கள் விடுவிப்பு பற்றிய பேச்சே இருந்திருக்காது. தமிழ் மக்களின் அரசியல் தீர்வு கிடப்பிலேயே கிடந்திருக்கும்.
ஜனாதிபதித் தேர்தலை தமிழ் மக்கள் புறக்கணிக்க வேண்டும் என்பது தவறான வழிகாட்டல். அந்தத் தவறான வழிகாட்டலை மக்கள் தூக்கி எறிந்திருந்தனர். மஹிந்தவை அகற்றுவதற்காக மைத்திரியை ஆதரிக்க வேண்டும் என்ற சரியான வழிகாட்டலை - நிலைப்பாட்டை தமிழ் மக்கள் எடுத்திருந்தனர்.
எனவே, நடப்பு நாடாளுமன்றத் தேர்தலிலும், தவறான வழிகாட்டல்களை கடந்த காலங்களில் முன்வைத்தவர்களை தமிழ் மக்கள் தங்கள் தலைமையாகத் தெரிவு செய்தால், அடுத்த 5 ஆண்டு காலத்துக்கு மீட்சி என்பது அறவே இல்லை.

பத்தி எழுத்து

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-2229944, விளம்பரம்: 021-2229731
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## புதிய மாற்றம் பெறும் அரசியல் களநிலை

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவும் அவரைச் சார்ந்து நிற்பவர்களும் இந்த நாட்டின் அரசியலில் எவ்வளவு தூரம் புல்லுருவிகள் போன்று ஒட்டிக் கொண்டிருக்கிறார்கள் என் பதை, அவர் மீண்டும் தேர்தலில் போட்டியிட பெரும்பாடு பட்டு அனுமதி பெற்றுக் கொண்டிருப்பதை வைத்துக் கணித்துக் கொள்ளலாம். இரண்டு தடவைகள் ஜனாதிபதியாக இருந்துவிட்டு அதில் ருசி கண்டமையில் மூன்றாவது தடவையும் அந்தப் பதவியில் ஒட்டிக்கொள்ள வசதியாக 18 ஆவது திருத்தத்தை நிறைவேற்றிக் கொண்டு போட்டியிட்ட அவரை "போதும் ஐயா போங்கள்" என்றுகூறி நாட்டு மக்கள் வீட்டுக்கு அனுப்பி வைத்தார்கள்.

அவ்வாறு செய்வதற்கு மக்கள் மைத்திரிபால மீது பாரிய நம்பிக்கை வைத்திருந்தார்கள். ஆரம்பத்தில் மைத்திரியும் தாம் அளித்திருந்த வாக்குறுதிகளை நிறைவேற்றுவதற்கு முயன்று பார்த்தார் என்பது உண்மைதான். ஆனால் அவருக்கு கட்சிக்குள் செல்வாக்கை அதிகரித்துக் கொள்ள முடியவில்லை. 19வது திருத்தத்தைத் தவிர பெரிதாக அவரால் ஒன்றும் சாதிக்க முடியவில்லை.

தமிழீழ விடுதலைப் புலிகளை ஒழித்துக் கட்டியவர் என்ற வகையில், மஹிந்தவுக்கு அடிமட்ட பெரும்பான்மை மக்கள் மத்தியில் வேரூன்றி விட்ட மதிப்பே, இப்போது அவருக்கு பெரும்பலமாக அமைந்து விட்டது. அந்தப் பலத்தைக் கொண்டே தாம் செய்து விட்ட அராஜக ஆட்சியின் அடையாளங்களை யெல்லாம் மறைத்து விட முடியும் என்று, அவர் மட்டுமன்றி அவர் நிழலில் அரசியல் செய்யும் ஊழல் வாதிகளும் நினை த்தார்கள். அந்த வகையில்தான் சிறிசேனவின் சொல்லுக்கு ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில் மதிப்பில்லாமல் போய்விட்டது.

அந்த நிலைமையை மஹிந்த ஆதரவாளர்கள் சரியாகப் பயன்படுத்திக் கொண்டார்கள். தாம் மக்களுக்கு அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்ற முடியாத நிலைக்குச் சிறிசேன தள்ளப்பட்டு விட்டார் என்றே தோன்றுகின்றது.

ராஜபக்ஷவுக்கு தேர்தலில் போட்டியிட வாய்ப்பளிக்கும் முடிவை சிறிசேன எடுத்திருப்பதில், ஏதோமர்மம் இருப்பதாக இந்தப் பத்திகளில் நாம் முன்பு சுட்டிக்காட்டியிருந்தமை நினைவு கூரத்தக்கது. மஹிந்தவுக்கு இடமளிக்கும் முடிவை ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் செயலாளர் சுசில் பிரேம ஜயந்த தம் கையெழுத்துடன் வெளியிட்டிருந்தார். அதற்கு சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் அனுரபிரியதர்ஷன யாப்பாவும் இணக்கம் தெரிவித்திருந்தார்.

இப்பொழுது வெளிவந்து கொண்டிருக்கும் செய்திகளின்படி, தேர்தலில் போட்டியிடுவதற்கான நபர்களை முடிவு செய்யும் அதிகாரம் கட்சியின் தலைவரிடம் இல்லை. செயலாளர்களிடமே உண்டு என்பதாகத் தெரிகின்றது.

ஆக, சிறிசேனவை ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் மஹிந்த ஆதரவாளர்கள் ஓரம் கட்டிவிட்டார்கள், அதனால் அவர் தோல்வியடைந்தவராகி விட்டார் என்று அந்த அணியினர் குதூகலித்துக் கொண்டிருக்கும் நிலையில்தான், இப்பொழுது இன்னொரு விடயம் வெளிவந்து கொண்டிருக்கின்றது.


ஜனாதிபதித் தேர்தலில் சிறிசேனவுடன் இணைந்து நின்ற அமைச்சர் ராஜித சேனாரத்ன, ஜாதிக்க ஹெலஉறுமயவின் பாட்டலி சம்பிக்க ரணவக்க மற்றும் மாதுளுவாவே சோபித தேரர் போன்றவர்களும், அவர்கள் சார்ந்துள்ள 40நிறுவனங்களும் ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து நல்லாட்சிக்கான தேசிய முன்னணியொன்று உருவாக்கப் பட்டிருக்கிறது. இது முறையாக செயற்பட்டு வெற்றி பெறுவதற்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் ஆசீர்வாதமும் கிடைத்திருப்பதாக விஷயம் அறிந்தவர்கள் கருதுகின்றார்கள்.

இது சரியான தகவலாக இருக்குமெனில், எதிர்வரும் தேர்தலில் ஜனாதிபதி நடுநிலையாக நின்று செயற்படும் சூழ்நிலை ஏற்படலாம்.

தென்னிலங்கையில் ஊழல், மோசடி, இலஞ்சம், நிர்வாகச் சீர்கேடு, இனக்குரோதம் போன்றவற்றுக்கு பேர் போனவர்களும், அப்படியானவர்களை ஆதரிப்பவர்களும் மஹிந்த ராஜபக்ஷவின் தலைமையில் ஒரு பக்கமாகவும், அதற்கு மாறான நல்லாட்சிக்கான தேசிய முன்னணி ரணில் விக்கிரம சிங்கவின் தலைமையிலும் களம் இறங்கப் போகின்றன என்று கருதலாம். ஜே.வி.பியின் நிலைப்பாடு தெரியவில்லை.

தேர்தல் பரப்புரைகள் ஆரம்பமாகும்போது, நிலைமைகள் மேலும் தெளிவாகும் என்று எதிர் பார்க்கலாம்.

# இனி நாட்டின் தலைவிதி மக்களின் கைகளில்



■ சரா

எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தல் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் ஆளுமைக்குப் பெருத்த சவாலாகவே காணப்படுகிறது. ஆனால் அவரது ஜனாதிபதிப் பதவிக்கு எந்தவிதமான பாதிப்பையும் அது ஏற்படுத்திவிடமாட்டாது என்றாலும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியாக இருந்த போது அவரது செல்வாக்கு ஆட்டம் காண ஆரம்பித்திருந்த சரியான சந்தர்ப்பமொன்றில் மஹிந்த ராஜபக்ஷ தரப்பு ஊழல், மோசடி நிர்வாகத்தை அஸ்தமிக்கச் செய்வதற்கு கங்கணம் கட்டியிருந்த நல்லாட்சியொன்றுக்குக் கனவு கண்ட தரப்புக்கள் அவரைப் பொது வேட்பாளராக்கி ஜனாபதியாக்கியது தெரிந்த கதை.

ஆனால், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன–ரணில் விக்கிரமசிங்கவைப் பிரதமராக்கி உருவாக்கிய அவரது அரசுக்கே இத்தேர்தல் சோதனைக் களமாக மாறியுள்ளது என்பதே உண்மை நிலைப்பாடாகும்.

மைத்திரி–ரணில் இணைந்து உருவாக்கியிருந்த நல்லாட்சி அரசின் 100 நாள்கள் வாக்குறுதிச் செயற்றிட்டம் அவர்கள் கூறியது போன்று முழுமை பெறாது போனதன் காரணமாக ஏற்பட்ட பின்னடைவு மற்றும், 100 நாள்கள் கடந்து சென்றிருந்ததன் பின்னர் மக்களின் நம்பிக்கைக்குப் பாத்திரமாக உறுதியான செயற்றிட்டங்கள் எதுவுமே முன்னெடுத்துச் செல்லப்படாதிருந் துள்ள நிலைப்பாடுகளே இந்த அரசு மீளவும் ஆட்சிக்கு வருமா? என்ற சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளது.

மறுபுறத்தில், மஹிந்த ராஜபக்ஷ அரசின் கொங்கிறீற் காடுகள், காப்பெற் வீதிகள் அபிவிருத்திக் கவர்ச்சியில் ஈர்க்கப்பட்டு மயங்கிப் போயிருந்த அதேவேளை இறுக்கமான பலதரப்பட்ட தாக்கங்களுக்கு உள்ளாகியிருந்த, குறிப்பாக நாட்டின் சாதாரண குடிமக்கள், ஊழல் மோசடிகளுக்கு சாவுமணி அடிக்கும் புதிய ஜனநாயக நல்லாட்சி நிர்வாகமொன்றுக்காகவே ஏங்கினார்கள், எதிர்பார்த்திருந் தார்கள். ஆனால், புதிய அரசின் வாக்குறுதி முன்னெடுப்புக்களில் ஊழல், மோசடிகள் ஒழிப்பு நடவடிக்கைகள் மக்கள் எதிர்பார்த்திருந்த அளவுக்கு வெற்றிகரமாக முன்னெடுத்துச் செல்லப்பட்டி ருக்க வில்லை என்பதே உண்மை. மிகச் சரியான ஆதாரங்கள் கைவசத்தில் இல்லாத கைது நடவடிக்கைகள், அவை சம்பந்தப்பட்ட விசாரணைகளின் பிசுபிசுத்த தன்மைகள், மஹிந்த தரப்பு மோசடிப் பேர் வழிகளை மைத்திரி தரப்பு பாதுகாக்க எத்தனிக்கிறதா என்ற சந் தேக வித்துக்கள், புதிய அரசின் திட்டமிடல் முன்னெடுப்புக்களில், அபிவிருத்திச் செயற்பாடுகளில் முடக்கம் ஏற்பட்டுள்ளதா என்ற ஆராய்ச்சிக் கண்ணோட்டம், அவற்றினூடாக முன்னைய மஹிந்த அரசையும், மைத்திரி – ரணில் அரசையும் ஒப்பிட்டுப் பார்க்க நாட்டு மக்களைத் தூண்டியுள்ளது. அன்று வீதிகளில் காப்பெற் இடப்படுவதைக் காண முடிந்திருந்தது. இன்று அதைக்கூட காண முடியவில்லையே என மக்கள் எண்ணிப் பார்க்கத் தலைப்பட்டுள்ளனர். இவற்றினிடையே, தாம் வேண்டாமெனப் புறமொதுக்கிய மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான மோசடிக் கூட்டத்துக்கு மீளவும் நாடாளுமன்றத்தில் புகுந்து கொள்வதற்கு ஜனாதிபதி மைத்திரிபால வழி சமைத்துக் கொடுத்திருப்பது குறிப்பாக ஏகாதிபத்திய நிர்வாகி எனக் கருதப்பட்ட முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு வேட்புமனு வழங்கியிருக்கிறார் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன என்ற கசப்புணர்வாலும் மைத்திரிக்கு ஆதரவான, மஹிந்தவுக்கு எதிரான தரப்புக்கள் கொதித்துப் போயுள்ளன. கடுமையான கண்டனங்களும், விமர்சனங்களும் முன் வைக்கப்பட்டு வருகின்றன.

> ❝ முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மீளவும் வலுவான அரசியல் பாத்திரமொன்றாகி விடுவதற்கு பல வழிகளிலும் வழிகளை ஏற்படுத்திக் கொடுத்துள்ளது. ஜனவரி 8 ஆம் திகதி மைத்திரிபால பொறுப்பேற்றுடன் மஹிந்த ராஜபக்ஷவின் கம்பீரமான தோற்றம், பேச்சாற்றல், குரல், ஆரவாரம் என்ற அனைத்தும் அடிமட்டத்துக்குச் சென்று விட்டிருந்தது.

இந்த நிலைப்பாடு, முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மீளவும் வலுவான அரசியல் பாத்திரமொன்றாகிவிடுவதற்கு பல வழிகளிலும் வழிகளை ஏற்படுத்திக் கொடுத்துள்ளது. ஜனவரி 8 ஆம் திகதி மைத்திரிபால பொறுப்பேற்புடன் மஹிந்த ராஜபக்ஷவின் கம்பீரமான தோற்றம், பேச்சாற்றல், குரல், ஆரவாரம் என்ற அனைத்தும் அடிமட்டத்துக்குச் சென்று விட்டிருந்தன. ஆனால் இன்று அவரது கம்பீரமான தோற்றம், பேச்சாற்றல், குரல், ஆரவாரம் படிப்படியாக உச்சம் பெற்றுள்ளது. புதிய அரசில் நிலவிய தவறான – ஒவ்வாத நடைமுறைப்போக்குகளே இன்று மஹிந்த ராஜபக்ஷவை மீளவும் கதாநாயகனாக்கி வருகிறது.

புதிய அரசின் அரசியல் மறுமலர்ச்சியின் பிரதானமான தொனிப் பொருளாகியிருந்தது நல்லாட்சி நிர்வாகமே ஆகும். நாட்டின் குடிமக்களுக்கு நல்லாட்சி சம்பந்தமாக அந்தளவுக்கு தெளிவொன்று இல்லா திருந்தாலும்கூட ஊழல் மோசடிக் காரர்கள் துரத்தியடிக்கப் படுவதே அவர்களது தேவையாகியிருந்தது. திருடர்கள் தண்டிக்கப் படுவதைக் காண அவர்கள் ஆவலுடன் எதிர்பார்த்திருந்தனர். அதே வேளை சூறையாடப்பட்டுள்ள மக்களின் பணம் மக்கள் நலன்களுக்காகவே செலவழிக்கப்படு மெனவும் மைத்திரி – ரணில் அரசால் கூறப்பட்டி ருந் தது.

மக்கள் நலன் சார் திட்டங்கள் என இன்னும் பலப்பலவும் கூறப்பட்டிருந்தன. ஆனால், அத்தகைய பணக் கொள்ளைகளை நடத்தியிருந்த திமிங்கிலங்களையும், சுறாக்களையும் விடுத்து நெத்தலிகளே பிடிக்கப்பட்டன. திமிங்கிலங்களும் சுறாக்களும் சுதந்திரமாக உலா வருகின்றன. அந்த வகையில் நல்லாட்சி ஒன்றுக்கான புறச் சுழலை உருவாக்கிவிடுவதற்கு மிக அத்தியாவசியமான ஊழல், மோசடி ஒழிப்பு நடவடிக்கைகள் வெறும் கண்துடைப்பாகியுள்ளது. நாட்டின் அறிவு சார்ந்த தரப்பினர் உள்ளிட்ட குடிமக்களின் எதிர்பார்ப்புக்களில் இடி விழுந்துள்ளது. ஆனாலும் இந்த நாட்டின் அரசியல் தில்லுமுல்லுகளில் சிக்கித்திணறி நன்றாகவே அடிவாங்கியுள்ள – இனியும் ஏமாந்து போவதற்குத் தயாராக இல்லாத இந்த நாட்டின் அறிவு சார்ந்த வாக்காளப் பெருமக்கள் இவையனைத்தையும் கூட்டிக்கழித்துக் கணக்குப் போட்டுப் பார்த்து நல்லதொரு தீர்வைத் தருவார்கள் என்ற நம்பிக்கையுடன் பார்த்திருப்ப தைத் தவிர இன்றைய இந்த குழப்பநிலை அரசியல் நிலைப்பாட்டைக் கணித் துப் பார்த்து தீர்மானமாக எதையும் கூற இயலாது.

# ஆப்பிழுத்த குரங்கின் நிலையில் இன்று மைத்திரிபால



சிங்கள மூலம் சந்துன் ஜீவந்த
தமிழில் வீஎஸ்ரீ

♦ மைத்திரிபால உண்மையில் மஹிந்தவுக்கு வேட்பாளர் நியமனம் வழங்குவாரா? மாட்டாரா? என்ற கேள்வி கடந்த வாரம் முழுவதும் நாட்டின் அரசியல் குறித்து அக்கறை கொண்டவர்களது மனங்களை அலைக்கழிக்கவே செய்தது.

♦ பொதுஜன ஐக்கிய முன்னணியின் பொதுச் செயலாளர் சுசில் பிரேம ஜயந்தவால் வெளியிடப்பட்ட அறிக்கை, மஹிந்தவுக்கு வேட்பாளர் நியமனம் வழங்க மைத்திரிபால இணக்கம் தெரிவித்துள்ளதாகக் கூறியது.

♦ தாம் மஹிந்தாவுக்கு வேட்பாளர் நியமனம் வழங்க ஒப்புக் கொண்டுள்ளதாக மைத்திரிபால வெளிப்படையாக இதுவரை கூறவில்லையே எனச் சிலர் ஐயம் எழுப்பத் தவறவில்லை.

♦ உண்மையில் இந்த நாட்டு அரசியலரங்கில் என்னதான் நடக்கிறது? மைத்திரிபாலவும் – மஹிந்தவும் இணைந்து கொண்டுள்ளார்களா? மஹிந்தவுக்கு குருவி காட்டியமை போன்று, மைத்திரிபால, ரணிலுக்கும் குருவிகாட்டி விட்டுள்ளாரா?

♦ உண்மையாகச் சொல்வதானால், இந்தக் கேள்விகளுக்குப் பதில் கூறுவது மிகச் சிரமமானதொன்றே. ஆனால் சிரமப்பட்டாவது இவற்றுக்கு விடைதேடிக் கண்டாகத்தான் வேண்டும். இன்றைய அரசியல் நிலை குறித்துத் தற்போது எழுதுவது, நாளையோ, நாளை மறுதினமோ தலைகீழாக மாற்றமுறக் கூடும். இன்றைய அரசியல் சூழ்நிலையில், அரசியல் போக்குக் குறித்து எதிர்வு கூறுவதென்பது மிகமிகச் சிரமமானதொன்றே. இருந்தாற்போல் வானம் இருண்டு மழை தூறும். சில நிமிடங்கள் நீடிக்கும். மழை நின்று வானத்தில் சூரிய ஒளி பிரகாசிக்கும். அது நீடிக்காது. மீண்டும் வானம் இருண்டு கடும் மழை கொட்டும். மீண்டும் மழை நின்று வானம் வெளிக்கும். இன்று இந்த நாட்டின் அரசியல் நிலையும் இதனை ஒத்ததொன்றே.

♦ எனவே அரசியலில் இன்று என்ன நடக்கிறது என்பது குறித்துத் தேடுவதைவிட, அரசியல் செயற்பாடுகள் எப்படி அமைய வேண்டும் எனக் கருத்து வெளியிடுவது இலேசானதொன்று.

♦ மைத்திரிபால, மஹிந்தவுக்கு வேட்பாளர் நியனம் வழங்குகிறாரானால், எந்த நோக்கத்துடன் அவ்வாறு வழங்குகிறார் என்ற கேள்விக்கான விடை, அச்சத்தின் காரணமாகவே என்றுதான் அமையும்.

♦ மஹிந்தவுக்கு வேட்பாளர் நியமனம் வழங்காவிட்டால் சுதந்திரக்கட்சி இரண்டாகப் பிளவுபட்டுவிடும் என மைத்திரிபால அஞ்சுகிறார் என்று எழும் கேள்விக்கு, இல்லை; அப்படி எதுவுமில்லை என்பதே நேரடியான பதிலாக அமையும்.

♦ ஶ்ரீலங்கா சுதந்திரக் கட்சி இரண்டாகப் பிளவுபடுமானால், அதனால் மைத்திரிபாலவுக்கு எந்தவொரு பிரச்சினையும் கிடையாது. கடந்த ஜனாதிபதித் தேர்தலில் ரணிலுடன் ஒன்றிணைந்ததன் மூலம் மைத்திரிபால சுதந்திரக் கட்சியை இரண்டாகப் பிளவுபடுத்திவிட்டார். அன்று சுதந்திரக் கட்சியைப் பிளவுபடுத்தி, ரணிலுடன் ஒன்றிணைந்து, நாட்டின் ஜனாதிபதியாகி கூட்டு முன்னணி அரசைக் கவிழ்த்து, ஐ.தே.கட்சி தலைமையிலான அரசை உரு வாக்கி, ரணிலைப் பிரதமராக நியமித்த மைத்திரிபாலவுக்கு சுதந்திரக் கட்சி பிளவு பட்டு விடுமே என்பது குறித்து எந்த வித அச்சமோ, துக்கமோ கிடையாது.

♦ உண்மையில் மைத்திரிபாலவுக்கு இன்று ஏற்பட்டுள்ள அச்சம், மஹிந்தவுக்கு வேட்பாளர் நியமனம் வழங்கத் தாம் மறுத்தால், சுதந்திரக் கட்சி ஆதரவுத் தரப்பினரில் 90 வீதமானோர் மஹிந்தவுடன் ஒன்றிணைந்து விடுவர் என்பதே. சுதந்திரக் கட்சியின் ஆதரவுத் தரப்பினர் மஹிந்த எந்தச் சின்னத்தின் கீழ் போட்டியிட்டாலும், மஹிந்தவைப் பிரதமராக்குவதற்காக அவருக்கு ஆதரவாக வாக்களிக்கும் மனநிலையிலேயே உள்ளனர். இந்த நிலையில் மஹிந்தவுக்கு சுதந்திரக் கட்சி சார்பான வேட்பாளர் நியமனம் வழங்கப்படாதிருக்குமானால், 1977 ஆம் ஆண்டில் இலங்கை அரசியலரங்கில் ஏற்பட்ட நிலையே ஏற்படாகும். 1977 ஆம் ஆண்டுப் பொதுத் தேர்தலில் சுதந்திரக் கட்சி எட்டே எட்டு ஆசனங்களை மட்டுமே வென்றெடுத்து மூன்றாவது இடத்துக்குத் தள்ளப்பட்டது. இரண்டாவது அதிகூடிய ஆசனங்களை தமிழர் விடுதலைக் கூட்டணி ஈட்டிக்கொண்டதன் மூலம் அந்தக் கூட்டணியின் தலைவரான அப்பாப்பிள்ளை அமிர்தலிங்கம் எதிர்க்கட்சித் தலைவராகப் பதவி ஏற்க நேர்ந்தது. சுதந்திரக் கட்சியின் வரலாற்றில் ஏற்பட்ட படுதோல்வி அது. எனவே மஹிந்தவுக்கு வேட்பாளர் நியமனம் வழங்காவிடில், 1977 பொதுத் தேர்தலில் அனுபவிக்க நேர்ந்த தோல்வியின் இரண்டாவது பாகத்தையே மைத்திரிபால இந்த முறை அனுபவிக்க நேரும். இதன் காரணமாகவே மைத்திரிபால கூழையும் மீசையையும் காப்பாற்றிக் கொள்ளும் விதத்தில் இரு தரப்புக்களுக்கும் இடையில் இழுப்பட்டுக் கொண்டிருக்கிறார்.

♦ சரி, உண்மையில் இன்றைய இத்தகைய இக்கட்டான சூழ்நிலையிலிருந்து விடுபட மைத்திரிபால செய்ய வேண்டியது தானென்ன?

♦ உண்மையைச் சொல்வதனால், இந்த அரசியல் சிக்கல் முடிச்சை விடுவித்துக் கொள்வதனால் மைத்திரிபால இருவித செயற்பாடுகளை மேற்கொள்ள முடியும்.

**மைத்திரி பால மேற்கொள்ளத்தக்க முதலாவது அணுகு முறை**

♦ உண்மையில் சுதந்திரக்கட்சி பிளவுபடுவதைத் தடுக்க வேண்டுமானால் மைத்திரிபால, மஹிந்தவுக்கும், அவருக்குப் பின்னால் நிற்கும் அணியினருக்கும் பொதுத் தேர்தலில் சுதந்திரக் கட்சி சார்பாகப் போட்டியிட வேட்பாளர் நியமனம் வழங்குவதே நல்தொன்றாக அமையும். மைத்திரிபால அந்தவிதம் செய்வாரானால், சுதந்திரக் கட்சிக்குள் எவ்வித பிரச்சினையும் தலை தூக்காது. ஆனால் தமக்கு ஆதரவாக ஜனாதிபதித் தேர்தலில் வாக்களித்த 62 லட்சம் வாக்காளர்களுக்கு குருவி காட்டிவிட்டார் என்ற குற்றச்சாட்டுக்கு அவர் உள்ளாக நேரிடும்.

♦ ஆனால், அத்தகைய குற்றச்சாட்டு இந்த வேளையில் பொருத்தமற்றது. மைத்திரிபால ஏற்கனவே அதாவது சுதந்திரக் கட்சியின் தலைமைப் பொறுப்பை ஏற்றுக்கொண்ட கடந்த ஜனவரி 17 ஆம் திகதியன்றே, அவர் தமக்கு ஆதரவாக வாக்களித்த 62 லட்சம் வாக்காளர்களுக்குக் குருவி காட்டி விட்டிருந்தார். ஜனாதிபதித் தேர்தல் பரப்புரைக் காலத்தில் தாம் ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டால் எந்தவொரு கட்சி சார்ந்தவராக அல்லாது நடுநிலை பேணும் தலைவராகச் செயற்படுவேன் எனக்கூறி வந்துள்ளார். ஆனால் தேர்தலில் வெற்றி பெற்றதும் சுதந்திரக்கட்சியின் தலைவர் பதவியைத் தமதாக்கிக் கொண்டார். சுதந்திரக் கட்சியின் ஆதரவாளர்கள் 58லட்சம் பேர் மஹிந்தவுக்கு வாக்களித்திருந்தனர். எனவே வெளவாலின் திருமண வீட்டில் கலந்து கொண்டால் தலைகீழாகத் தொங்கித்தான் ஆகவேண்டும் என்பதற்கொப்ப, சுதந்திரக் கட்சியின் தலைவர் பதவியை ஏற்றதன் மூலம் கட்சியின் தீவிர ஆதரவாளர்களான 58லட்சம் வாக்காளர்களை மைத்திரிபால பிரதிநிதித்துவப்படுத்தியாக வேண்டும். அவர்கள் விரும்பும் விதத்தில் செயற்பட்டாக வேண்டும். 58 லட்சம் சுதந்திரக்கட்சி ஆதரவாளர்களது விருப்பத்துக்கு ஏற்பச் செயற்பட இயலாதுபோகுமானால், தமக்கு ஆதரவாக வாக்களித்த 62லட்சம் வாக்காளர்களுக்குத் துரோகம் இழைக்க இயலாதாயின், அவர் சுதந்திரக்கட்சியின் தலைமைப் பொறுப்பை ஏற்காது தமக்கு ஆதரவாக வாக்களித்த 62லட்சம் வாக்காளர்களுடன் இருந்திருக்க வேண்டும். அவ்விதம் செயற்பட்டிருப்பின் தமக்கு ஆதரவாக வாக்களித்த 62 லட்சம் வாக்காளர்களது விருப்புக்கேற்ற வகையில் செயற்பட்டிருக்க, செயற்பட இயலும். அந்த 62லட்சம் ஆதரவாளர் களைக் கைவிட்டு சுதந்திரக்கட்சியின் 58லட்சம் வாக்காளர்களுடன் இணைந்து செயற்படுவதானால், மைத்திரிபால அந்த 58லட்சம் வாக்காளர்களது விருப்புக்கு ஏற்ற வகையிலேயே செயற்பட்டாக வேண்டும். அரசியல் யதார்த்தம் அதுவே. 62 லட்சம் வாக்காளர்களது விருப்புக்கு ஏற்ற வகையில் செயற்படுவதானால் மைத்திரிபால ஐ.தே.கட்சியின் தலைமைத்துவத்தையே ஏற்க வேண்டும். எனவே இன்று மைத்திரிபாலவுக்குள்ள முதலாவது தெரிவு சுதந்திரக்கட்சி ஆதரவாளர்களது விருப்புக்கேற்ப மஹிந்தவுக்கும் அவருக்கு ஆதரவான தரப்பினருக்கும் வேட்பாளர் நியமனம் வழங்கி அவர்களுடன் ஒன்றிணைந்து செயற்படுதலாகும்.

♦ ஆனால் இன்று மைத்திரிபாலவோ, மஹிந்தவுக்கு வேட்பாளர் நியமனத்தை வழங்கி, அவரது ஆதரவாளர் தரப்பின் சிலருக்கு அதனை மறுக்கும் உத்தியைக் கைக்கொள்கிறார். இதனால் கூட்டணியின் சார்பில் போட்டியிடும் வாய்ப்பைக் கைகழுவிவிட்டு தனித்து வேறு விதத்தில் போட்டியிட மஹிந்த தீர்மானிக்கக்கூடும். நான் வாய்ப்பளித்தும் மஹிந்த அதனை நிராகரித்தார் எனக்கூறி, சுதந்திரக்கட்சியைப் பிளவுபடுத்தும் குற்றச்சாட்டிலிருந்து மைத்திரிபாலவால் தப்பித்துக் கொள்ள இயலும். கடைசி வேளையில் வேட்பாளர் நியமனம் தொடர்பாக சிக்கல் உருவாகுமானால், இந்த இரு தரப்பினரும் வெவ்வேறு தரப்புக்களாக தேர்தலைச் சந்திக்க நேரிடக்கூடும்.

♦ மஹிந்தவைக் கைவிட்டு மைத்திரிபால தரப்பு தேர்தலில் இறங்குமானால், அங்கு தேசிய அரசென்ற இணக்கம் முன்னிலைப் படுத்தப்பட நேரும். எனவே ரணிலைப் பிரதமராக்கும் முயற்சியை முறியடிக்க வேண்டுமானால், மைத்திரிபால தரப்பை தேர்தலில் தோற்கடித்தாக வேண்டும். அதேவேளை மஹிந்தவும் – மைத்திரிபாலவும் இணைந்து தேர்தலை எதிர்கொண்டால், ரணிலைப் பிரதமராக்க ஆதரவளித்த சுதந்திரக்கட்சியின் உயர்மட்டத்தவர்களுக்கு விருப்பு வாக்குகளை வழங்காது அவர்களைத் தோற்கடித்தாக வேண்டும். ஐ.தே.கட்சி அரசமைத்து ரணில் பிரதமராவதைத் தடுக்க வேண்டுமானால் நல்லாட்சி அரசில் அமைச்சர், பிரதி அமைச்சர் பதவிகளை ஏற்றுச் செயற்பட்ட சுதந்திரக்கட்சி முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் விருப்பு வாக்குகளை வழங்காது புறக்கணித்து தோல்வியடைய வைக்க வேண்டும். இதுகுறித்து சுதந்திரக் கட்சிக்கு ஆதரவான வாக்காளர்கள் ஒரு தடவைக்கு இரு தடவைகள் சிந்திக்க வேண்டியதில்லை. கடைசி வரை சுதந்திரக்கட்சி ஆதரவாளர்களுக்கு துரோகம் இழைக்காது கட்சியிலேயே தொடர்ந்தும் செயற்பட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு விருப்பு வாக்குகளை வழங்க வேண்டியது சுதந்திரக்கட்சியின் தீவிர ஆதரவாளர்களான வாக்காளர்களது கடமையாகும்.

♦ எது எப்படியோ, மஹிந்தவுடன் இணைந்து செயற்படுவதா அல்லது மஹிந்தவைக் கழற்றிவிட்டுச் செயற்படுவதா என்பது குறித்து மைத்திரிபால உடனடியாகத் தீர்மானித் தாக வேண்டும். இதில் எந்தவொரு தீர்மானமும் மைத்திரிபாலவுக்குப் பாதகமானதாகவே அமையும். மஹிந்தவுடன் இணைந்து செயற்பட்டால், தமக்கு ஆதரவாக வாக்களித்த 62லட்சம் வாக்காளர்களுக்குத் துரோகம் செய்தார் என்ற அவப்பெயருக்கு மைத்திரி உள்ளாக நேரிடும். மஹிந்தவுக்கு வேட்பாளர் நியமனம் வழங்க மறுத்தால் சுதந்திரச் கட்சியைப் பிளவுபடுத்தியவர் என்ற அவப் பெயர் மைத்திரிபாலவுடன் ஒட்டிக்கொள்ளும்.

♦ மொத்தத்தில் மைத்திரிபாலவின் இன்றைய நிலை ஆப்பிழுத்த குரங்கின் நிலையை ஒத்ததொன்றே.

# சுடோக்கு எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 9 | | | 4 | | | | | |
| 4 | | | | 7 | 9 | 2 | | |
| 7 | 5 | | | 1 | | 4 | | |
| 2 | | 3 | | | | | | |
| | | | 8 | | 5 | | | |
| | | | | | | 7 | | 3 |
| | | 1 | | 4 | | | 8 | 5 |
| | | 5 | 6 | 9 | | | | 7 |
| | | | | | 3 | | | 2 |

நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 8 | 4 | 1 | 5 | 9 | 2 | 7 | 3 | 6 |
| 6 | 3 | 5 | 8 | 7 | 1 | 2 | 9 | 4 |
| 2 | 9 | 7 | 3 | 6 | 4 | 5 | 1 | 8 |
| 7 | 2 | 4 | 9 | 1 | 5 | 6 | 8 | 3 |
| 1 | 6 | 3 | 4 | 8 | 7 | 9 | 5 | 2 |
| 9 | 5 | 8 | 2 | 3 | 6 | 4 | 7 | 1 |
| 4 | 1 | 2 | 7 | 5 | 3 | 8 | 6 | 9 |
| 3 | 7 | 9 | 6 | 2 | 8 | 1 | 4 | 5 |
| 5 | 8 | 6 | 1 | 4 | 9 | 3 | 2 | 7 |

சுடோக்கு ஒரு எண் விளை யாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்கு படுத்தல் தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்கு படுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரை களையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரை களை யும் கொண்டிருக் கிறது. (உள்ளே இருப்ப வற்றை பெட்டிகள், கட்டங் கள், பகுதிகள், உப சதுரங் கள் என்றும் அழைக்கிறார் கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலினும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண் டும் மீண்டும்) வராது நிரப் பப்பட வேண்டும். அவ் வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டி களுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங் கள் இரட்டைப்படாமல் வர வேண்டும். சில கட்டாங்கள் ஏற் கனவே நிரப்பப் பட்டி ருக்கும். தர்க்கரீதியில் ஏனைய வற்றை நிரப்ப வேண்டி யதே வேலை. சுடோக்கு என் பது ஜப் பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகர மாகப் பரவலாக்கியது. 2005 இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

## கடலுணவுகளின் நேற்றைய விலை நிலவரம்

| | யாழ்ப் பாணம் | மன்னார் | கிளிநொச்சி | பருத்தித் துறை | சாவகச்சேரி | மாதகல் |
|---|---|---|---|---|---|---|
| இறால் | 650 | 600 | 800 | 700 | 600 | 600 |
| நண்டு | 300 | 400 | 400 | 300 | 300 | 500 |
| கணவாய் | 600 | 600 | 700 | 600 | 600 | – |
| பாரை | 600 | 550 | 600 | 500 | 700 | 400 |
| சுறா | 600 | 600 | 600 | 650 | 800 | – |
| சீலா | 300 | 500 | 500 | 400 | 500 | – |
| விளை | 650 | 400 | 400 | 450 | 500 | 400 |
| முரல் | 300 | 400 | 400 | 350 | 300 | – |
| கும்பிளா | 400 | 400 | 400 | 300 | 400 | – |
| கிழாக்கன் | 650 | 700 | – | 500 | 300 | 500 |
| ஒரா | 400 | 400 | 400 | 400 | 400 | 350 |
| திரளி | 250 | 300 | 220 | 300 | 200 | 300 |
| நகரை | 200 | 300 | 200 | 400 | 200 | 300 |
| சூடை | 150 | 200 | 200 | 120 | 150 | 90 |
| ஒட்டி | 250 | 300 | 250 | 350 | 200 | 250 |
| திருக்கை | 150 | 400 | 250 | 300 | 300 | 140 |
| பாலை | 400 | 300 | 350 | 400 | 50 | – |
| வாழை | 100 | 200 | – | 300 | – | – |
| கொய் | 100 | 150 | 60 | 120 | 300 | – |
| மதனம் | 150 | 300 | 220 | 250 | 300 | 250 |

# சோளத்தின் மருத்துவம்

நீரிழிவு நோயாளிகளுக்குச் சிறந்த உணவான சோளத்தில் ஏராளமான மருத்துவ குணங்கள் அடங்கியுள்ளன.

**பயன்கள்**

1. சோளத்தில் அதிகளவு மாச்சத்தும், நார்சத்தும் அடங்கி யுள்ளதால் இது ஒரு சக்தி தரும் உணவாகத் திகழ்கிறது.
2. குளூட்டான் எனும் வேதிப்பொருள் சோளத்தில் இல்லாத காரணத்தால் கோதுமை ஒவ்வாமை உள்ளவர்களும் சோளத்தைச் சாப்பிடலாம்.
3. கோதுமையில் உள்ள புரதத்தைவிட சோளத்தில் உள்ள புரதம் சிறப்பு வாய்ந்தது.
4. சோளத்தில் நார்ச்சத்து அதிகளவில் உள்ளதால், இது மலச்சிக்கலுக்கு ஏற்ற உணவாகவும் உள்ளது.
5. நீரிழிவு நோயைக் குறைக்கும் தன்மை கொண்டதால் நீரிழிவு நோயாளிகளுக்கு இது சிறந்த உணவாகும்.
6. சிறுநீரை அதிகமாகப் பெருக்கும் சக்தி இதற்கு இருப்பதால், உடம்பில் உள்ள உப்பைக் கரைக்கும் தன்மை உடையது.

**சோள ரொட்டி**

சோள மாவையும், கோதுமை மாவையும் ஒன்றாகக் கலந்து கொள்ளவும். அத்துடன் நெய், உப்பு, மல்லித்தூளைச் சேர்த்து சற்று இளம் சூடான தண்ணீர் கொண்டு நன்கு பிசைந்து சிறிது நேரம் வைத்தபின் கனமான ரொட்டிகளாகத் திரட்டி தோசைக்கல்லில் எண் ணெய் சேர்த்து சுட்டு எடுக்கவும். நீரிழிவு நோயாளிகள் தின மும் இரவு உணவாக சோள ரொட்டியை எடுத்து வருவ தன் மூலம், அவர்களது நீரி ழிவு நோய் குறைய வாய்ப்பு கள் அதிகம் உள்ளன.

உளுந்தையும் வெந்தயத்தை யும் சேர்த்து போதுமான நீரில் ஊற விடவும். பொது வாக உளுந்து 1 மணி நேரம் ஊறினால் போதுமானது. அரிசியையும் சோளத்தையும் தனித்தனியாக போது மான நீரில் ஊற வைக்கவும், இரண்டுமே 6 மணி நேரம் ஊற வேண்டும். இட்லிக்கு அரைப்பது போல முதலில் உளுந்தை அரைத்து எடுத்துக்கொண்டு, அதன் பிறகு அரிசி, சோளம் இரண்டையும் நன்கு அரைக்கவும். பின்னர் இரண்டையும் உப்பு சேர்த்து நன்கு கலந்து 10 மணி நேரம் புளிக்க வைக்கவும், பின்னர் சுடச்சுட இட்லிகளை வேக வைத்து எடுக்கவும். மிருதுவான, ருசியான சோள இட்லி தயார். இது சோள இட்லியில் அதிக அளவில் இரும்புச்சத்து உள்ளதால் கர்ப்பிணிகள், குழந்தைகள் தினமும் சாப்பிடலாம். இரத்தச் சோகை யைத் தடுத்து நல்ல ஆரோக்கியத்தைத் தரும்.

## மரக்கறிகளின் நேற்றைய விலை நிலவரம்

| | மருதனார் மடம் | சாவகச்சேரி | சுன்னாகம் | நெல்லியடி | திருநெல் வேலி | கிளிநொச்சி | மன்னார் | வவுனியா |
|---|---|---|---|---|---|---|---|---|
| முள்ளங்கி | 50 | 60 | 50 | 40 | 60 | 60 | 40 | 40 |
| கத்தரி | 60 | 50 | 50 | 50 | 40–60 | 40 | 50 | 15–20 |
| கரட் | 120 | 140 | 160–240 | 120 | 180–220 | 240 | 240 | 200 |
| மரவள்ளி | 50 | 50 | 40 | 50 | 60 | 60 | 60 | 45 |
| பயிற்றை | 100 | 80 | 60 | 90 | 80–100 | 80 | 120 | 120 |
| பாகல் | 150 | 140 | 140 | 140 | 120 | 120 | 120 | 130 |
| கருணைக்கிழங்கு | 100 | 80 | 100 | – | 80–100 | – | 120 | 90 |
| பெ.வெங்காயம் | 100 | 90 | 100 | 80 | 120 | 100 | 120 | 90–100 |
| சி.வெங்காயம் | 140 | 120 | 160 | 160 | 140 | 170 | 160 | 120–130 |
| பூசணி | 40 | 30 | 40 | 30 | 20–30 | 40 | 60 | 15 |
| தக்காளி | 100 | 120 | 120 | 110 | 100 | 140 | 120 | 60 |
| வாழைக்காய் | 50 | 50 | 50 | 60 | 40 | 40 | 60 | 30 |
| கீரை | 20 | 20 | 30 | 10 | 15–20 | 30 | 35 | 15 |
| பொன்னாங்காணி | 25 | 30 | 30 | 30 | 20 | 10 | 10 | 10 |
| பச்சை மிளகாய் | 300 | 400 | 500 | 360 | 360 | 400 | 500 | 300 |
| புடோல் | 60 | 60 | 50 | 60 | 60 | 60 | 80 | 50 |
| கோவா | 100 | 80 | 80 | 90 | 80–100 | 100 | 100 | 60 |
| வெண்டி | 100 | 80 | 70 | 80 | 100–120 | 80 | 120 | 100 |
| போஞ்சி | 160 | 150 | 160 | 180 | 180 | 200 | 200 | 140 |
| லீக்ஸ் | 100 | 120 | 160 | 120 | 120 | 200 | 120 | 100 |
| தேங்காய் | 50 | 40 | 60 | 50 | 60 | 40 | 35–45 | 35–40 |
| உருளைக்கிழங்கு | 90 | 80 | 80 | 80 | 100 | 90 | 120 | 120–130 |
| தேசிக்காய் | 100 | 80 | 80–120 | 80 | 60 | 60 | 100 | 50 |
| வல்லாரை | 25 | 20 | 10 | 10 | 30 | 20 | 15–20 | 10 |
| கறிமிளகாய் | 120 | 140 | 120 | 160 | 140 | 160 | 220 | 180 |
| இராசவள்ளி | 120 | 140 | – | – | 80 | – | 160 | 90 |
| முருங்கைக்காய் | 250 | 160 | 160 | 120 | 140 | 200 | 200 | 330 |

## சுயநலமில்லாதவன் கடவுள்

சுயநலமற்ற தன்மையே கடவுள் ஆகும். ஒருவன் செல்வந்தனாக வாழ்ந்தபோதும் சுயநலம் இல் லாதவனாக இருந்தால் அவனிடம் கடவுள் இருக் கிறார்.

ஒரு நல்ல இலட்சியத்துடன் முறையான வழி யைக் கைக்கொண்டு தைரியத்துடன் வீரனாக விளங்குங்கள். மனித னாகப் பிறந்ததற்கு வாழ்ந்து சென்ற பின்னும் ஏதாவது அடையா ளத்தை விட்டுச் செல்லுங்கள். உங்களுடைய நரம்புகளை முறுக் கேற்றுங்கள். காலம் எல்லாம் அழுது கொண்டி ருந்தது போதும். இனி அழுகை என்ற பேச்சே இருக்கக் கூடாது. சுயவலிமை பெற்ற மனிதர் களாக எழுந்து நில்லுங்கள்.

**விவேகானந்தர் சிந்தனையில் இருந்து....**



## நாளை

**ஆனி–29**

**செவ்வாய்க்கிழமை**

**14.07.2015**

**திதி:** திரயோதசி
மு.ப. 07.50 வரை

**நட்சத்திரம்:** மிருகசீரிடம்
பி.ப.02.30 வரை

**சுபநேரம்:**
10.30-12.00 வரை

**இராகுகாலம்:**
03.00-04.30வரை

# குருப் பெயர்ச்சிப் பலன்




குரு பகவான் ராசிக்கு 8இல் வரும்போது சிரமங்களை அடைவோமா என்று நினைக்கத்தோன்றும். ஆனால் குரு பகவானால் உங்களுக்குத் தாக்கம் வராது. குரு 8இல் வரும்போது நீங்கள் செய்ய வேண்டியது எப்போதும் சுறுசுறுப்பாக இருக்கவேண்டும். நேரத்துக்கு உணவுண்ண வேண்டும். உங்கள் கடமைகளை மட்டுமே செய்ய வேண்டும். மற்றவர்களுக்கென்று நீங்கள் உதவப்போகும் போதுதான் சிரமம் வரும். வாகனப் போக்குவரத்தில் மிகவும் எச்சரிக்கையாகச் செல்லவேண்டும். அல்சர் போன்ற வயிறு சம்பந்தப்பட்ட நோயுள்ளவர்கள் வருடம் முழுவதும் தக்க மருந்தை, மருத்துவர் ஆலோசனைப்படி உண்ணவேண்டும். உங்கள் காரியங்களுக்காக மற்றவர்களை அணுகக்கூடாது. உதவி செய்வார்கள் என்று நம்பியவர்கள்கூட உதவிசெய்ய மாட்டார்கள். குடும்பத்தில் குழப்பம் செய்துவந்தவர்கள் இப்போது விலகிச்செல்வார்கள். நகைவாங்குவது, நிலம் வாங்குவது போன்ற நிகழ்வுகளைத் தள்ளி வைக்க வேண்டும். கைவசம் உள்ளதைப் பாதுகாத்தாலே போதும். இப்போது கோபம் அதிகமாக வரப்பார்க்கும். எனவே நீங்கள் கோபத்தை அடக்கி நிதானத்துடன் செயல்பட வேண்டும். இப்போது தொழில் சம்பந்தமாக நீங்கள் அடிக்கடி வெளியூர் சென்றுவருவீர்கள். கடிதம்மூலம் நல்ல தகவல்கள் வந்து சேரும். உங்களைவிட்டுப் பிரிந்த மகன் இப்போது உங்களைத் தேடி வருவார். வயிற்று வலி வந்தால் உடனே சிகிச்சை செய்துகொள்ள வேண்டும். சகோதரர்கள் மத்தியில் ஒற்றுமைக்குறைவு வராது. ஒருவரையொருவர் புரிந்து, விட்டுக்கொடுத்துச் செல்வதால் சுமுகமாக அனைத்து காரியங்களும் நடக்கும். காதல் செய்துவருவோர் மனதை ஒருநிலைப்படுத்தி காதல் தேவைதானா என்று சிந்தித்து முடிவெடுக்க வேண்டும்.

**05-07-2015 - 23-08-2015**
**குரு, கேது சாரத்தில்**

முருகன் அருளால் கடந்த காலங்களில் இருந்து வந்த தொல்லைகள் குறையும். உடல்நிலையில் முன்னேற்றம் காணப்படும். வீட்டில் உறவினர்களின் வருகை அதிகரிக்கும். பொன், பொருள் வாங்கப் போட்ட திட்டம் நிறைவேறும். தொழிலதிபர்கள், வியாபாரிகள் தொழில் போட்டியால் மந்தநிலையைக் காண்பீர்கள். மற்ற வேலை செய்கின்றவர்கள் உழைப்பால் உயர்வார்கள். கை கால்களில் வலிவந்து நீங்கும். அரச ஊழியர்கள் அதிகமான வேலைப் பளுவைச் சந்திப்பார்கள்.

**24-08-2015 - 27-10-2015**
**குரு, சுக்கிரன் சாரத்தில்**

உங்கள் செயல்கள் அனைத்தும் திருப்தியைத் தரும். விலகிநின்ற சொந்தங்கள் வந்துசேரும். சிக்கனமாகச் செலவு செய்தால் பணத் தட்டுப்பாடுகள் நீங்கும். வரவுக்குக்குறைவில்லை. தொழிலதிபர்கள், தொழிலாளிகளை மிகவும் கவனமாக அனுசரித்துச் செல்ல வேண்டும். அரச ஊழியர்கள் திடீர் இடமாற்றங்களைச் சந்திப்பார்கள். எந்த இடத்துக்கு மாறுதல் வந்தாலும் செல்வது நல்லது. குடும்பத்தில் கணவன்– மனைவி ஒற்றுமையுண்டு. குழந்தை இல்லாதவர்களுக்கு குழந்தைப் பாக்கியம் கிட்டும்.

**28-10-2015 - 15-01-2016**
**குரு, சூரியன் சாரத்தில்**

இந்த நேரத்தில், நீங்கள் எண்ணிய காரியங்கள் அனைத்தும் நிறைவேறும். உடல்நிலை சீராகும். பெற்றோர்வகையில் மருத்துவச் செலவுகள் குறையும். குடும்பத்தில் மகிழ்ச்சி பொங்கும். சுபகாரியப் பேச்சுகள் கைகூடும். நல்ல வரன்களாக அமையும். குழந்தைப் பாக்கியம் கிட்டும். ஆண் வாரிசுகள் அமையும். பிரிந்து வாழ்ந்த தம்பதியர் ஒன்றுசேர்வார்கள். வாகனப் பராமரிப்பில் ஏற்பட்ட கூடுதல் செலவுகள் குறையும். நல்ல தொழிலாளர்கள் கிடைப்பார்கள். பிள்ளைகள் கல்வியில் தேர்ச்சி பெற்றுப் பாராட்டைப் பெறுவார்கள். அரச ஊழியர்கள் கேட்ட இடத்துக்கு மாறுதலைக் காண்பார்கள். தொழிற்சாலைகளில் உற்பத்தி கூடும். எதிர்பார்த்ததைவிட இலாபம் பெருகும்.

**16-01-2016 - 07-02-2016**
**குரு, சூரியன் சாரத்தில் வக்ரம்**

இப்போது குருபகவான் உங்களுக்கு ஆதரவான வழிகளைக் காட்டுவார். உடல்நிலையில் இருந்து வந்த பின்னடைவுகள் நீங்கும். நீங்கள் உற்சாகத்தோடு வேலைசெய்வீர்கள். எதிர்பார்த்த பண வரவுகள் வந்துசேரும். சகோதரர்கள் வகையில் இருந்துவந்த பிணக்குகள் நீங்கும். சொத்துப் பிரிவினை சுமுகமாக வரும். ஒருசிலர் அயல்நாடு போகப் போட்ட திட்டம் நிறைவேறும். நல்ல கல்வியைப் பயின்று அரச வேலைக்கான தேர்வெழுதியவர்களில் சிலர் பணிக்கான உத்தரவைப் பெறுவார்கள். காதலர்கள் எண்ணம் கைகூடாது. நீண்டகாலமாக குழந்தைப் பாக்கியம் இல்லாத தம்பதியர்கள் இறைவன் கருணையால் குழந்தைப் பாக்கியத்தை அடைவார்கள்.

**08-02-2016 - 14-06-2016**
**குரு, சுக்கிரன் சாரத்தில் வக்ரம்**

இந்தக் காலகட்டத்தில் நீங்கள் எதிலும் நிதானத்துடன் செயல்பட வேண்டும். அண்டை அயலார், உற்றார்– உறவினர்கள் உங்களுக்கு உதவியாக இருக்கமாட்டார்கள். பேச்சில் மிகவும் நிதானம் வேண்டும். நீங்கள் நல்லது சொன்னாலும் பொல்லாததாக மாறும். அந்நிய மதத்தவர், அந்நிய மொழியினர் உங்களுக்கு உதவியாக இருப்பார்கள். எடுத்துக் கொண்ட முயற்சிகளில் வெற்றியைப் பெறலாம். சகோதரர்களுக்கிடையில் இருந்து வந்த கருத்து வேறுபாடு நீங்கும். வெளிநாடு சென்று படிக்க நினைத்த மாணவர்களின் எண்ணம் ஈடேறும். செய்யும் தொழிலில் அதிகமான இலாபத்தைக் காண்பீர்கள்.

**15-06-2016- 09-07-2016 குரு, சுக்கிரன் சாரத்தில்**

நீங்கள் பொறுமையாகச் செயல்பட்டு காரியங்களில் வெற்றியைக் காணவேண்டும். நீண்டகாலமாக காணாமல்போன பொருள்கள் வந்துசேரும். பெற்றோர்களுக்காக மருத்துவச் செலவுகள் செய்வீர்கள். வியாபாரிகள் புதிதாகக் கிளை தொடங்கும் திட்டத்தைக் கொஞ்சக் காலம் தள்ளிவைப்பது நல்லது. நஷ்டங்களைத் தவிர்க்கலாம். ஒருசிலர் வெளிநாடு செல்லப் போட்ட திட்டம் நிறைவேறும். தூர தேசத்திலிருந்து நல்ல செய்திகள் வந்து சேரும். தொழிலதிபர்கள் அரசால் எதிர்பார்த்த கடன் தொகைகள் வந்துசேரும். உடல்நிலையில் நல்ல முன்னேற்றம் உண்டு. கணவன்– மனைவியிடையே இருந்துவந்த பிணக்குகள் நீங்கும். வீட்டில் சுபகாரியப் பேச்சுகள் கைகூடும்.

**10-07-2016- 01-08-2016 குரு, சூரியன் சாரத்தில்**

குரு பகவான் 8 இல் உள்ளார் என்பதை மறந்துவிடக்கூடாது. உங்கள் பேச்சால் குடும்பத்தில் குழப்பம் வரும். எனவே நிதானமாகப் பேச வேண்டும். குழந்தைகள் வழியில் கல்விச்செலவு கூடுதலாகும். பண வரவுகள் திருப்தி தரும். சிக்கனமாக இருக்கவேண்டும். பெற்றோர்கள் உங்களுக்கு உதவியாக இருக்க மாட் டார்கள். எனவே அவர்களிடம் பண உதவி கேட்காதீர்கள். சகோதரர்களிடையே வீண் சண்டைகள் வரவாய்ப்புகள் உள்ளன. எனவே அளவோடு பேசவேண்டும். வீட்டில் சுபகாரியம் கைகூடும். குழந்தை பாக்கியம் இல்லாத தம்பதியருக்கு குழந்தைப் பாக்கியம் கைகூடும். பிரிந்துவாழும் தம்பதியர்கள் ஒன்று சேர்வார்கள்.

## உங்களுக்கு எப்படி?

**அரசு ஊழியர்கள்**

வேலைபார்க்கும் இடத்தில் வேலைப் பளு கூடுதலாகும். அதேநேரத்தில் உங்களுக்குக் கிடைக்கவேண்டிய பதவி உயர்வு, ஊதிய உயர்வில் தடை எதுவும் வராது. கீழ்நிலை பதவியில் உள்ளவர்கள் அதிகமான வேலைப்பளுவைச் சந்திப்பீர்கள். அதற்கான பலனும் உங்களுக்கு வந்துசேரும். மாறுதலை வேண்டி காத்திருப்போருக்கு எதிர்பார்த்தபடி மாறுதல் வந்துசேரும்.

**வியாபாரிகளுக்கு**

தரமுள்ள பொருள்களை வாங்கி விநியோகம் செய்யவேண்டும். உங்கள் பெயர் கெட்டுவிடாதபடி பார்த்துக்கொள்ள வேண்டும். கூட்டுத் தொழில் செய்கின்றவர்கள் உங்கள் சுய ஜாதகத்தைப் பார்த்துக் கொள்ள வேண்டும். வாடிக்கையாளர்களைக் கூடுதலாகப் பெற்று, விற்பனையை அதிகம் செய்வீர்கள். தொழிலாளர்கள், தொழிலதிபர்கள், தொழிற்சங்கம் மற்றும் தொழிலாளிகளுடன் சுமுக உறவு வைத்துக்கொள்ள வேண்டும். மனசாட்சிப்படி தொழிலாளர்களுக்கு சேர வேண்டியதைக் கொடுத்தால், தொழிலாளிகள் பிரச்சினை எதுவும் வராது. தொழிலதிபர்கள் எதிர் பார்த்தபடி, அரசால் புதிய கடனை அடைவார்கள். தொழிலாளி களுக்கு கிடைக்க வேண்டிய சம்பளம், போனஸ் வகைகள் தடையின்றிக் கிடைக்கும்.

**பெண்களுக்கு**

பெண்களைப் பொறுத்தமட்டில் நீங்கள் உங்கள் உடல்நலனை பேணிக் காக்க வேண்டும். இனம்தெரியாத பயம் தோன்றும். ஆனால் உங்களது உடல்நிலையில் பாதிப்பு எதுவுமில்லை என்பதை உணர வேண்டும். மனதினால் ஏற்பட்ட நோய் என்பதை நீங்கள் உணர்ந்தால் மனத்தெளிவு பிறக்கும். உற்சாகமாகச் செயல்படுவீர்கள். பிள்ளைகள் வழியில் அதிக செலவுகள் உண்டு. ஆடம்பரச் செலவுகளைக் குறைக்க வேண்டும்.



**மாணவர்களுக்கு**

உங்களது முயற்சியாலும் தன்னம்பிக்கையாலும் கல்வியில் உயர்ந்து வருவீர்கள். கவனக்குறைவால் விபத்துகள் நேரலாம். எனவே பாதுகாப்பான இடங்களில் உட்கார வேண்டும். வாகனங்களில் அதிகமான வேகத்தை மேற்கொள்ளாதீர்கள். கல்வி நிறுவனத்தின் தண்டனை உங்கள் கல்வியைக் கெடுக்கும். எனவே நீங்கள் உண்டு– உங்கள் வேலையுண்டு என்று மட்டும் செயல்பட வேண்டும்.

**விவசாயிகளுக்கு**

பணப்பயிர்கள் பயிரிடுவதைக் குறைக்க வேண்டும். கையிருப்பை வைத்து புதிய நிலம் வாங்கிப் போடுங்கள். விளைச்சலைப் பொறுத்தவரையில் குறைவாகவே இலாபம் வரும். எனவே ஒரு போகம் மட்டும் பயிரிட்டு பலன்களை அடையலாம். அந்நிய மதத்தவர், அந்நிய மொழி யினரால் தொழில் தனம் பெருகும். யாருக்கும் கடனுக்காக பிணை போடாதீர்கள். உங்கள் சொத்துக் களையும் அடமானம், ஈடு வைக்கா தீர்கள்.

**அரசியல் பிரமுகர்கள்**

எந்தவொரு சொல்லையும் மிகவும் நிதானமாகக் கையாளவேண்டும். நீங்கள் யதார்த்தமாகப் பேசுவது கூட மற்றவர்களுக்கு எரிச்சலை உண்டுபண்ணும். அவர்கள் தலைமையில் தேவையில்லாமல் சொல்லி வைப்பார்கள். உங்கள் உண்மையும்உழைப்பும்பயனின்றிப்போகலாம்.

**உத்திராட நட்சத்திரக்காரர்களுக்கு:**

எப்போதுமே குருபகவான் உங்களுக்கு சாதகமாகவே இருப்பார். எனவே நீங்கள் எந்த காரியத்திலும் சிரமமின்றி வெற்றிகளைக் காண்பீர்கள். இந்த குருப்பெயர்ச்சி ஆண்டில் எல்லா வகையான நன்மைகளையும் அடைவீர்கள். திடீர் யோக பலன்கள் கிட்டும். வருமானம் எப்போதும்போல வந்துசேரும். நீங்கள் செய்யும் தொழில்கள் அனைத்திலும் வெற்றியைக் காண்பீர்கள். குடும்பத் தேவைகள் அனைத்தையும் பூர்த்திசெய்வீர்கள்.

**திருவோண நட்சத்திரக்காரர்களுக்கு:**

குரு 8இல் உள்ள இந்த நேரத்தில் நீங்கள் பயம்கொள்ளாமல் உங்கள் பணியைச் செய்யலாம். கூடுதல் இலாபத்தையும் பெறுவீர்கள். மக்களால் மகிழ்ச்சி உண்டு. மற்றவர்களின் விமர்சனம் உங்களை பாதிக்காது. ஆனால் உதவிகேட்டு மற்றவர்கள்தான் உங்களைச்சுற்றியிருப்பார்கள். உங்கள் தேவைகள் அனைத்தும் பூர்த்தியாகும். ஒருசிலர் வெளிநாடு சென்றுவருவார்கள்.

**அவிட்ட நட்சத்திரக்காரர்களுக்கு:**


வாகனங்களில் பார்த்துச்செல்ல வேண்டும். அரச ஊழியர்களுக்கு வேலைப்பளு கூடும். கையூட்டு வாங்கும் ஒருசில அரசு ஊழியர்கள் பிரச்சினைகளில் மாட்டிக் கொள்ள வாய்ப்புகள் உள்ளன். உங்களுக்குத் தொல்லை கொடுத்து வந்தவர்கள் விலகிச்செல்வார்கள். ஒருசிலருக்கு தொழிலில் கூடுதல் வருவாய் உண்டு. வீட்டில் சுபகாரிய நிகழ்ச்சிகள் நடைபெறும்.

**பரிகாரம்**

முருகப் பெருமானையும், குருபகவானையும் தரிசித்து வரவேண்டும். முடியாதவர்கள் உங்கள் ஊரில் அருகிலுள்ள தட்சிணாமூர்த்தியை வணங்கி வரலாம். வாய்ப்பு குறைவாக உள்ளவர்கள் 27 கொண்டல் கடலையை எடுத்து மஞ்சள் துணியில் முடிந்து அதனை பர்சில், பையில், தொழிற்கூடத்தில் வைத்துக் கொள்ள வேண்டும். துன்பங்கள் விலகும்.

# வர்ணம் தீட்டலாம் வாங்க









# நேரத்தை முறையாகப் படுத்துவோம்



1. ஒரே நேரத்தில் பல வேலைகளைச் செய்வதை நிறுத்துங்கள். நமது மூளையால், ஒரே நேரத்தில் இரண்டு, மூன்று கடினமான செயல்களில் கவனம் செலுத்த முடியாது.
2. முக்கியத்துவம் வாய்ந்த செயல்களைத் தெரிவுசெய்து கொள்ளுங்கள். ஒவ்வொரு நாளுக்குமான தலையாய செயல்களை மனதில் பதிவு செய்துகொள்ளுங்கள். உங்கள் தெரிவுகளில் முக்கியத்துவங்கள் மாற்றியமைக்கப்பட்டால் பொறுத்துக் கொள்ளுங்கள்.
3.உடற்பயிற்சி செய்யுங்கள். உங்கள் உழைப்புத்திறனையும், உற்பத்தித்திறனையும் மேம்படுத்த மனநலம் என்பது மிக அவசியம்! அதனால், புதிய யுக்திகளைக் கண்டறியவும் மன நலனை மேம்படுத்தவும், பணிக்கிடையில் நல்ல காற்றைச் சுவாசித்து காலாற நடந்துவிட்டு வாருங்கள்!
4.முடியாது என்பதைகனிவாகச் சொல்லக்கற்றுக் கொள்ளுங்கள். நமது பணிகளுக்கிடையில் நண்பர்களுக்குசிறிய உதவிகள் செய்வதென்பது அவசியம் தான் என்றாலும், அந்தச் சிறு உதவிகள் சில சமயங்களில் மிகுந்த நேரம் பிடிப்பவையாக, அயர்ச்சியைத் தருபவையாக, முக்கியத்துவம் குறைந்தவையாக இருக்கும் பட்சத்தில், கனிவாக என்னால் இந்த உதவியைச் செய்ய இயலவில்லை எனச் சொல்லக் கற்றுக்கொள்ளுங்கள்!
5. காலையில் சீக்கிரமாக எழ முயற்சியுங்கள் ஒவ்வொரு நாளும் காலையில் சீக்கிரம் எழுந்து, பணிகளைத் தொடங்குங்கள். குறிப்பு எழுதப் பழகிக் கொள்ளுங்கள். உடல் நலனைப் போலவே மனநலனும் வெற்றிக்கு மிகவும் இன்றியமையாதது! உடற்பயிற்சியிலும், மனநலன் காக்கும் செயல் களிலும் ஈடுபடுங்கள்!



(தொடரும்)

# இரத்தினபுரி



இரத்தினபுரி இலங்கையின் முக்கியமான நகரங்களில் ஒன்றும், சப்ரகமுவமாகாணத்தின் தலைநகரமுமாகும். இரத்தினபுரி என்பது இந்த நகரம் அமைந்துள்ள இரத்தினபுரி மாவட்டத்தையும் அதன் நிர்வாக அலகான இரத்தினபுரி பிரதேச செயலர் பிரிவையும் குறிக்கும். இந்த நகரம் கொழும்புக்கு கிழக்கே, கொழும்பையும் கிழக்கு மாகாணத்தின் கல்முனையையும் இணைக்கும் ஏ–4 பெருந்தெருவில் 101 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது. இரத்தினக் கல் அகழ்வோடு இந்த நகரம் தேயிலை இறப்பர் பெருந் தோட்டங்களுக்கும், கித்துள் வெல்லத்துக்கும் பிரசித்திபெற்றது. முன்பு நெற்பயிர் செய்கை நன்கு மேற் கொள்ளப் பட்டிருந்தாலும் இரத்தினக்கல் அகழ்வுக்கு அதிக நிலப்பரப்பு ஒதுக்கப்படுவதால் நெற்பயிர் செய்கை வீழ்ச்சியைக் கண்டுள்ளது.

இரத்தினபுரி என்ற பெயர், இங்கு உற்பத்தி செய்யப்படும் கித்துள் மரத்தின் வெல்லத்துக்கான போர்த்துக்கேய மொழிப் பதமான இராபாதுரா என்பதில் இருந்து தோன் றியதாகும். இரத்தினபுர அல்லது இரத்தினங்களின் நகரம் என்ற பெயர் தற்போது இங்கு காணப்படும் இரத்தினக்கல் கைத்தொழிலுக்கு இசை வாக உள்ளதால் பிரபலமடைந்துள்ளது.

# சொந்தமான மண்

அக்பருக்கும் பீர்பாலுக்கும் அடிக்கடி ஏற்படும் மன வேறுபாடு அன்றைக்கும் ஏற்பட்டது. அக்பர் ஏதோ சொல்ல, அதற்குப் பதிலாக பீர்பால் எதையோ சொல்ல... பேச்சு வளர்ந்து பெரிய சச்சரவில் கொண்டு போய் விட்டு விட்டது. மன்னர் கோபம் கொண்டார்.

இனிமேல் என்னுடைய மண்ணில் நீ வாழக்கூடாது. எனது ஆளுகைக்கு உட்பட்ட மண்ணில் நீர் நடமாடுவதைக் குற்றமாக நான் கருதுகிறேன். அதனால் எனது மண்ணைவிட்டு வெளியேறி விடவேண்டும்! என்று ஆணை பிறப்பித்தார்.

சரி. உம்முடைய அதிகாரத்துக்கு உட்பட்ட மண்ணில் நான் வாழமாட்டேன்! என்று வீராப்பாகச் சொன்ன பீர்பால், அங்கிரு ந்து வெளியேறி சீன நாட்டுக்குச் சென்றார். சில ஆண்டுகள் கழித்து ஏராளமான மூட்டைகளுடன் டில்லிக்குச் சென்றார். பீர்பால் ஏதோ ஒரு வெளிநாட்டுக்குச் சென்று சிலகாலம் இருந்து விட்டு இப்போது மீண்டும் டில்லிக்கே வந்துவிட்டதை அக்பர் அறிந்தார். உடனே அவருக்குச் சினம் வந்தது. தனது தலைமை அமைச்சரை அனுப்பி பீர்பாலை உடனே அரசவைக்கு அழைத்து வரச்சொன்னார். பீர்பாலின் இல்லம் சென்ற அமைச்சரை அவர் அன்போடு வரவேற்று வீடு முழுவதையும் சுற்றிக் காட்டினார். இது என்ன வீட்டுக்குள்ளும் வெளியிலும் மண்ணைக் கொட்டி வைத் திருக்கிறீர்களே? என்று கேட்டார் அந்த அமைச்சர்.

இந்த மண்ணை நான் சீன நாட்டில் இருந்து கொண்டு வந்தேன். ஒரு காரணத்துக்காகத் பரப்பி வைத்திருக்கிறேன்! என்று கூறி னார். பின்னர் அந்த அமைச்சரின் வண்டியைப் பின் தொடர்ந்து தனது வண்டியிலேயே அரசவை நோக்கி புறப்பட்டார். செல்லும் வழியில்... இதென்ன வண்டிக்குள்ளும் இவ்வளவு மண்?? என்று கேட்டார் அந்த அமைச்சர். எல் லாம் காரணத்துக்காகத்தான்! என்று பதில் அளித்தார் பீர்பால்.



அரண்மனைக்குச் சென்றதும் அரசர் முன் நின்று வணங்கினார் பீர்பால். எனது உத்தரவையும் மீறி இன்னும் டில்லி நகரத்தில் உலாவுகிறீர்? என்னுடைய உத்தரவை அலட்சியம் செய்கிறீர்! என்னை மதிக்காமல் இந்த மண்ணில் உம்மால் வாழ்ந்து விட முடியுமா? என்று கோபத்துடன் கேட் டார் அக்பர். மன்னர் பெருமானே! தங்கள் உத்தரவுக்குக் கீழ்ப்படிவதைத் தவிர வேறு எனக்கு ஒன்றும் தெரியாது. தங்களின் உத்தரவை அப்படியே பின்பற்றி வருகிறேன்! என்று சொன்னார் பீர்பால் பவ்வியமாக.

எங்கே நிறைவேற்றுகிறீர்? இப்போது டில்லியில் அல்லவா நீர் தங்கி இருக்கிறீர்? என்றார் அக்பர் சினத்துடன். டில்லியில் நான் தங்கி இருப்பது உண்மைதான். ஆனால் தங்களின் மண்ணில் நான் நடமாடவில்லை. அமைச்சரைக் கேட்டுப் பாருங்கள். அவரே எனது வீட்டுக்கு வந்து பார்த்தாரே! என்றார் பீர்பால்.

அக்பர் அமைச்சரை நோக்கினார்... உடனே அமைச்சர் பதில் அளித்தார்..

மன்னர் அவர்களே! பீர்பால் தனது வீட்டுக்குள்ளும் வீட்டுக்கு வெளியிலும் மண்ணைக் கொட்டிப் பரப்பி இருக்கிறார். பயணம் செய்த வண்டியிலும் கூட மண்ணைக் கொட்டி இருந்தார். எதற்காக இப்படி எல்லாம் செய்திருக்கிறார் என்று எனக்கு விளங்கவில்லை. அவரைக் கேட்டேன்.. காரணத்துக்காகத்தான் என்று சொல்கிறார்! என்றார்.

அப்போது பீர்பால், மன்னர் பிரான் அவர்களே!எனது வீட்டின் உள்ளும் வெளியிலும் நான் பயணம் செய்யும் வண்டியிலும் நான் உலாவும் எனது வீட்டுத் தோட்டங்களிலும் நான் கொட்டிப் பரவி இருப்பது சீன தேசத்தில் இருந்து கொண்டு வரப்பட்ட மண். அது டில்லியின் மண் அல்ல. தங்களுக்குச் சொந்தமான மண்ணில் நடமாடக் கூடாது என்றீர்கள். அதனால்தான் சீன மண்ணில் நடமாடிக் கொண்டிருக்கிறேன். இது எவ்வாறு தங்கள் உத்தரவை மீறிய செயலாகும்? என்று அப்பாவி போல் பதில் சொன்னார்.

பீர்பால் விளக்கம் கொடுத்ததும் அக்பர் உட்பட அவையினர் சிரித்தனர். மன்னருக்கு சினம் இருந்த இடம் தெரியாமல் மறைந்து போயி ற்று. வாய்விட்டுச் சிரித்தவாறே, உம்மை எப்படி வழிக்குக் கொண்டு வருவது என்றே தெரியவி ல்லை! என்று மகிழ்ச்சியுடன் சொல்லி தன் உத்தரவை திரும்பப் பெற்றுக் கொண்டார்.

## தேர்தல் விதி மீறிய 12 பேர் கைது

கொழும்பு, ஜூலை 13
தேர்தல் சட்ட விதிமுறைகளை மீறிய குற்றச்சாட்டில் 12 பேர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

தேர்தல் சட்ட விதிகளை மீறியமை தொடர்பில் கிடைத்த முறைப்பாடுகளுக்கு அமைய மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளை அடுத்து குறித்த சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அலுவலகம் தெரிவிக்கின்றது.

தேர்தல் சட்ட விதிகளை மீறுபவர்களுக்கு எதிராக உடனடியாக நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு விசேட பொலிஸ் பிரிவொன்று உருவாக்கப்பட்டுள்ளது என்றும் பொலிஸ் ஊடகப் பிரிவு சுட்டிக் காட்டியுள்ளது. (ற)

## வேட்பாளர்களுக்கு வாழ்த்து கூறிய டலஸ் அழகப்பெரும

நாடாளுமன்றத் தேர்தலுக்கான வேட்பு மனுக்களை சமர்ப்பிக்கும் காலம் இன்று திங்கட்கிழமை நண்பகல் 12 மணியுடன் நிறைவடையவுள்ள நிலையில், தேர்தலில் போட்டியிடும் த.தே.கூ, ஐ.தே.க, ஜே.வி.பி, முஸ்லிம் காங்கிரஸ் கட்சிகளின் வேட்பாளர்களுக்கு டலஸ் அழகப்பெரும வாழ்த்துக்களைத் தெரிவித்துள்ளார்.

எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்று ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவித்த போதே அவர் இவ்வாறு வாழ்த்து தெரிவத்துள்ளார்.

குறித்த செய்தியாளர் சந்திப்பில் அவர் தொடர்ந்தும் கருத்து தெரிவிக்கையில்,

இந்த தருணத்தில் நான் உங்கள் எல்லோரிடமும் ஒரு வேண்டுகோளை விடுக்கின்றேன். ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் தலைவர் என்ற வகையில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அமைதியானதும், நீதியானதுமான தேர்தலை நடத்த ஒத்துழைக்குமாறு கேட்டுக்கொண்டுள்ளார்.

இதற்கமைய ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் கட்சித் தலைவர்கள், தேசிய அமைப்பாளர் உள்ளிட்ட நாங்கள் அனைவரும் நீதியா னதும், நியாயமானதுமான தேர் தலை நடத்துவதற்கு தயாராகவுள் ளோம்.

ஆனால் ஐக்கிய தேசியக் கட்சியோ தேர்தல் விதிகளை மீறும் நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றது.

இந்நிலையில் எமது தலைவரின் கட்டளைக்கு அமைய எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலை நீதியாகவும், நியாயமாகவும் நடத்த நாங்கள் அர்ப்பணிப்புடன் செயற்பட தயாராகவுள்ளோம்.

அத்துடன் எங்கள் கட்சியின் சார்பில் போட்டியிடும் 262 வேட்பாளர்களுக்கும் இந்த தருணத்தில் எமது வாழ்த்துக்களைத் தெரிவித்துள் கொள்கின்றோம்.

அதேபோல், ஐக்கிய தேசியக் கட்சி, ஜே.வி.பி, தமிழ் தேசியக் கூட்டமைப்பு, மற்றும் முஸ்லிம் காங்கிரஸ் உள்ளிட்ட கட்சிகளுக்கும் கட்சிகளின் வேட்பாளர்களுக்கும் நாம் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அத்துடன், இந்த தேர்தலை நீதியானதும், நியாயமானதுமான தேர்தலாக நடத்தி முடிப்பதற்கு அனைத்து கட்சிகளும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் எனவும் கேட்டுக் கொள்கின்றேன். – என்றார். (ற)



## 42 இந்து ஆலயங்களுக்கு சிலை வழங்கும் நிகழ்வு

கொழும்பு, ஜூலை 13
42 இந்து ஆலயங்களுக்கு 80 தெய்வ சிலைகள் வழங்கிவைக்கும் வைபவம் நேற்று தெனியாய ஸ்ரீ சிவசுப்ரமணிய சுவாமி ஆலயத்தில இடம்பெற்றது.

குறித்த சிலைகள் பல நன்கொடையாளிகளின் நிதியில் இந்தியாவில் இருந்து கொண்டுவரப்பட்டு 42 இந்து ஆலயங்களுக்கு வழங்கப்பட்டது.

இந்நிலையில் இந் நிகழ்வானது கொழும்பு கொம்பனிதெரு ஸ்ரீ சிவசுப்ரமணிய சுவாமி ஆலய பிரதம குரு சிவ ஸ்ரீ மணி சீனி வாச குருக்கள் தலமையில் இடம்பெற்றது.

மேலும் இந்நிகழ்விற்கு பிரதமரின் காரியாலய பிரதானி சாகல ரத்னாயக்க விசேட அதிதியாக கலந்து கொண்டதோடு ஆலய நிர்வாக சபையினரால்பொன்னாடைபோர்த்தி கௌரவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இந்நிகழ்வில் ஆலய நிர்வாக சபையினர்கள் அறநெறி பாடசாலை மாணவர்கள், உட்பட சுமார் 1000க்கும் அதிகமான மக்கள் கலந்து கொண்டனர். (ற)

## போதைப்பொருள் விழிப்புணர்வு



போதைப்பொருள் ஒழிப்பு தொடர்பான கருத்தரங்கு யாழ் மாவட்ட செயலகத்தில் நேற்று நடைபெற்றது. இந்த கருத்தரங்கானது நாடு முழுவதும் முன்னெடுக்கப்பட்டு வரும் நிலையில், நேற்று காலை 9.30 மணியளவில் யாழ் மாவட்ட செயலகத்தில் ஆரம் பமானது.

'சுயகண்ணால் போதையற்ற உலகை காண்போம்' என்ற தொனிப் பொருளில் போதைப்பொருளை முற்றாக ஒழிக்க மக்கள் மத்தியில் விழிப்புணர்வு ஏற்படுத்தும் நோக்குடன் இந்த கருத்தரங்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்த கருத்தரங்கில் அரச அதிகாரிகள், மதத்தலைவர்கள், கலாசார உத்தியோகத்தர்கள் மற்றும் சுகாதார பரிசோதகர்கள் கலந்து கொண்டனர். (ற)

## அரசியலை விட்டு விலக மாட்டேன்

### ஹரின் கூறுகின்றார்

கொழும்பு, ஜூலை 13
தான் ஒரு போதும் அரசியலை விட்டு விலகப்போவதில்லை என ஊவா மாகாண முதலமைச்சர் ஹரீன் பெர்ணான்டோ தெரிவித்துள்ளார். பதுளையில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:–

நான் தேர்தலில் போட்டியிடுவேன். நான் ஒருவன் இவ்விடத்தை விட்டு செல்வதால் மாத்திரம் இம்முறையில் மாற்றம் ஏற்பட்டு விடாது.

பைத்தியங்கள் குழம்பினாலும் வைத்தியர் குழப்பமடைவதில்லை என்றே கூற வேண்டும். அதிகமானோருக்கு நான் அரசியலை விட்டு விலகுவேனா, இல்லையா என்று பார்க்க வேண்டியுள்ளது. அரசியலை விட்டு விலகுவதா இல்லையா என்பதனை குறித்து தேர்தலுக்கு பின்னரே தீர்மானிப்பேன். நான் அரசியலை விட்டு விலகினால் அதன் அனுகூலம் திருடர் கூட்டங்களுக்கே.– என்றார். (ற)

## குடும்ப ஆட்சிக்கு இனி இடமில்லை

### அமைச்சர் ருவான் விஜேவர்த்தன தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 13
நாட்டில் ஜனநாயகத்தையும் நல்லாட்சியையும் மக்கள் விரும்புகின்றனர் எனவும் ஊழலை விரும்பாத மக்கள் மீண்டும் குடும்ப ஆட்சி ஏற்பட இடமளிக்க மாட்டார்கள் எனவும் பாதுகாப்பு ராஜாங்க அமைச்சர் ருவான் விஜேவர்தன தெரி வித்துள்ளார்.

கம்பஹா பியகம தொகுதியில் சில இடங்களில் நடைபெற்ற தேர்தல் பொதுக் கூட்டங்களில் உரையாற்றும் போதே அவர் இதனை கூறியுள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மீண்டும் தேர்தலில் போட்டியிடுவதால், நாட்டில் உண்மையான மாற்றத்தை எதிர்பார்த்த மக்கள் பெரும் அதிர்ச்சிக்கும் கவலைக்கும் உள்ளாகியுள்ளனர்.

கடந்த ஆட்சியில் மக்களுக்கு சுதந்திரம் இருக்கவில்லை. நாட்டையும் மக்களையும் நேசிக்கும் ஒரே கட்சி ஐக்கிய தேசியக் கட்சி. இதனால், சர்வதேச நாடுகள் கூட கட்சியின் தலைவரான பிரதமர் ரணில் விக்ரமசிங்க மீது கடும் நம்பிக்கையை வைத்துள்ளனர் எனவும் ருவான் விஜேவர்தன குறிப்பிட்டுள்ளார். (ற)

## பலம் மிக்க அணியை களமிறக்கும் ஜே.வி.பி.

கொழும்பு, ஜூலை 13
எதிர்வரும் பொதுத் தேர்தலில் 22 மாவட்டங்களில் தனித்துப் போட்டியிடவுள்ள ஜே.வி.பி., தனது வேட்பாளர் பட்டியலில் மாவட்ட முதன்மை வேட்பாளர்களாக பெரும்பாலான இடங்களில் பட்டதாரிகளைக் களமிறக்கியுள்ளது.

22 மாவட்டங்களில் போட்டியிடும் ஜே.வி.பி. அணியில் 17 பட்டதாரி முதன்மை வேட்பாளர்கள் களமிறக்கப்படவுள்ளனர்.

கொழும்பு மாவட்டத்தில் முதன்மை வேட்பாளராகக் களமிறங்கவுள்ள ஜே.வி.பி. தலைவர் அநுரகுமார திஸாநாயக்க முன்னாள் அமைச்சர் என்பதுடன், களனி பல்கலைக் கழகத்தில் விஞ்ஞானத்துறை பட்டாதாரியும் ஆவார். அதேபோன்று, கம்பஹா மாவட்டத்தில் முதன்மை வேட்பாளராக போட்டியிடும் விஜித ஹேரத்தும் முன்னாள் அமைச்சர் என்பதுடன், களனி பல்கலைக்கழக விஞ்ஞானத்துறை பட்டதாரியுமாவார்.

களுத்துறை மாவட்டத்தில் முதன்மை வேட்பாளராக முன்னிறுத்தப்பட்டுள்ள மேல்மாகாண சபை உறுப்பினர் நளீன் த ஜயதிஸ்ஸ ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தில் வைத்தியத்துறையில் பட்டம் பெற்றவராவார். அதேபோன்று காலி மாவட்டம் – நலீன் ஹேவகே, மாத்தறை மாவட்டம் – சுனில் ஹந்துன்நெத்தி, அம்பாந்தோட்டை மாவடடம் – நிஹால் கலப்பத்தி, கேகாலை மாவட்டம் – காமினி ரத்னாயக்க, இரத்தினபுரி மாவட்டம் – ஷாந்த பத்மகுமார, கண்டி மாவட்டம் – கயான் ஜானக ஹேரத், நுவரெலியா மாவட்டம் – மஞ்சுல சுரவீர, மாத்தளை மாவட்டம் – கமகெதர திஸாநாயக்க, குருநாகல் மாவட்டம் – நாமல் கருணாரத்ன, புத்தளம் மாவட்டம் – சமந்த கோரளேஆராச்சி, அநுராதபுரம் மாவட்டம் – வசந்த சமரசிங்க, பதுளை மாவட்டம் சமந்த வித்தியாரத்ன, மொனராகலை மாவட்டம் – ஆர்.எம்.ஜயவர்தன, திகாமடுல்ல மாவட்டம் – வசந்த பியதிஸ்ஸ ஆகிய 17 முதன்மை வேட்பாளர்களும் பல்வேறு துறைகளில் பட்டதாரிகளாகவும், அரசியல் துறையில் நீண்ட அனுபவம் கொண்டவர்களாகவும் விளங்குகின்றனர்.

அதுமட்டுமல்லாது, வன்னி, யாழ்ப்பாணம், பொலன்னறுவை, மட்டக்களப்பு மற்றும் திருகோணமலை ஆகிய மாவட்டங்களில் முதன்மை வேட்பாளராக முன்னிறுத்தப் பட்டுள்ளவர்களும் சமூக அமைப்புகளின் பிரதான பதவிகளை வகிப்பவர்களாகவும், அரசியல் முன் அனுபவம் கொண்டவர்களாகவும் விளங்குகின்றனர்.

ஓகஸ்ட் 18ஆம் திகதி நிறுவப்படவுள்ள புதிய நாடாளுமன்றத்துக்கு ஊழல், மோசடிகள் அற்ற கல்வி கற்ற இளைஞர் பிரதிநித்துவம் அதிகம் இருக்க வேண்டும் என வலியுறுத்தப்படுகின்ற தற்போதைய சூழலில் கல்வி கற்றவர்களுக்கும், அரசியல் அனுபவம் உள்ளவர்களுக்கும் அதேபோன்று இளைஞர்களுக்கான வாய்ப்பும் வழங்கப்பட்டு வேட்புமனு தயாரிக்கப்பட்டுள்ளமையானது சமூகத்தில் பரவலாக வரவேற்கப்படுகின்றது. (ற)

உதயன் விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111

கண்ணீர் அஞ்சலி

எமது சக ஆசிரிய மாணவி நாமகள்
அவர்களின் அன்புத் தாய்
திருமதி பரமேஸ்வரி விக்னேஸ்வரமூர்த்தி
அவர்களின் மறைவுக்கு அஞ்சலி செலுத்துவதுடன் அவரின் ஆத்ம சாந்திக்காக பிரார்த்திக்கின்றோம்.
தேசிய கல்வி நிறுவக (63002) (45.7.3)
கல்விமாணி 3ஆம் வருட ஆசிரிய மாணவர்கள்.
யாழ் தேசிய கல்வியியற் கல்லூரி

23ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 18 ★ 06 ★ 1949



மறைவு 28 ★ 06 ★ 1992

அமரர் மாசிலாமணி தேவநேரு

ஆண்டுகள் பல சென்றாலும் உங்கள் நினைவு மட்டும் எங்கள் மனதை விட்டு அகலவில்லை

செட்டிவளவு லேன்,
இணுவில்மேற்கு,
இணுவில்.

மனைவி, பிள்ளைகள்.

# தேர்தலின் பின்னரே ஆதரவு குறித்து முடிவு

## சரத் பொன்சேகா தெரிவிப்பு

நாடாளுமன்றத் தேர்தலின் பின்னரே யாருக்கு ஆதரவளிப்பது என்பது குறித்துத் தீர்மானிக்கப்படும் என்று பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

அவரின் ஜனநாயக கட்சி ஏற்கனவே பொதுத்தேர்தலில் போட்டியிடும் முகமாக வேட்புமனுக்களை தாக்கல் செய்துள்ளது.

இந்தநிலையில் புதிதாக நேற்று அமைக்கப்படவுள்ள ஐக்கிய தேசிய முன்னணியில் இணைந்து கொள்ளுமாறு சரத் பொன்சேகாவுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

எனினும் தாம் ஏற்கனவே தாக்கல் செய்த வேட்புமனுக்களை திரும்பப் பெறப் போவதில்லை என்று சரத் பொன்சேகா குறிப்பிட்டுள்ளார். தேர்தலுக்குப் பின்னரே தாம் யாருக்கு ஆதரவளிப்பது என்பது குறித்து தீர்மானிக்கவுள்ளதாக பொன்சேகா தெரிவித்துள்ளார்.(ற)

# அகதி முகாம்களை மூடக்கோரி வேலூரில் முற்றுகை போராட்டம்

சென்னை, ஜூலை 13

அகதி முகாம்களை மூடி, இலங்கை அகதிகளை அவர்களின் குடும்பத்தினருடன் வாழ அரசு வழிவகை செய்ய வேண்டும், உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி நாம் தமிழர் கட்சியினர் நேற்று முன்தினம் தமிழகத்தின் வேலூர் மத்திய சிறையை முற்றுகையிட்டு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

போராட்டத்துக்கு மாநில ஒருங்கிணைப்பாளர் சாகுல் அமீது தலைமை தாங்கினார். மாவட்ட தலைவர் கருணாநிதி, செயலாளர் ரமேஷ்குமார் உட்பட 70க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்ட னர் என்று இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டன.

இதன்போது 23 ஆண்டுகளாக சிறையில் தண்டனை அனுபவிக்கும் குற்றமற்ற தமிழர்களை விடுதலை செய்ய வேண்டும். 10 ஆண்டுகளுக்கு மேல் சிறையில் உள்ள அரசியல் கைதிகளையும் விடுதலை செய்ய வேண்டும். அகதி முகாம்களை மூடி, இலங்கை அகதிகளை அவர்க ளின் குடும்பத்தினருடன் வாழ அரசு வழிவகை செய்ய வேண்டும். 14 ஆண் டுகளாக உள்ள ஆயுள் தண்ட னையை 10 ஆண்டுகளாக குறைக்க வேண்டும் என்பது உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி கோஷம் எழுப் பினர்.

அப்போது அங்கு பாதுகாப்புப் பணியில் இருந்த பொலிஸார் போராட்டத்தில் ஈடுபட்ட 70 பேரை கைது செய்தனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற)

# பொது பல சேனாவில் ஏற்படுகின்றது பிளவு

## சிரேஷ்ட உறுப்பினர்கள் விலகுகின்றனர்

கொழும்பு, ஜூலை 13

பொதுபலசேனா அமைப்பில் பெரும் பிளவு ஏற்பட்டுள்ள நிலையில், கட்சியின் சில சிரேஷ்ட உறுப்பினர்கள் அந்த அமைப்பில் இருந்து விலகியுள்ளனர். கம்பஹாவில் பொதுபலசேனா சார்பில் வேட்புமனுவை பெற்றிருந்த விஜித ரோஹனவும் அந்த அமைப்பில் இருந்து விலகியுள்ளார்.

எனினும் இவர் கட்சியில் இருந்து விலகியமைக்கான காரணங்கள் எவற்றையும் வெளியிடவில்லை. இந்த நிலையில் இன்று பொது பலசேனா தமது வேட்புமனுக்களை தாக்கல் செய்யவுள்ளது.

இதில் இந்த அமைப்பின் செயலாளர் கலகொடஅத்தே ஞானசார தேரர்களுத் துறையில் போட்டியிடவுள்ளார் என தெரிவிக்கப்படுகின்றது. (ற)

ஆங்கிலக்கல்வி

ஆண்டு 6 இல் இருந்து B.A மாணவர்களுக்கான ஆங்கில இலக்கணம், வினா விடை, Spoken English வகுப்புக்கள் சங்கானை, யாழ்ப்பாணம். ஆசிரியர் ந.விக்னேஸ்வரன் ஆச்சாரி(Dip in English and science London)

TEL : 077 675 1649

விவசாய விஞ்ஞானம்(08)

A/L 2015

முன்னோடிப் பரீட்சையும் செயலமர்வும்

திகதி- 18/7-, 19/7, 25/7

நேரம்- மு.ப 10.00


வை. சசிகுமார்

DMI

Jaffna

# மஹிந்தவுக்கு ஏதுவாக வேட்பு மனு தயாரிப்பு

## சாடுகின்றார் மேர்வின்



கொழும்பு, ஜூலை 13

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு தேவையான வகையில் வேட்பு மனு தயாரிக்கப்பட்டுள்ளதாக முன்னாள் அமைச்சர் மேர்வின் சில்வா தெரிவித்துள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி மற்றும் ஜனாதிபதி சார்பிலும் செயற்பட்டேன் எனினும் எனக்கு இடமில்லை. கட்சியின் சார்பில் பெரியளவு அர்ப்பணிப் புக்களுடன் செயற்பட்டிருக்கின்றேன்.

தற்போதைய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் வெற்றிக்காகவும் நான் திரை மறைவிலிருந்து பல்வேறு கடமைகளை ஆற்றியுள்ளேன். இவ்வாறான ஓர் பின்னணியில் எனக்கு கட்சியில் வேட்பு மனு வழங்காமை வருத்தமளிக்கின்றது. வேட்பு மனு வழங்காமல் தமக்கு இழைக்கப்பட்ட அநீதிக்கு நான் மன்னிப்பு வழங்கினாலும் கடவுள் மன்னிப்பு வழங்க மாட்டார்.

– என்று அவர் தெரிவித்துள்ளார். சிங்கள ஊடகம் ஒன்றுக்கு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.(ற)

# போதைப் பொருள் விழிப்புணர்வு செற்பாடுகள் மட்டக்களப்பில்

மட்டக்களப்பு, ஜூலை 13

மட்டக்களப்பு மாவட்டத்தின் இளைஞர், யுவதிகளுக்கான போதைப் பொருள் தொடர்பான விழிப் புணர்வு பயிற்சி நெறி, மட்டக்களப்பு சார்ள் மண்டபத்தில் நேற்று ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

'வலுவற்ற மக்களின் மனித மாண்பை மேம்படச்செய்து வறுமையற்ற நிலையை உருவாக்குதல்' எனும் செயற்திட்டத்தின் கீழ் இவ் விழிப்புணர்வு பயிற்சி நெறி இடம்பெற்றது.

இப்பயிற்சி நெறியில் மட்டக்களப்பு கல்லடி சுவாமி விபுலானந்த அழகியற் கற்கைகள் நிறுவன மாணவிகள், கிழக்கிலங்கை தொழில் நுட்பக்கல்லூரி மாணவிகள் மற்றும் மட்டக்களப்பு மஞ்சந்தொடுவாய் தொழில்நுட்பக்கல்லூரி மாணவிகள் ஆகியோர் கலந்துகொண்டனர். (ற)




# சட்டத்தை மீறி வர்த்தகம்; இந்திய பிரஜைகள் கைது

குடிவரவு குடியகல்வு சட்டத்தை மீறி முல்லைத்தீவில் வர்த்தக நடவடிக்கையில் ஈடுபட்ட இந்திய பிரஜைகள் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

முல்லைத்தீவு செல்வபுரம் கடற்கரைப் பகுதியில் குறித்த இந்திய பிரஜைகள் நேற்றுமுன்தினம் பிற்பகல் கைது செய்யப்பட்டதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அலுவலகம் தெரிவிக்கின்றது.

சுற்றுலா நுழைவிசைவில் நாட்டிற்கு வருகை தந்த பெண்ணொருவரும் , ஆணொருவருமே கைது செய்யப்பட்டு முல்லைத்தீவு நீதிவான் முன்னிலையில் முற்படுத்தப்பட்டுள்ளனர்.

விசாரணைகளை அடுத்து சந்தேகநபர்களுக்கு நீதிவான் பிணை வழங்கியதுடன், அடுத்த கட்ட வழக்கு விசாரணை முன்னெடுக்கப்படும் எனவும் உத்தரவு பிறப்பித்துள்ளார்.

முல்லைத்தீவு பொலிஸார் சம்பவம் குறித்து மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (ற)

# கூட்டணியை நம்பிய குணசேகர நட்டாற்றில்

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் வேட்புமனு பட்டியலில் இருந்து, முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஏர்ள் குணசேகர, விலகியுள்ளார்.

இதனை அவர் சத்திய கடதாசி மூலமாக கூட்டமைப்பின் பொதுச் செயலாளர் சுசில் பிரேமஜயந்தவுக்கு அறிவித்துள்ளார்.

ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலர் நல்லாட்சிக்கான ஐக்கிய தேசியக் முன்னணியின் சார்பில் யானைச் சின்னத்தில் தேர்தலில் போட்டியிட உள்ள நிலையில், ஏர்ள் குணசேகர இந்த நடவடிக்கையை மேற்கொண்டுள்ளார்.

நல்லாட்சிக்கான ஐக்கிய தேசிய முன்னணியில் போட்டியிட வாய்ப்பு வழங்கப்படும் என்ற உறுதிமொழியை அடுத்தே அவர் கூட்டமைப்பின் வேட்புமனுப் பட்டியலில் இருந்து விலகியுள்ளதாக தெரியவந்துள்ளது.

எவ்வாறாயினும் அலரி மாளிகையில் நேற்றுக் காலை நடைபெற்ற நல்லாட்சிக்கான ஐக்கிய தேசிய முன்னணியில் இணையும் கட்சிகள் புரிந்துணர்வு உடன்படிக்கையில் கைச்சாத்திடும் நிகழ்வில் குணசேகர கலந்து கொண்டிருந்த போதிலும் அவருக்கு வேட்பு மனு வழங்கப்படவில்லை.

இந்த நிலையில், தனக்கு வேட்பு மனு கிடைக்காது போனால் அரசியலில் இருந்து விலகப் போவதாக ஏர்ள் குணசேகர அத தெரணவிடம் தெரிவித்துள்ளார். (ற)

# 10 வயது சிறுமி துஷ்பிரயோகம்: பொத்துவிலில் ஒருவர் கைது



பொத்துவில், ஜூலை 13

பொத்துவில், குண்டுமடு பகுதியில் 10 வயது சிறுமியை பாலியல் துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்தியதாகக் கூறப்படும் சந்தேகநபர் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

சந்தேகநபர் பொத்துவில் நீதிவான் முன்னிலையில் முற்படுத்தப்பட்டதை அடுத்து எதிர்வரும் 14 நாள்களுக்கு விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவு பிறப்பிக்கப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

குண்டுமடு பகுதியில் அயல் வீட்டுக்கு விளையாடச் சென்ற குறித்த சிறுமியை தனியான அறைக்குக் கூட்டிச் சென்று துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்தியுள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டனர்.

சம்பவம் குறித்து பாதிக்கப்பட்ட சிறுமியின் தாய் செய்த முறைப்பாட்டிற்கு அமைய சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார். பாதிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படும் சிறுமி சட்ட வைத்திய பரிசோதனைக்காக வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டுள்ள தாக பொலிஸார் கூறினர்.

சம்பவம் தொடர்பில் பொத்துவில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ற)

# மக்களைக் காட்டிக்கொடுத்து எங்கு செல்கிறார் மைத்திரி

***கேள்வி எழுப்புகின்றார் விஜித ஹேரத்***

கொழும்பு, ஜூலை 13
62 லட்சம் மக்களை காட்டிக் கொடுத்து விட்டு மைத்திரி எங்கே செல்கிறார்? திருடர்களை பாது காக்கவா மைத்திரிபால சிறிசே னவை ஜனாதிபதி பதவியில் அமர்த் தினோம் என ஜே.வி.பியின் பரப் புரைச் செயலாளர் விஜித ஹேரத் கேள்வி எழுப்பியுள்ளார்.

நிட்டம்புவ தங்கொள்ளவத்தை பிரதேசத்தில் நடைபெற்ற பொதுக் கூட்டம் ஒன்றிலேயே அவர் இந்த கேள்வியை எழுப்பியுள்ளார்.

அங்கு தொடர்ந்து பேசிய அவர்,

மஹிந்தவும் அவரது ராஜபக்ஷ வின் குடும்ப ஆட்சியும் நாட்டையும் நாட்டு மக்களையும் அதள பாதா ளத்திற்குள் தள்ளியது.

மஹிந்த ராஜபக்ஷ, கப்பம் பெறு வோர், திருடர்கள், ஊழல் பேர்வழி கள், இலஞ்சம் பெறுவோர், ஹெரோயின் விற்பனையாளர் கள், எதனோல் விற்பனையாளர் களை நாடாளுமன்றத்திற்குக் கொண்டு வந்து அவர்களைப் பாது காத்து, நாடாளுமன்றத்தைத்திருட்டு குகை யாக மாற்றினார்.

கப்பம் பெறும் நபர்களினால், அத்த னகல்ல தொகுதி மக்களே அதிகம் இன்னல்களை அனுபவித் தனர். அப்பாவிகளான ரம்புட்டான் வியா பாரிகளிடமும் கப்பம் பெறப்பட் டன. ராஜபக்ஷவையும் அவரது குடும் பத்தையும் விரட்டும் முதல் துப் பாக்கி வேட்டை மக்கள் விடு தலை முன்னணியே தீர்த்தது.

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகாவும் எம்முடன் அதனை அச்சமின்றி எதிர்கொண்டார். எனினும் நாங் கள் அன்று சொன்னது இன்று உறுதி யாகியுள்ளது. திருடர்களை பாது காக்கவா மைத்திரிபால சிறிசே னவை ஜனாதிபதி பதவியில் அமர்த் தினோம்?


62 லட்சம் மக்களை காட்டிக் கொடுத்து விட்டு மைத்திரி எங்கே செல்கிறார்? இதனை உடனடியாக மாற்ற வேண்டியுள்ளது.

ரணில் மைத்திரி கூட்டணியால் நாட்டின் அரசியல் கலாசாரத்தை மாற்ற முடியாது. அவர்களால் நாட்டு மக்களின் உரிமைகளை வழங்க வும் முடியாது.

மக்கள் விடுதலை முன்னணி ஆட்சி யினால் மாத்திரமே மக்களுக்கு உண்மையான உரிமைகளை வழங்க முடியும்– என்றார். (ற)

# இருவர், மூவர் பிரிவது கட்சியை பாதிக்காது

***இப்படிக் கூறுகின்றார் சுசில்***



கொழும்பு, ஜூலை 13
சிறிலங்கா சுதந்திரக் கட்சியிலி ருந்து இரண்டு மூன்று பேர் விலகிச் சென்றுள்ளமையானது, கட்சியை எந்தவிதத்திலும் பாதிக்காதென, ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப் பின் பொதுச் செயலாளர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று ஞாயிற்றுக் கிழமை நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவித்த போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

குறித்த செய்தியாளர் சந்திப்பில் அவர் தொடர்ந்தும் கருத்து தெரி விக்கையில்,

நாம் சிறி லங்கா சுதந்திரக் கட்சி, மற்றும் ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பு என்ற ரீதியில் பலமா கவே இருக்கின்றோம். அத்துடன் எதிர்வரும் ஆகஸ்ட் மாதம் 17 ஆம் திகதி நிச்சயமாக வெற்றி பெற்று புதிய அரசாங்கமொன்றை அமைப் போம்.

இன்று எமது கட்சியிலிருந்து பிரிந்து சென்ற சிலர் ஐக்கிய தேசியக் கட்சி யுடன் இணைந்துள்ளனர். இது குறித்து நாம் விமர்சனங்கள் எத னையும் கூறமுடியாது. இவ்வா றான தீர்மானங்களை மேற்கொள் வது அவர்களின் தனிப்பட்ட முடி வாகும்.

இவ்வாறு இரண்டு மூன்று பேர் பிரிந்து செல்வதால் சிறிலங்கா சுதந்திரக் கட்சியோ, ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்போ பிளவுபட்டு விட்டதாக கூற முடியாது.

தேர்தல் என்று வரும்போது கட்சித் தாவல்கள் இடம்பெறுகின்றமை வழமையாகும். இதனை நாம் பெரி தாக எடுத்துக் கொள்ளவில்லை.– என்று அவர் தெரிவித்துள்ளார்.(ற)

# சு.கவில் இருந்து வெளியேறியோர் தொடர்பில் குழப்பமான நிலைமை

கொழும்பு, ஜூலை 13
எதிர்வரும் பொதுத் தேர்தலில் நல்லாட்சிக்கான ஐக்கிய தேசியக் கட்சியின்கீழ் 15இற்கும் அதிகமான மஹிந்த எதிர்த்தரப்பு போட்டியிட வுள்ளதாகத் தெரிவிக்கப்பட்ட போதிலும் இதுவரை 6 பேர் மாத் திரமே ஐ.தே.கவில் போட்டியிடு வது உறுதியாகியுள்ளது.

அது தவிர, பலர் தாங்கள் ஒரு போதும் சிறிலங்கா சுதந்திரக் கட் சியை விட்டு வெளியேறப்போவ தில்லை எனத் தெரிவித்துள்ளனர்.

அதில் எஸ்.பி.திஸாநாயக்க, பிய சேன கமகே, சுதர்சினி பெர்னாண் டோபுள்ளே, நியோமல் பெரேரா, ரெஜினல் குரே, துமிந்த திஸா நாயக்க மற்றும் சரத் அமுனுகம ஆகியோர் அறிவித்திருந்தனர்.

எஸ்.பி.திஸாநாயக்க விசேட ஊடகவியலாளர் சந்திப்பொன்றை ஏற்பாடுசெய்து தனது நிலைப் பாட்டை அறிவித்திருந்தார். தான் ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப் பின் சார்பில் கண்டி மாவட்டத்தில் முதன்மை வேட்பாளராகக் கள மிறங்கவுள்ளதாகவும், தான் ஐ.ம. சு.கூ. வேட்பு மனுவில் ஏற்கனவே கையெழுத்து வைத்துவிட்டதாக வும், சிறிலங்கா சுதந்திரக் கட்சி தலைமையின் கீழ் தான் தொடர்ந் தும் செயற்படவுள்ளதாகவும் குறிப் பிட்டிருந்தார்.

அதேபோன்று, பியசேன கமகே நேற்று முன்தினம் மக்கள் சந்திப் பொன்றில் கலந்துகொண்டு, தான் ஒருபோதும் மக்களின் நம்பிக் கைக்குத் துரோகம் இழைக்கப் போவதில்லை என்றும், தான் காலி மாவட்டத்தில் ஐ.ம.சு.கூ. சார்பி லேயே போட்டியிடவுள்ளதாகவும் அறிவித்திருந்தார்.

தான் சிலாபம் சிறிலங்கா சுதந்திரக் கட்சி அமைப்பாளராகத் தொடர்ந்து இருக்கவுள்ளதுடன், எதிர்வரும் பொதுத் தேர்தலில் புத்தளம் மாவட் டத்தில் ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பிலேயே போட்டியிட வுள்ளதாகவும் நியோமல் பெரேரா தெரிவித்திருந்தார்.

கலாவெவ சிறிலங்கா சுதந்திரக் கட்சி அமைப்பாளராக நேற்று முன்தினம் நியமிக்கப்பட்ட துமிந்த திஸாநாயக்க, தாங்கள் பரம்பரை பரம்பரையாக சு.கவிலேயே போட் டியிட்டுள்ளதாகவும், யானை சின் னத்தின் கீழ் ஒருபோதும் போட்டி யிடப் போவதில்லை என்றும் கட் சிக்குள் எவ்வாறான முரண்பாடு கள் இருந்தாலும் எதிர்வரும் பொதுத் தேர்தலில் ஐ.ம.சு.கூ. சார்பில் போட்டியிடவுள்ளதுடன், ஜனாதிபதிக்கு பக்க பலமாக இருப் பதாகவும் குறிப்பிட்டிருந்தார்.

23 வருடங்கள் அமைச்சுப் பதவி களை வகித்து அரசியலில் ஈடுபட்ட போதிலும், இம்முறை தேர்தலில் போட்டியிடுவதற்கான பொருள தார ரீதியில் பலம் தன்னிடம் இல் லாமையால் அரசியலிலிருந்து ஓய்வுபெறுவதாக முன்னாள் அமைச் சர் ரெஜினோல்ட் குரே அறிவித்திருந் தார்.

கண்டி மாவட்ட முன்னாள் நாடாளு மன்ற உறுப்பினரும், உயர் கல்வி அமைச்சருமான சரத் அமுனுகம தான் இம்முறை தேர்தலில் போட் டியிடப்போவதில்லை எனக் குறிப் பிட்டுள்ளார்.

சுதர்சனி பெர்னாண்டோபுள்ளே தான் ஐ.ம.சு.கூட்டமைப்பிலேயே போட்டியிடவுள்ளதாகவும், தனக்கு ஐ.தே.கவின் கீழ் போட்டியிடுவதில் எந்தவித ஈடுபாடும் இல்லை என்ப துடன் அவ்வாறான நிலை ஏற்படு மாயின் அரசியலிலிருந்து ஓய்வு பெற்று வீட்டில் இருப்பதாகவும் அவர் குறிப்பிட்டிருந்தார்.

நல்லாட்சிக்கான ஐக்கிய தேசிய முன்னணியில் கூட்டணி அமைத்து எதிர்வரும் பொதுத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சியின் யானை சின்னத்தின் கீழ் போட்டியிடுவதா கப் பரவலாகப் பேசப்பட்டவர்கள் தங்களது நிலைப்பாட்டை அறிவித்து வரும் நிலையில், புதிய கூட்டணி மஹிந்தவை வீழ்த்தும் சக்தியாக விளங்குமா என்பதில் தற்போது சந்தேகம் ஏற்பட்டுள்ளது.

எது எவ்வாறாயினும், நல்லாட்சிக் கான ஐக்கிய தேசிய முன்னணியின் பேச்சாளர் ராஜித சேனாரட்ன களுத் துறை மாவட்டத்திலும், அர்ஜுன ரண துங்க கம்பஹா மாவட்டத் திலும், ஹிருனிகா பிரேமச்சந்திர மற்றும் சம்பிக்க ரணவக்க ஆகி யோர் கொழும்பு மாவட்டத்திலும், எம்.கே.டி.எஸ்.குணவர்தன திருகோணமலை மாவட்டத்திலும் ஐக்கிய தேசியக் கட்சியின் கீழ் யானை சின்னத்தில் போட்டியிடுவ தற்கான வேட்புமனுக்களில் கைச் சாத்திட்டுள்ளனர்.

இதேவேளை, அத்துரலிய ரத்ன தேரர் தேர்தலில் போட்டியிடுவதி லிருந்து ஒதுங்கி இருப்பதாக அறி வித்துள்ளதுடன், தேசிய பட்டியல் வழங்கப்படுமாயின் அதன்மூலம் நாடாளுமன்றத்துக்குப் பிரவேசிக்க வுள்ளதாக அறிவித்திருந்தார்.(ற–சி)

உதயன் விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111

## மரண அறிவித்தல்கள்

### திருமதி முத்தம்மா துரைராசா



கட்டுவன் தண்ணித்தாழ்வை பிறப்பிடமாகவும் கோப்பாய் தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி முத்தம்மா துரைராசா நேற்று (12.07.2015) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சீனிவாசகம் – சின்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான பொன்னையா –அன்னப் பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும், துரைராசாவின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான நல்லையா, நமசிவாயம், பவளம்மா ஆகி யோரின் அன்புச் சகோதரியும், செல்வபாரதி (முன்னாள் தாதி உத்தியோகத்தர், யாழ். போதனா வைத்தியசாலை – swiss), இராசசங்கர், ஜெயச்சந்திரன், விஜயபாரதி, பாரதி ஆகியோரின் பாசமிகு தாயும், கமலநாதன், காலஞ்சென்ற நிஷாந்தினி, விஜயச்சந்திரன் (உதயன் பணிமனை) ஆகியோரின் அன்பு மாமியும், தனுஜன், ஸ்ரீகஜன், விஜிந்தன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.07.2015) திங்கட்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனத்திற்காக இருபாலை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ஆசிரிய கலாசாலை வீதி,
கோப்பாய் தெற்கு. 021 223 0865 077 93 52 957

தகவல்- கணவர் துரைராசா
குடும்பத்தினர்.

### கந்தையா கனகரத்தினம்



கைதடி தெற்கைப் பிறப்பிடமாகவும் நீர்வேலி வடக்கை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா கனகரத்தினம் நேற்று (12.07. 2015) ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா யோகம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற வல்லிபுரம் மற்றும் சின்னத் தங்கச்சி தம்பதி யரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற புவனேஸ்வரியின் அன்புக் கணவரும், சைலஜா (கொழும்பு), கதீஜா (லண்டன்), சர்மிளா (ஜேர்மனி), சுகன்ஜா (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தந்தை யும், தங்கேஸ்வரன், ராகவன், ரவிரஞ்சன், சந்திரகுமார் ஆகியோரின் அன்பு மாமனும், டர்சிகா, அப்கிதா, அனுஸ்கா, சது ஜன், விதுஜன், யதுஜன், நிருஜன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.07.2015) திங்கட்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பி.ப 2.00 மணியளவில் சீயாக்காடு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல் லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நீர்வேலி வடக்கு,
நீர்வேலி.

தகவல்-
பிள்ளைகள்
077 447 2517

### அரியரட்ணம் பரந்தாமன்

(முத்துமாரியம்மன் ஆலய பிரதமகர்த்தா)



சண்டிலிப்பாயைப் பிறப்பிடமாகவும் உரும்பிராய் ஒஸ்காலேனை வசிப்பிடமாகவும் கொண்ட அரியரட்ணம் பரந்தாமன் நேற்று (12.07.2015) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ஒஸ்காலேன், உரும்பிராய் தெற்கு.

தகவல்-
குடும்பத்தினர்.

### விஷாந் பகீரதி

(பொலிஸ் உத்தியோகத்தர்- வவுனியா)



அச்சுவேலியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட விஷாந் பகீரதி நேற்று (12.07.2015) ஞாயிற்றுக்கிழமை அகாலமரணமானார்.

அன்னார் விஷாந்( அலுவலக உதவியாளர் சிறுவர் நீதிமன்று யாழ்ப்பாணம்) அவர்களின் அன்பு மனைவியும் ஞானச்சந்திரன் – விஜயா தம்பதியரின் அன்பு மகளும், கஜனி (மூன்றாம் வருடம் கலைப்பீடம் யாழ் பல்கலைக் கழகம் ) மயூரதாசன் ( பொலிஸ் பயிலுநர் குருநகர்) ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.07.2015) திங்கட்கிழமை அன்னாரது இல்லத்தில் நடைபெற்று மு.ப 10.00 மணியளவில் பூதவுடல் தகனத்திற்காக வல்லை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

T.P : 077 468 9470

தகவல்-
குடும்பத்தினர்

## மஹிந்த வருகை ஐ.தே.கவுக்கு நன்மை

*ஜோன் அமரதுங்க கூறுகின்றார்*

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, பொதுத்தேர்தலில் போட்டியிடுவது ஐக்கிய தேசியக்கட்சிக்கு நன்மையை பயக்கும் என்று அமைச்சர் ஜோன் அமரதுங்க தெரிவித்துள்ளார்.

மஹிந்த ராஜபக்ஷவுக்கு வேட்புமனு வழங்கியமையால் சிறிலங்கா சுதந்திரக்கட்சிக்கு நன்மை ஏற்படும் என்று பலரும் கருதினர். சிலர் மஹிந்த ராஜபக்ஷவுக்கு ஜனாதிபதி வேட்புமனுக்களை வழங்க மாட்டார் என்று குறிப்பிட்டனர்.

எனினும் ஐக்கிய தேசியக்கட்சியை பொறுத்தவரையில் ராஜபக்ஷ போட்டியிட்டாலும் போட்டியிடாவிட்டாலும் ஐக்கிய தேசியக்கட்சிக்கு நன்மையே ஏற்படும் என்று ஜோன் அமரதுங்க தெரிவித்துள்ளார். (ற)



*உதய வாழ்வு அறக்கட்டளையின் ஏற்பாட்டில் முன்னாள் போராளிகளுக்கு தையல் இயந்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன. உதயன் பணிமனையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் உதயன் பத்திரிகையின் முகாமைத்துவப் பணிப்பாளர் திருமதி யசோதை சரவணபவன் தெரிவு செய்யப்பட்டோருக்கு தையல் இயந்திரங்களை வழங்கினார். (ற-10)*

## தனக்கு தீ மூட்டிய பெண் சிகிச்சை பயனின்றி சாவு

யாழ்ப்பாணம், ஜூலை 13

தனக்குத் தானே தீமூட்டி தற்கொலை முயற்சியில் ஈடுபட்ட பெண் பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவர் யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பயனின்றி நேற்று பிற்பகல் உயிரிழந்துள்ளார்.

அச்சுவேலி பகுதியில் கடந்த வெள்ளிக்கிழமை குறித்த பெண் பொலிஸ் கான்ஸ்டபிள் தான் பதிவுத்திருமணம் செய்து கொண்ட நபரின் வீட்டிற்கு முன்னால் தனக்கு தானே மண்ணெண்ணெய் ஊற்றி எரித்து உயிரை மாய்க்க முயற்சித்தார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

அதனை அடுத்து இவர் யாழ். போதனா வைத்தியசாலையில் தீவிர சிகிச்சை பிரிவில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டிருந்த நிலையில் நேற்று இவர் சிகிச்சை பயனின்றி அங்கு உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்த பெண் பொலிஸ் கான்ஸ்டபிள் எஸ்.பகீரதி (வயது -26) என தெரியவந்துள்ளது.

இது தொடர்பில் தெரிவிக்கப்படுவதாவது,

வவுனியா பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் இவர் நீதிமன்றம் ஒன்றில் கடமையாற்றும் நபர் ஒருவரை பதிவுத் திருமணம் செய்துள்ளார் என்றும், இருவருக்கும் இடையில் ஏற்பட்ட முரண்பாட்டை அடுத்து அவரின் வீட்டிற்கு முன்னாலேயே தனக்கு தானே மண்ணெண்ணெய் ஊற்றி தீ மூட்டி தற்கொலைமுயற்சியில் ஈடுபட்டுள்ளார் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நேற்று இரவு 9.30மணியளவில் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.சம்பவம் தொடர்பாக அச்சுவேலி பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ற-ரி)

### ஐ.தே.முன்னணிக்கு

வகிக்கும் கட்சிகள் அனைத்தும் நாடாளுமன்றத்தில் சுயாதீனமாகச் செயற்படுவதற்கான சந்தர்ப்பமும் வழங்கப்படும்.

இவ்வாறு தெரிவித்தார் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க. பொதுத் தேர்தலின் பின்னர் நல்லாட்சிக்கான தேசிய முன்னணி அரசியல் கட்சியாகப் பதிவுசெய்யப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

அலரிமாளிகையில் நேற்றுக் காலை இடம்பெற்ற நல்லாட்சிக்கான ஐக்கிய தேசிய முன்னணியின் பங்காளிக்கட்சிகளுக்கு இடையிலான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டதன் பின்னர் கருத்து வெளியிட்டபோதே மேற்கண்டவாறு தெரிவித்த அவர், மேலும் தெரிவித்தவை வருமாறு:

ஜனவரி 8ஆம் திகதி புரட்சியை உறுதிப்படுத்த – முன்னோக்கிக் கொண்டுசெல்ல – நடைமுறைப்படுத்த – இன்று நாம் புதிய ஒப்பந்தங்களில் கைச்சாத்திட்டுள்ளோம். நாம் நல்லாட்சியை உருவாக்கப்போகின்றோம். இந்தப் பயணத்தில் தடைகள் ஏற்படலாம். நாம் தனித்துப் பயணிக்க பார்த்தோம். ஆனால், ராஜபக்ஷ படையணி மீண்டும் வந்து அதிகாரத்தைக் கைப்பற்ற, எமது புரட்சிக்கு எதிரான புரட்சியை ஆரம்பித்துள்ளது. இதற்கு நாம் முகங்கொடுக்க வேண்டும்.

அதனால், இந்தக் கட்சிகள் அனைத்தும் இணைந்து போட்டியிடவேண்டும் என்று முடிவுசெய்தோம். ஐக்கிய தேசியக் கட்சியின் சம்மேளனத்தில் நாம் அதை உறுதிப்படுத்தினோம். நல்லாட்சியைப் பாதுகாக்க ஐக்கிய தேசிய முன்னணியை ஆரம்பித்துள்ளோம். இது அரசியல் கட்சி என்ற அடிப்படையில் செயற்படவேண்டிய தேவை உள்ளது.

அரசியல் கட்சிகளை இப்போது பதிவுசெய்ய முடியாது. பொதுத் தேர்தலின் பின்னர் பதிவுசெய்ய முடியும். அதை நாம் செய்வோம். அதனால், இம்முறைத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சியின் யானை சின்னத்தில் போட்டியிடுகின்றோம். இதில் எவருடைய தனித்துவமும் இல்லாதுசெய்யப்படாது. அதைப் பாதுகாக்க தலைமைத்துவ சபையை உருவாக்குவோம். நாடாளுமன்றத்திலும் தனித்தனியாகச் செயற்படவும் வாய்ப்பு வழங்கியுள்ளோம்.

எமது வேலைகளை செய்துமுடிக்க மூன்றிலிரண்டு பெரும்பான்மையைப் பெறுவோம். நாட்டில் ஜனநாயகத்தை உறுதிப்படுத்தி புதுயுகத்துக்குச் செல்லவேண்டும். ஐ.தே.கவின் சின்னம் தற்காலிக பொறிமுறை மட்டுமே. பின்னர் எவ்வாறு செயற்படுவது என்பது குறித்து முடிவு செய்வோம். உங்களுக்கு நல்ல எதிர்காலத்தை உருவாக்க ராஜபக்ஷ ஆட்சியைத் துடைத்தெறிய வேண்டும். மீண்டும் அது தேவையில்லை – என்றார். (உ-சி)

### ஐ.தே. முன்னணிக்கான

ஐக்கிய நல்லாளுமைக்கான தேசிய முன்னணி (ஜாதிக ஹெல உறுமய), சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ், ஜனநாயக மக்கள் முன்னணி ஆகிய கட்சிகள் நேற்றுப் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டன.

பிரதமரின் உத்தியோகபூர்வ இல்லமான அலரி மாளிகையில் நேற்றுக் காலை சுபவேளையில் கைச்சாத்திடும் நிகழ்வு இடம்பெற்றது. ஐக்கிய தேசியக் கட்சிக்கும் – ஐக்கிய நல்லாளுமைக்கான தேசிய முன்னணிக்கு இடையிலும், ஐ.தே.கவுக்கும் – சிறிலங்கா சுதந் திரக் கட்சியின் மஹிந்த எதிர்ப்புக் குழுவுக்கும் இடையிலும் தனித்தனியாக ஒப்பந்தங்கள் செய்யப்பட்டன.

இந்த நிகழ்வில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, அமைச்சர்களான ராஜித சேனாரத்ன, ரவூப் ஹக்கீம், சம்பிக்க ரணவக்க, ரவி கருணாநாயக்க, கபீர் ஹாஸிம், கரு ஜயசூரிய, அர்ஜுன ரணதுங்க, எம்.கே.டி.எஸ்.குணவர்தன மற்றும் வண அத்துரலிய ரத்ன தேரர், ஐக்கிய தேசியக் கட்சியின் தவிசாளர் மலிக் சமரவிக்கிரம உள்ளிட்ட கட்சியின் முக்கியஸ்தர்களும் கலந்துகொண்டனர்.

பௌத்த சமய சம்பிரதாயங்களுக்கு அமைய வழிபாடு நடத்தி ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது. ஒப்பந்தத்தைக் கைச்சாத்திடுவதற்கு முன்னர் மேற்படி தலைவர்கள் அனைவரும் கலந்துரையாடல் நடத்தினர். (உ-சி)

### வேட்புமனு

வேட்புமனுக்களையும் இன்று தாக்கல் செய்யவுள்ளன.

வேட்புமனு இறுதிநாள் என்பதனால் 12 மணிக்கு முன்னர் வேட்மனுக்களைத் தாக்கல் செய்யுமாறும், ஊர்வலங்கள் நடத்துவதிலிருந்து விலகி இருக்குமாறும் தேர்தல்கள் செயலகம் அறிவித்துள்ளது.

யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி நிர்வாக மாவட்டங்களை உள்ளடக்கிய யாழ்ப்பாண தேர்தல் மாவட்டத்தில் இதுவரை 5 அரசியல் கட்சிகளும் 3 சுயேச்சைக் குழுக்களும் வேட்புமனுக்களைத் தாக்கல் செய்துள்ளன. வவுனியா, மன்னார், முல்லைத்தீவை உள்ளடக்கிய வன்னித் தேர்தல் மாவட்டத்தில் 5 அரசியல் கட்சிகளும் 2 சுயேச்சைக் குழுக்களும் வேட்பு மனுக்களைத் தாக்கல் செய்துள்ளன.

வேட்பு மனுக்களைத் தாக்கல் செய்வதற்கான இறுதி நாள் இன்றாகும். இன்று நண்பகல் 12 மணியுடன், வேட்பு மனுத் தாக்கல் முடிவடையவுள்ளது. இதன் பின்னர் 12.30 மணியிலிருந்து 1.30 மணி வரையில், வேட்பு மனுத் தாக்கல் செய்த அரசியல் கட்சிகள் மற்றும் சுயேச்சைக் குழுக்களுடன் தெரிவத்தாட்சி அலுவலர்கள் கலந்துரையாடல் நடத்தவுள்ளனர்.

இதன்போது, ஆட்சேபனைகள் எழுப்ப முடியும். இதனடிப்படையில், தேர்தலில் போட்டியிடும் அரசியல் கட்சிகள் மற்றும் சுயேச்சை குழுக்கள் எவை என்பது அறிவிக்கப்படும். அத்துடன் சுயேச்சைக் குழுக்களுக்கான சின்னமும் வழங்கப்படும்.

இதேவேளை, வேட்புமனு தாக்கல் செய்யப்பட்ட பின்னர் ஒன்றரை மணித்தியாலம்வேட்புமனுவுக்கான ஆட்சேபனைகள் கோரப்படும். பின்னர், அது தொடர்பில் தெரிவத்தாட்சி அதிகாரியால் இறுதித் தீர்மானம் அறிவிக்கப்படவுள்ளதுடன், நிராகரிக்கப்பட்ட வேட்புமனுக்களும் அறிவிக்கப்படும்.

வேட்பாளர்களுக்கான விருப்பு எண்கள் வழங்கும் நடவடிக்கை எதிர்வரும் 15ஆம் மற்றும் 16ஆம் திகதிகளில் பூர்த்திசெய்யப்படுமெனத் தேர்தல்கள் செயலகம் அறிவித்துள்ளது.

இந்த நிலையில், சூழலுக்குப் பாதிப்பு ஏற்படாத வகையில், தேர்தல் பரப்புரைகளை முன்னெடுக்குமாறு, அரசியல் கட்சிகளுக்கு வலியுறுத்தப்பட்டுள்ளது.

வேட்புமனுத் தாக்கல் இன்று முடிவடைந்ததும் நாளை முதல் பிரதான அரசியல் கட்சிகள் தமது பரப்புரை நடவடிக்கைகளை ஆரம்பிக்கவுள்ளன. (உ-5)

### சு.கட்சித்

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி இன்று வேட்புமனுப் பட்டியலை ஒப்படைப்பதைத் தொடர்ந்து ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இது தொடர்பில் விசேட உரை ஆற்றவுள்ளார். அதில் அதிர்ச்சியளிக்கும் அம்சங்கள் அடங்கியிருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

கட்சித் தலைவர் பதவியைவிட்டு விலகியதன் பின்னர் ஜனாதிபதி சுயாதீனமான நபராக செயற்படவுள்ளார் எனத் அறிய வருகிறது.ஜனாதிபதியின் இந்தத் திடீர் முடிவு கொழும்பு அரசியலில் மேலும் பிரளயத்தை ஏற்படுத்தும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. (உ-சி)

### உலக வங்கி

நடத்திய சந்திப்புக்கள், கொழும்பு அரசியல் வட்டாரத்தில் சலசலப்பை ஏற்படுத்தியுள்ளதாக, ஆங்கில ஊடகம் ஒன்று நேற்றுச் செய்தி வெளியிட்டுள்ளது.

அமெரிக்காவுக்குப் பயணத்தை மேற்கொண்டுள்ள முதலமைச்சர், அங்கு வட அமெரிக்காவின் தமிழ் சங்கமம் நிகழ்வில் பங்கேற்றிருந்தார். அதன் பின்னர், உலக வங்கி அதிகாரிகளுடன் முதலமைச்சர் பேச்சுக்களை நடத்தியுள்ளார்.

இந்தப் பேச்சுக்கள் தொடர்பான விவரங்கள் ஏதும் கிடைக்காத போதிலும், முதலமைச்சர் ஒருவர் சர்வதேச முகவர் அமைப்பு ஒன்றுடன் நேரடியாக பேச்சு நடத்தியுள்ளது குறித்து கொழும்பு அர சியல் மட்டத்தில் கேள்விகள் எழுந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

முதலமைச்சர் அமெரிக்காவில் இருந்தபோது, முதலமைச்சர் அலுவலகத்தினால் உலக வங்கியுடனான சந்திப்புக்கு அனுமதி கோரப்பட்டதாக, கொழும்பில் உள்ள உலக வங்கியின் பணியகம் தெரிவித்துள்ளது.

இத்தகைய சூழலில், சந்திப்புகளுக்கான கோரிக்கைகள் விடுக்கப்படும்போது, எப்போதுமே அதற்குச் சாதகமாக பதிலளிக்கப்படும். உலக வங்கியின் இலங்கைக்கான பணிப்பாளர் தற்போது வொசிங்டனில் இருக்கிறார். அவரும், பிராந்திய உதவித் தலைவரும் முதலமைச்சரைச் சந்தித்திருக்கலாம், என்றும் கொழும்பில் உள்ள உலக வங்கியின் பணியகம் தெரிவித்துள்ளது. சந்திப்புக்கான நோக்கம் அல்லது காரணங்கள் குறித்து இதுவரை வெளியிடப்படவில்லை. (உ-5)

### காத்துக்

அட்மிரல் வசந்த கரன்னகொடவும் அடங்குகின்றார்.

கொழும்பு உள்ளிட்ட இடங்களில் தமிழ் இளைஞர்களை கடத்தி கப்பம் கோரியது மற்றும் இரகசிய தடுப்பு முகாம்களை வைத்திருந்தமை, படுகொலைகளில் ஈடுபட்டமை உள்ளிட்ட குற்றச்சாட்டுகளில் இவரது பெயரும் உள்ளடக்கப்பட்டுள்ள நிலையிலேயே தேசியப் பட்டியல் ஆசனத்தை கோரியிருக்கிறார் மஹிந்த ராஜபக்ஷ.

மஹிந்த ராஜபக்ஷவினால் தேசியப் பட்டியலுக்குப் பரிந்துரைக்கப்பட்டுள்ளோரின் பட்டியலில், முன்னாள் வெளிவிகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ், ஐ.தே.க.வின் முன்னாள் பொதுச்செயலர் திஸ்ஸ அத்தநாயக்க, முன்னாள் இராஜ தந்திரி தயான் ஜெயதிலக, முன்னாள் பிரதம நீதியரசர் சரத் என். சில்வா, ஊடகத்துறை அமைச்சின் முன்னாள் செயலர் சரித்த ஹேரத், அரசமைப்புச் சட்ட நிபணர் ஜெயம்பதி விக்கிரமரத்ன, விஞ்ஞானியும் வெளியீட்டாளருமான தேவிந்து குமாரதுங்க, ஆகியோர் இடம்பெற்றுள்ளனர் எனவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதற்கிடையே, தேசியப் பட்டியலில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு இடமில்லை என்றும், புலமையாளர்கள் மட்டுமே அதில் இடம்பெறுவர் என்றும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார் என்று முன்னர் செய்திகள் வெளியாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (உ-5)

### ஐ.தே.முன்னணிக்கு மைத்திரி

மற்றும் ரவூப் ஹக்கீம் ஆகியோரின் கருத்துக்கள் இந்தப் புதிய கூட்டணிக்கு ஜனாதிபதி மைத்திரி பால சிறிசேனவின் ஆதரவு இருப்பதை உறு திய செய்வதாக இருந்தது.

அமைச்சர் சம்பிக்க ரணவக்க கருத்து வெளியிடுகையில்,

"ஓகஸ்ட் 17ஆம் திகதி இந்தக் கூட்டணியுடன் மாற்றமடைந்த சிறிலங்கா சுதந்திரக் கட்சி உறுப் பினர்களையும் இணைத்துக் கொள்ள ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் தலைமைத்துவத் துக்கு முடியும் என நான் நினைக் கின்றேன்" – எனத் தெரிவித்தி ருந்தார்.

"ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான புதிய நாடாளுமன்றத்தில், 100 நாள் வேலைத் திட்டத்தில் செய்ய முடியாது போனதைச் செய்வோம். அதற்காக ஓகஸ்ட் 17இல் எமக்கு ஆணை வழங்குங்கள்" – என்று அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்தார்.

நிகழ்வில் கருத்து வெளியிட்ட அமைச்சர் ரவூப் ஹக்கீம், "இவ்வாறானதொரு கட்டம் வரும் என்பதை அவர் (ஜனாதிபதி) உணராமலிருக்க வாய்ப்பில்லை. ஏனெனில், தனக்குள்ள நெருக்குவாரங்களுக்கு மத்தியில் தன்னால் இயன்றளவு கையாண்டு தனது கட்சியையும் பாதுகாத்து, நாங்கள் உருவாக்கிய யுகப் புரட்சியையும் பாதுகாக்கலாம் என்ற நம்பிக்கையில் அவர் செயற்பட்டிருக்கலாம். ஆனால், ஒருசில பிற்போக்குச் சக்திகள் அவரை செயற்படவிடாமல் தடுத்தமை இந்த நிலையை ஏற்படுத்தியிருக்கிறது. அந்தப் பிற்போக்குச் சக்திகளுடன் தொடர்ந்து பயணிப்பது ஆபத்தானது என்பதை அவர் உணர்ந்து, யுகப் புரட்சியைப் பாதுகாப்பதற்காக தன்னை அர்ப்பணிப்பார் என நாம் எதிர்பார்க்கின்றோம்" – எனத் தெரிவித்தார். (உ-சி)

# படையினருக்கு சர்வதேசப் பயிற்சி

## ஜனாதிபதி தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 13
ஜனாதிபதியின் வெளிநாட்டுச் சுற்றுப்பயணங்களின்போது பாதுகாப்புப் படையினர்களுக்கும் சர்வதேச பயிற்சி வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.
கட்டுநாயக்காவில் உள்ள இலங்கை விமானப்படை தளத்துக்குப் பயணம் செய்தபோதே ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இதனைத் தெரிவித்தார்.
கடந்த தேர்தலை அடுத்து ஜனாதிபதியாக தான் பொறுப்பேற்ற நிலையில் மேற்கொள்ளப்பட்ட வெளிநாட்டு பயணங்களின் போது வெளிநாட்டுத் தலைவர்களுடன் இது குறித்து பேச்சு நடத்தியதன் மூலமாக இந்த பயிற்சியை வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.



தாய்நாட்டைக் காப்பதற்காக தமது உயிரை தியாகம் செய்த வீரர்களுக்கு அளிக்கப்படும் மரியாதை மற்றும் அங்கீகாரம் என்பவற்றை மேலும் வலுப்படுத்த வேண்டும் .
பாதுகாப்பு படையினருக்கு மட்டுமல்லாது அவர்களின் குடும்பங்களுக்கும் தமது அரச சேவைகளை வழங்கும் என இதன்போது ஜனாதிபதி உறுதியளித்துள்ளார். (த)

## ஐ.தே.கவின் பரப்புரை கண்டியில் ஆரம்பம்


கொழும்பு, ஜூலை 13
நாடாளுமன்ற தேர்தலின் பரப்புரை நடவடிக்கைகளை ஐக்கிய தேசியக் கட்சி கண்டியிலும், ஜே.வி.பி மஹரகமவிலும் எதிர்வரும் 14ஆம் திகதி ஆரம்பிக்கவுள்ளன.
ஐக்கிய தேசியக் கட்சி தனது தேர் தல் பரப்புரையின்முதற்கட்டப்பணி களைக் கண்டியில் ஆரம்பிக்கவுள்ளது.
பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் ஐக்கிய தேசியக் கட்சி நாடு முழுவதிலும் தனது பரப்புரைகளை மேற்கொள்ள திட்டமிட்டுள்ளது.
கட்சியின் பிரதித் தலைவர் சஜித் பிரேமதாஸ உள்ளிட்ட முக்கிய தலைவர்கள் ஒரு நாளைக்கு குறைந்தது நான்கு பரப்புரைக் கூட்டங்களில் பங்கேற்கவுள்ளதுடன்,கட்சியின் இறுதிக் கூட்டம் ஓகஸ்ட் 14ஆம் திகதி மருதானையில் நிகழ்த்தத் திட்டமிட்டுள்ளனர்.
இதேவேளை– ஜே.வி.பி தனது பரப்புரை நடவடிக்கைகளை மஹரகமவில் கட்சியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க தலைமையில் நடத்தத் திட்மிட்டுள்ளனர்.
இவரின் தலைமையில் சுமார் 100 கூட்டங்கள் வரையில் நடத்தப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளதுடன், தொகுதிவாரியாக சுமார் 5000பரப்புரைக் கூட்டங்களும் நடத்தப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (த)

## இத்தாலி செல்ல முயன்ற யாழ். இளைஞன் கைது

கொழும்பு, ஜூலை 13
போலி கடவுச்சீட்டைப் பயன்படுத்தி இத்தாலி செல்ல முயற்சித்த ஒருவர் கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் வைத்து கடந்த வெள்ளிக்கிழமை இரவு 08.35 மணியளவில் கைது செய்யப்பட்டுள்ளார்.
குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தின் கட்டுநாயக்கப் பிரிவு உத்தியோகத்தர்களுக்குக் கிடைத்த தகவலையடுத்துச் சந்தேகநபர் கைது செய்யப்பட்டதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.
கைது செய்யப்பட்டவர் சுன்னாகம் பகுதியைச் சேர்ந்த 23 வயதான இளைஞர் எனக் குறிப்பிடும் பொலிஸார், சந்தேகநபரை நீர்கொழும்பு நீதிவானிடம் முன்னிலைப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் தெரிவித்தனர். (த)

## தேர்தல் விதிமுறை மீறல்கள்; இதுவரை 115 முறைப்பாடு

கொழும்பு, ஜூலை 13
தேர்தல் வன்முறைகள் மற்றும் விதி மீறல்கள் தொடர்பில் இதுவரை 115முறைப்பாடுகள் பதிவாகியிருப்பதாக 'கபே' அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ரஞ்சித் கீர்த்தி தென்னக்கோன் தெரிவித்துள்ளார்.
பொதுச்சொத்துகள் பயன்படுத்தல்,அரச ஊழியர்கள் இடமாற்றம், மற்றும் பதவி உயர்வு தொடர்பில் இதுவரை 70 முறைப்பாடுகள் பதிவாகியுள்ளதாகவும் நிறைவேற்றுப் பணிப்பாளர் மேலும் தெரிவித்துள்ளார்.
இதேவேளை– பொதுத்தேர்தலில் போட்டியிடும் மாகாணசபை மற்றும் உள்ளூராட்சி மன்ற பிரதிநிதிகள்அரச சொத்துக்களை துஷ்பிரயோகம் செய்யக் கூடாது என கபே அமைப்பின் நிறைவேற்று பணிப்பாளர் இதன்போது தெரிவித்தார்.(த)



மேல்மாகாண சபை உறுப்பினரும் முன்னாள் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டணி உறுப்பினருமான ஹிருனிகா பிரேமசந்திர எதிர்வரும் பொதுத்தேர்தலில் போட்டியிட கடந்த வெள்ளிக்கிழமை ஐ.தே.கவில் யானை சின்னத்தில் வேட்பிமனுவில் கைச்சாத்திட்டார். (த–10)

## 6 லட்சம் பேர் கேகாலையில் வாக்களிக்க தகுதி

எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் கேகாலை மாவட்டத்தில் 6 இலட்சத்து 49 ஆயிரத்து 878 பேர் வாக்களிக்க தகுதி பெற்றுள்ளதாக கேகாலை மாவட்ட செயலாளர் தெரிவித்துள்ளார்.
எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தல் தொடர்பாக கேகாலை மாவட்டத்தின் செயற்பாடுகள் குறித்து அவர் தகவல் தெரிவிக்கும் போதே இவ்வாறு தெரிவித்துள்ளார்.
அத்துடன் கேகாலை மாவட்டத்தில் 569 வாக்களிப்பு நிலையங்கள் அமைக்கப்படவுள்ளதுடன், தேர்தல் கடமைகளுக்காக 9 ஆயிரத்து 500 அரச அதிகாரிகள் கடமையில் ஈடுபடுத்தப்படவுள்ளனர். ற)

## தேர்தல் தொடர்பில் வாசுவுக்கு சந்தேகம்

கொழும்பு, ஜூலை 13
ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் வேட்புமனுவில் கையொப்பமிட்டாலும் நாடாளுமன்ற தேர்தல் தொடர்பில் தனக்குச் சந்தேகம் ஏற்பட்டுள்ளதாக வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார்.
ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பில் போட்டியிட வேட்பு மனுவில் கையொப்பமிட்டுள்ள ஜனாதிபதி தரப்பினர் தற்போது ஐக்கிய தேசியக் கட்சியில் வேட்பு மனு பெற்றுக் கொள்ளத் தீர்மானம் மேற்கொண்டு வருகின்றனர்.
அத்துடன் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் நிலைப்பாட்டில் மாற்றம் காணப்படுவதனாலும் இடதுசாரி முன்னணியின் தலைவர் வாசுதேவ நாணயக்கார இந்தச் சந்தேகத்தை வெளியிட்டுள்ளார்.
இலங்கை வரலாற்றில் இவ்வாறான சம்பவங்கள் இடம்பெற்றுள்ளதாலும்,வேட்பு மனுப் பட்டியலை சுதந்திரக் கட்சி இதுவரை ஒப்படைக்காமையினாலும் தனக்கு இந்தச் சந்தேகம் ஏற்பட்டுள்ளதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.
இதேவேளை– ஏதேனும் மாற்றம் ஏற்பட்டால் தாம் வீதியில் இறங்கி மக்களுடன் போராட்டம் மேற்கொள்ளபோவதாக அவர் குறிப்பிட்டார். (த)

## வவுனியா பிரஜைகள் குழுத் தலைவருக்கு ரி.ஐ.டியினர் 2 ஆம் முறை அழைப்பாணை

வவுனியா, ஜூலை 13
வவுனியா மாவட்ட பிரஜைகள் குழுவின் தலைவர் கிருஷ்ணப்பிள்ளை தேவராசா (வயது–62) அவர்கள், பயங்கரவாத தடுப்புப் பிரிவின் (ரி.ஐ.டி) விசாரணைக்காக இரண்டாவது தடவையாகவும் கொழும்புக்கு அழைக்கப்பட்டுள்ளார்.
வவுனியா வடக்கு பிரதேசம் நெடுங்கேணி நகரத்தில் அமைந்துள்ள அவரது பத்திரிகை விற்பனை நிலையத்துக்கு, நேற்றுமுன்தினம் பி.ப. 3.00 மணியளவில் சிவில் உடையில் சென்ற மூவர், தாம் பயங்கரவாதத் தடுப்புப்பிரிவின் வவுனியா அலுவலகத்திலிருந்து வந்திருப்பதாகவும், கொழும்பில் அமைந்துள்ள பயங்கரவாத தடுப்புப்பிரிவின் 02ஆம் மாடிக்கு, நேற்றுக் காலை சென்று அதிகாரி விமலசூரியவை சந்திக்குமாறு அறிவுறுத்தி, அதற்குரிய அழைப்பாணைக் கடிதத்தை அவரிடம் கொடுத்துள்ளனர்.
அவர்களிடம் கொழும்பு செல்வதற்கான கால அவகாசம் போதாது என்று கி.தேவராசா கூறியதையடுத்து, அங்கிருந்துகொண்டே தமது தொலைபேசியில் கொழும்புக்கு அழைப்பை ஏற்படுத்தி பேசிய அவர்கள், எதிர்வரும் புதன்கிழமை மு.ப. 10.00 மணிக்கு கொழும்பு சென்று அதிகாரி விமலசூரியவை சந்திக்குமாறு கூறிவிட்டுச் சென்றுள்ளனர். ஏற்கனவே கி.தேவராசா, பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினால் கடந்த 30.03.2015 அன்று விசாரணைக்காக அழைக்கப்பட்டிருந் தார்.
கடந்த வருடம் 10.10.2014 வெள்ளிக்கிழமை (ஈழ பெண்கள் எழுச்சி நாள்) அன்று வவுனியா மாவட்ட நீதிமன்றம் முன்பாக ஜெயக்குமாரியினதும், ஏனைய அரசியல் கைதிகளினதும் விடுதலையை வலியுறுத்தியும், சட்டத்துக்கு முரண... கைதுகள், தடுத்து வைத்தல்... கண்டித்தும் கவனவீர்ப்புப் போ... டத்தை வவுனியா மாவட்ட பி... கள் குழு நடத்தவிருந்த நிலை... குழுவின் தலைவர் கி.தேவ... மீது 08.10.2014 அன்று நெடுங்கேணி பிரதான இரா... முகாமுக்கு சமீபமாக வைத்து... புக் கம்பிகளால் கொலை மு... தாக்குதல் நடத்தப்பட்டு பா... காட்டுக்குள் அவர் தூக்கி வீச... ருந்தபோது அப்பகுதி மக்க... மீட்கப்பட்டு வைத்தியசாலையில்... கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்க...

## மஹிந்தவுக்கு எதிராக குதிக்கிறார் பொன்சேகா

கொழும்பு, ஜூலை 13
நாடாளுமன்ற தேர்தலில் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு எதிராகக் குருநாகல் மாவட்டத்தில் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகாவை நிறுத்தவுள்ளதாக அரசியல்வட்டாரங்களில்பேசப்படுகின்றது.
ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் புதிய முன்னணியில் இணைந்த வர்களால் இந்த அழைப்பு சரத் பொன்சேகாவுக்கு விடுக்கப்பட்டுள்ளது.
ஐக்கிய தேசிய நல்லாட்சி முன்னணியின் கீழ் குருநாகல் மாவட்டத்தில் மஹிந்தவுக்கு போட்டியாக களமிறங்குமாறு பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகாவுக்கு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாகத் தெரியவந்துள்ளது. (த)

## தொகுதி அமைப்பாளர்களா... சு.கவில் மூன்று பேர் நியமன...

கொழும்பு, ஜூலை 13
நாடாளுமன்றத் தேர்தல் இடம்பெறவுள்ள நிலையில் சுதந்திரக் கட்... தொகுதி அமைப்பாளர்களாக மூவர் புதிதாக நியமிக்கப்பட்டுள்ளன... ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவால் இந்த நியமனம் வழ... பட்டுள்ளது. பசறை தொகுதியின் அமைப்பாளராக இருந்த வடி... சுரேஸின் இடத்துக்கு சமர சம்பத் தஹநாயக்க மாற்றம் செய்யப்பட்டுள்... ஹப்புத்தளை தொகுதியின் அமைப்பாளராக இருந்த உதித்த லெ... பண்டாரவின் இடத்துக்கு சுமித் சமயதாச நியமிக்கப்பட்டுள்ளார்.
இதனை தவிர ரத்தோட்டை தொகுதியின் அமைப்பாளராக நந்... ஏக்கநாயக்க நியமிக்கப்பட்டுள்ளார்.

# ஐந்நூறு புள்ளிகளை எட்டி யாழ். கல்விவலயம் அசத்தல்

வவுனியா, ஜூலை 13
வடமாகாண கல்வித்திணைக் களத்தினால் நடத்தப்பட்டுவரும் எட்டாவது தடகளத்தொடரின் நான்காவது நாளான நேற்றையதினம் மாலை 5 மணித்தரப்படுத்தலின்படி யாழ்ப்பாணம் கல்விவலயம் 514 புள்ளிகளைப் பெற்றுமுதலிடத்தில்உள்ளது.
யாழ்ப்பாணத்துக்கு சவால் விட்டுக்கொண்டிருந்த வலிகாமம் கல்வி வலயத்துக்கு நேற்றைய நான்காம்நாள் அவ்வளவு சாதகமாக அமையவில்லை. மன்னார் கல்வி வலயம் திடீர் எழுச்சி கண்டு புள்ளிப்பட்டியலில் இரண்டாவது இடத்தைக் கைப்பற்றியுள்ளது. ஆனால் முதலிடத்தைக் கைப்பற்றிய யாழ்ப்பாணத்துக்கும் இரண்டாவது இடத்தைக் கைப்பற்றியுள்ள மன்னாருக்குமிடையே 110 புள்ளிகள் வித்தியாசம் பேணப்படுகிறது. இதன்படி 404 புள்ளிகளுடன் மன்னார் இரண்டாவது இடத்திலும் 396 புள்ளிகளுடன் வலிகாமம் மூன்றாவது இடத்திலும் 288 புள்ளிகளுடன் முல்லைத்தீவு நான்காவது இடத்திலும் 255 புள்ளிகளுடன் வடமராட்சி ஐந்தாவது இடத்திலும் உள்ளன.
ஆறு தொடக்கம் பத்து இடங்களில் முறையே கிளிநொச்சி , வவுனியா தெற்கு, வவுனியா வடக்கு, துணுக்காய், தென்மராட்சி ஆகிய கல்வி வலயங்கள் உள்ளன. தடகளத் தொடரின் ஐந்தாவதும் இறுதியுமானநாள் இன்றாகும். (ம)



வடமாகாணக் கல்வித்திணைக்களம் நடத்தும் மாகாணமட்ட தடகளத் தொடரின் நான்காம் நாளான நேற்றையதினம் நடைபெற்ற நிகழ்வுகளில் ஒன்றான 19வயதுக்குட்பட்ட ஆண்களுக்கான அஞ்சலோட்டத்தின் ஒரு பதிவு. (ம)

# 15வயதுப் பிரிவு குண்டுபோடுதல் யாழ்ப்பாணக் கல்லூரியிடம் தங்கம்

வவுனியா, ஜூலை 13
வடமாகாணக் கல்வித்திணைக் களம் நடாத்தும் மாகாணமட்ட தடகளத் தொடரின் நான்காம் நாளான நேற்றையதினம் நடைபெற்ற நிகழ்வுகளில் ஒன்றான 15வயதுக்கு உட்பட்ட பெண்களுக்கான குண்டுபோடுதலில் யாழ்ப்பாணக் கல்லூரி தங்கத்தைக் கைப்பற்றியது.
யாழ்ப்பாணக் கல்லூரி சார்பாக களமிறங்கிய பி.டிலக்சனா 7.38 மீற்றர் என்னும் தூரத்தை பதிவு செய்து தனது பாடசாலையை தங்கத்துக்கு அழைத்துச் சென்றார். யாழ். வேம்படி பெண்கள் உயர்தரப் பாடசாலை சார்பாக களமிறங்கிய ஜி.பைரவி 6.92 மீற்றர் என்னும் தூரத்தினைப் பதிவுசெய்து வெள்ளிப் பதக்கத்தையும் கிளிநொச்சி மகா வித்தியாலயத்தின் சார்பாக களமிறங்கிய எஸ்.சாரண்யா 6.67 மீற்றர் என்னும் தூரத்தைப் பதிவு செய்து வெண்கலப்பதக்கத்தையும் கைப்பற்றினர். (ம)

# 400மீற்றர் ஓட்டம் மவிலங்கேணியிடம் தங்கம்

வவுனியா, ஜூலை 13
வடமாகாணக் கல்வித்திணைக் களம் நடத்தும் மாகாணமட்ட தடகளத் தொடரின் நான்காம் நாளான நேற்றையதினம் நடைபெற்ற நிகழ்வுகளில் ஒன்றான 15வயதுக்கு உட்பட்ட ஆண்களுக்கான 400மீற்றர் ஓட்டத்தில் மன்னார் மவிலங்கேணி றோ.க.த.க. பாடசாலை சாதனையுடன் தங்கத்தைத் தட்டிச் சென்றது. மவிலங்கேணி சார்பாக களமிறங்கிய எஸ்.கனிஸ்ரன் கடந்த 2012 ஆம் ஆண்டில் படைக்கப்பட்ட 58.2 நிமிடங்கள் என்ற சாதனையை தகர்த்து 57.3 நிமிடங்களாக தனது பெயரில் மாற்றிக்கொண்டார். வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயம் சார்பாக களமிறங்கிய எஸ். சாரங்கன் 58.3 நிமிடங்களில் ஓடிமுடித்து வெள்ளிப் பதக்கத்தையும் யாழ்ப்பாணம் கொற்றாவத்தை அமெரிக்கன் மிஷன் கல்லூரி சார்பாக களமிறங்கிய எம்.திசாந் 58.6 நிமிடங்களில் ஓடிமுடித்து வெண்கலப்பதக்கத்தையும் கைப்பற்றினர். (ம)

# 21 வயது 200 மீற்றர் ஓட்டத்தில் சாதனையுடன் தங்கத்தைக் கைப்பற்றியது மத்தி

வவுனியா, ஜூலை 13
வடமாகாணக் கல்வித்திணைக் களம் நடாத்தும் மாகாணமட்ட தடகளத் தொடரின் நான்காம் நாளான நேற்றையதினம் நடைபெற்ற நிகழ்வுகளில் ஒன்றான 21 வயதுக்கு உட்பட்ட ஆண்களுக்கான 200 மீற்றர் ஓட்டத்தில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி சாதனையுடன் தங்கத்தை தனதாக்கியது.
மத்தியின் சார்பாக களமிறங்கிய ஜெ.அபிமன் கடந்த 2012ஆம் ஆண்டில் படைக்கப்பட்டிருந்த சாதனையான 23 செக்கன்கள் மற்றும் 5 மில்லி செக்கன்கள் என்ற பதிவை சமன்செய்து மத்தியிடம் இந்த தங்கத்தை ஒப்படைத்தார். மன்னார் முருங்கன் மத்திய மகா வித்தியாலயத்தைச் சேர்ந்த பி.பெர்னான்டோ 24 செக்கன்கள் 4 மில்லி செக்கன்கள் என்ற பதிவுடன் வெள்ளிப்பதக்கத்தையும் வவுனியா புதுக்குளம் மகா வித்தியாலயத்தைச் சேர்ந்த பி.ஜெயந்தன் 25 செக்கன்கள் ஒரு மில்லி செக்கன் என்ற பதிவுடன் வெண்கலப் பதக்கத்தையும் கைப்பற்றினர். (ம)



# நானாட்டானுக்கும் தங்கம்

வவுனியா, ஜூலை 13
வடமாகாணக் கல்வித்திணைக் களம் நடத்தும் மாகாணமட்ட தடகளத் தொடரின் நான்காம் நாளான நேற்றையதினம் நடைபெற்ற நிகழ்வுகளில் ஒன்றான 21வயதுக்கு உட்பட்ட பெண்களுக்கான முப்பாய்ச்சலில் மன்னார் நானாட்டான் மகா வித்தியாலயம் தங்கத்தைக் கைப்பற்றி அசத்தியுள்ளது.
நானாட்டானின் மாணவியான யூலியற் ஜமினி 10.22 மீற்றர் தூரத்துக்குப் பாய்ந்து தங்கத்தைத் தட்டிச் சென்றார். மற்றொரு மன்னார் மாவட்ட மாணவியான கே.கஜேந்தினி 9.83 தூரத்துக்குப் பாய்ந்து வெள்ளிப் பதக்கத்தையும் சாவகச்சேரி இந்துக் கல்லூரியின் மாணவியான கே.கலைமகள் 9.34 மீற்றர் தூரத்துக்குப் பாய்ந்து வெண் கலப்பதக்கத்தையும் கைப்பற்றினர். (ம)

# தடைதாண்டலில் தடைகளைத்தாண்டியது மன்னார் உயிலங்குளம் மகா வித்தியாலயம்




வவுனியா, ஜூலை 13
வடமாகாணக் கல்வித்திணைக் களம் நடத்தும் மாகாணமட்ட தடகளத் தொடரின் நான்காம் நாளான நேற்றையதினம் நடைபெற்ற நிகழ்வுகளில் ஒன்றான 17வயதுக்கு உட்பட்ட ஆண்களுக்கான 400 மீற்றர் தடைதாண்டலில் மன்னார் உயிலங்குளம் றோமன் கத்தோலிக்க தமிழ்க்கலவன் பாடசாலை தங்கத்தைக் கொண்டு சென்றது.
மன்னார் உயிலங்குளம் றோமன் கத்தோலிக்க தமிழ்க்கலவன் பாடசாலையை பிரதிநிதித்துவப் படுத்திக் களமிறங்கிய ரி.ஜீவகன் ஒரு நிமிடம் 3 செக்கன்கள் 4 மில்லிசெக்கன்களில் இலக்கை அடைந்து தங்கத்தில் தனது பாடசாலையைப் பிரதிநிதித்துவப் படுத்தினார். வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயத்தைப் பிரதிநிதித்துவப்படுத்திக்களமிறங்கிய கே.கபிலவன் 1 நிமிடம் 4 செக்கன்கள் 4 மில்லி செக்கன்களில் இலக்கையடைந்து வெள்ளிப் பதக்கத்தையும் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி சார்பாக களமிறங்கிய எஸ்.ஜதுர்சன் ஒரு நிமிடம் 4 செக்கன்கள் 8 மில்லி செக்கன் களில் இலக்கையடைந்து வெண்கலப் பதக்கத்தையும் தமதாக்கினர். (ம)

# கோலூன்றிப் பாய்தலில் மகாஜனா பதக்க வேட்டை

வவுனியா, ஜூலை 13
வடமாகாணக் கல்வித்திணைக் களம் நடத்தும் மாகாணமட்ட தடகளத் தொடரின் நான்காம் நாளான நேற்றையதினம் நடைபெற்ற நிகழ்வுகளில் ஒன்றான 19வயதுக்கு உட்பட்ட பெண்களுக்கான கோலூன்றிப் பாய்தலில் புதிய சாதனையுடன் மூன்று பதக்கங்களையும் கைப்பற்றி வரலாறு படைத்தது மகாஜனாக் கல்லூரி.
மகாஜனாவைப் பக்காவாக பிரதிநிதித்துவம் செய்த ஜெ.அனித்தா 2012ஆம் ஆண்டு நிலைநாட்டப்பட்டு கடந்த மூன்று ஆண்டுகளாக உயிர்ப்புடன் இருந்த 3.1மீற்றர் என்ற சாதனையை தகர்த்து 3.15 ஆக பதிவுசெய்து தங்கத்தைக் கைப்பற்றினார். மகாஜனாவின் மற்றொரு மாணவியான எஸ்.யஷானி 2.7 மீற்றர் என்ற பதிவுடன் வெள்ளிப் பதக்கத்தையும் அதே பாடசாலையின் மற்றொரு மாணவியான ஆர்.அபர்னா 2.3 என்ற பதிவுடன் வெண்கலப்பதக்கத்தையும் கைப்பற்றினர். (ம)



வடமாகாணக் கல்வித்திணைக்களம் நடாத்தும் மாகாணமட்ட தடகளத் தொடரின் நான்காம் நாளான நேற்றையதினம் நடைபெற்ற நிகழ்வுகளில் ஒன்றான 19வயதுக்குட்பட்ட ஆண்களுக்கான தடைதாண்டலின் ஒரு பதிவு. (ம)

# ஆஷஸ் தொடரில் ஆஸி. சரண்

## இங்கிலாந்து 169 ஓட்டங்களால் அபார வெற்றி




ஆஸ்திரேலியா இங்கிலாந்து அணிகளுக்கிடையே நடைபெறும் 5 டெஸ்ட் ஆட்டங்களைக்கொண்ட டெஸ்ட் தொடரின் முதலாவது டெஸ்ட்டில் இங்கிலாந்து 169 ஓட்டங்களால் அபார வெற்றிபெற்றுள்ளது.


நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்றுக் முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்து களமிறங்க முதல் இன்னிங்ஸிற்காக இங்கிலாந்து சகல இலக்குகளையும் இழந்து 430 ஓட்டங்களைப் பெற்றது. பந்து வீச்சில் ஆஸ்திரேலியா சார்பாக ஸ்ராக் 5 இலக்குகளையும் ஹசில் வூட் 3 இலக்குகளையும் லையன் 2 இலக்குகளையும் கைப்பற்றினர்.

412 ஓட்டங்களைப் பெற்றால் முன்னிலை பெற்றுவிடலாம் என்ற நிலைப்பாட்டில் களமிறங்கிய ஆஸ்திரேலியாவுக்கு முன்வரிசை வீரர்கள் சிறந்த அடித்தளம் அமைத்துக் கொடுத்தாலும் பின்வரிசை வீரர்கள் பலமான நிலையில் தொடரத்தவற ஆஸியின் ஆட்டம் 308 ஓட்டங்களில் அடங்கிப்போனது. பந்துவீச்சில் இங்கிலாந்து சார்பாக அன்டர்சன் 3 இலக்குகளையும் புரோட், வூட், மொயீன் அலி மூவரும் தலா 2 இலக்குகளையும் ஸ்ரோக்ஸ் ஒரு இலக்கையும் கைப்பற்றினர்.

122 ஓட்டங்கள் முன்னிலைபெற்றிருந்த நிலையில் மேற்கொண்டு இரண்டாவது இன்னிங்ஸிற்காக தொடர்ந்து துடுப்பெடுத்தாட களமிறங்கிய இங்கிலாந்துக்கு இரண்டாவது இன்னிங்ஸ் முதல் இன்னிங்ஸைப்போல் சிறப்பாக அமையவில்லை. இருப்பினும் இங்கிலாந்துக்கு முதல் இன்னிங்ஸ் கைகொடுக்க ஆஸ்திரேலியாவுக்கு வெற்றியிலக்காக 412 ஓட்டங்கள் நிர்ணயிக்கப்பட்டன. பந்துவீச்சில் ஆஸ்திரேலியா சார்பாக லையன் 4 இலக்குகளையும் ஸ்ராக்,ஹசில் வூட் , ஜோன்சன் மூவரும் தலா 2 இலக்குகளையும் கைப்பற்றினர்.

ஆட்டம் நிறைவடைவதுக்கு இரண்டு நாட்கள் மீதமிருந்த காரணத்தினால் முடிவு சமநிலையாக இருக்காது என்ற பொதுவான எதிர்பார்ப்புக்கள் மத்தியில் களத்தில் முதல் இன்னிங்ஸில் 95 ஓட்டங்களைக் குவித்த றௌயேர்ஸ் இரண்டாவது இன்னிங்ஸில் பத்தே ஓட்டங்களுடன் பவிலியன் திரும்பினார். ஆஸியின் சரிவு ஆரம்பமானது. ஒரு முனையில் வோர்ணர் நிலைத்து நின்றிருந்தாலும் மறுமுனையில் கிளார்க் 4, வோக்ஸ் 1, வற்சன் 19, ஹடின் 7 என்று சீரான இடைவெளியில் ஒருவர் பின் ஒருவராக பவிலியன் திரும்ப ஆஸி. 106–5. ஆஸியின் சார்பாக சிறிது போராட ஆரம்பித்தார் ஜோன்சன். ஆனபோதிலும் இணைப்பாட்டத்துக்காக எவரும் உதவத்தயாரில்லை. மறுமுனையில் நிலைத்துநின்ற வோர்ணரும் அரைச்சதத்துடன் ஆட்டமிழந்தார். பின்வரிசை வீரர்களும் பதின்மத்தில் பவிலியன்காண முடிவில் ஆஸ்திரேலியா 242 ஓட்டங்களில் சுருண்டு 169 ஓட்டங்களால் படுதோல்வியடைந்தது.

பந்துவீச்சில் இங்கிலாந்து சார்பாக புரோட், அலி இருவரும் தலா 3 இலக்குகளையும் வூட், –ரூட் இருவரும் தலா 2 இலக்குகளையும் கைப்பற்றினர். (ம)



வடமாகாணக் கல்வித்திணைக்களம் நடத்தும் மாகாணமட்ட தடகளத் தொடரின் நான்காம் நாளான நேற்றையதினம் நடைபெற்ற நிகழ்வுகளில் ஒன்றான 15வயதுக்குட்பட்ட பெண்களுக்கான குண்டு எறிதல் நிகழ்வின் ஒரு பதிவு. (ம)

# ஒலுமடுவுக்குத் தங்கம்

## பின்தங்கிய பாடசாலைகள் ஆதிக்கம்

வவுனியா, ஜூலை 13

வடமாகாணக் கல்வித்திணைக்களம் நடத்தும் மாகாணமட்ட தடகளத் தொடரின் நான்காம் நாளான நேற்றையதினம் நடைபெற்ற நிகழ்வுகளில் ஒன்றான 17வயதுக்கு உட்பட்ட ஆண்களுக்கான 1500மீற்றர் ஓட்டத்தில் ஒலுமடு அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை தங்கப்பதக்கத்தைக் கைப்பற்றிய அதேநேரம் ஏனைய இரண்டு பதக்கங்களையும் பின்தங்கிய பாடசாலைகள் என்று சொல்லப்படும் பாடசாலைகளே கைப்பற்றியுள்ளன.

ஒலுமடு அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை சார்பாக களமிறங்கிய வை.கிரிதரன் 4நிமிடங்கள் 30 செக்கன்கள் ஒரு மில்லிசெக்கன் என்ற பெறுபேற்றுடன் தங்கத்தைக் கைப்பற்றிய அதேநேரம் வெள்ளிப்பதக்கத்தை மன்னார் அரிப்பு றோ.க.த.க. பாடசாலையைச் சேர்ந்த ஜே.அன்ரனி றோயன் 4 நிமிடங்கள் 32 செக்கன்கள் 8 மில்லி செக்கன்கள் என்ற பெறுபேற்றுடனும் வெண்கலப்பதக்கத்தை கிளிநொச்சி மத்திய மகா வித்தியாலயத்தைச் சேர்ந்த ரி.றேனுயன் 4 நிமிடங்கள் 33 செக்கன்கள் 3 மில்லி செக்கன்கள் என்னும் பெறுபேற்றுடனும் கைப்பற்றினர். (ம)

# ஓட்டத்தில் ஊதித்தள்ளியது

## வட்டுக்கோட்டை மத்திய கல்லூரி




வவுனியா, ஜூலை 13

வடமாகாணக் கல்வித்திணைக்களம் நடத்தும் மாகாணமட்ட தடகளத் தொடரின் நான்காம் நாளான நேற்றையதினம் நடைபெற்ற நிகழ்வுகளில் ஒன்றான 21 வயதுக்கு உட்பட்ட பெண்களுக்கான 200 மீற்றர் ஓட்டத்தில் வட்டுக்கோட்டை மத்திய கல்லூரியிடம் தங்கம் தஞ்சமாகியுள்ளது.

வட்டுக்கோட்டை மத்திய கல்லூரியைப் பிரதிநிதித்துவப்படுத்திக் களமிறங்கிய என்.கமலினி 28 செக்கன்கள் மற்றும் 9 மில்லி செக்கன்களில் இலக்கை அடைந்து தங்கத்தைக் கைப்பற்றினார். முல்லைத்தீவு மகா வித்தியாலயத்தை பிரதிநிதித்துவப்படுத்திக் களமிறங்கிய பி.சுவேன்தினி 30 செக்கன்கள் மற்றும் 3 மில்லி செக்கன்களில் இலக்கை அடைந்து வெள்ளிப் பதக்கத்தையும் உயிலங்குளம் றோமன் கத்தோலிக்க தமிழ்க்கலவன் பாடசாலையைப் பிரதிநிதித்துவப்படுத்திக் களமிறங்கிய பி.விஜயராணி வெண்கலப்பதக்கத்தையும் கைப்பற்றினர். (ம)

# தட்டெறிதலில் வித்தை காட்டியது விஸ்வமடு

வவுனியா, ஜூலை 13

வடமாகாணக் கல்வித்திணைக்களம் நடாத்தும் மாகாணமட்ட தடகளத் தொடரின் நான்காம் நாளான நேற்றையதினம் நடைபெற்ற நிகழ்வுகளில் ஒன்றான 19வயதுக்கு உட்பட்ட பெண்களுக்கான தட்டெறிதலில் முல்லைத்தீவு விஸ்வமடு மகா வித்தியாலயம் தங்கத்தைக் கைப்பற்றியது.

விசுவமடு மகா வித்தியாலயம் சார்பாக களமிறங்கிய கே.சுகிதர்ஜினி 24.33 மீற்றர் தூரத்துக்கு எறிந்து தங்கத்தைக் கைப்பற்றிய அதேநேரம் முள்ளியவளை வித்தியானந்தாக் கல்லூரியை பிரதிநிதித்துவம் செய்து களமிறங்கிய ரி.சந்தியா 23.93 மீற்றர் தூரத்துக்கு எறிந்து வெள்ளிப் பதக்கத்தினையும் கனகராயன் குளம் மகா வித்தியாலயம் சார்பாக களமிறங்கிய என்.ரிசாந்தினி 23.49 மீற்றர் தூரத்துக்கு எறிந்து வெண்கலப் பதக்கத்தையும் கைப்பற்றினர். (ம)

# 21வயது ஆண்களுக்கான முப்பாய்ச்சல்

## மன்னார் சென்.ஆன்ஸ் தங்கம்

வடமாகாணக் கல்வித்திணைக்களம் நடத்தும் மாகாணமட்ட தடகளத் தொடரின் நான்காம் நாளான நேற்றையதினம் நடைபெற்ற நிகழ்வுகளில் ஒன்றான 21 வயதுக்கு உட்பட்ட ஆண்களுக்கான முப்பாய்ச்சலில் மன்னார் சென்.ஆன்ஸ் மத்திய மகா வித்தியாலயம் தங்கத்தை சொந்தமாக்கியது.

சென்.ஆன்ஸ் சார்பாக கலந்துகொண்ட எஸ்.வி.மார்க் 13.29 மீற்றர் தூரத்துக்குப் பாய்ந்து தங்கப்பதக்கத்தைக் கைப்பற்றிய அதேநேரம் மன்னார் சித்திவிநாயகர் இந்துக் கல்லூரி சார்பாக களமிறங்கிய ஜே.ஜோயல் பீரிஸ் 13.14 மீற்றர் தூரத்துக்குப் பாய்ந்து வெள்ளிப் பதக்கத்தையும் வவுனியா புதுக்குளம் மகா வித்தியாலயம் சார்பாக களமிறங்கிய எம்.மகிலன் 13.04 மீற்றர் தூரத்துக்குப் பாய்ந்து வெண்கலப்பதக்கத்தையும் கைப்பற்றினர். (ம)



வடமாகாணக் கல்வித்திணைக்களம் நடத்தும் மாகாணமட்ட தடகளத் தொடரின் நான்காம் நாளான நேற்றையதினம் நடைபெற்ற நிகழ்வுகளில் ஒன்றான 19வயதுக்குட்பட்ட பெண்களுக்கான 100 மீற்றர் ஓட்டத்தின் ஒரு பதிவு. (ம)

கிளை அலுவலக திறப்பு விழா

GTV Express
Maharaja parcel service

உள்நாட்டு / வெளிநாட்டு பொதிகள் சேவையில் முதற்தடம்பதித்து தலைசிறந்து விளங்கும் GTV Enterprises (Pvt)Ltd. 9வது புதிய கிளையை இல-25, கந்தசாமிகோவில் வீதி, வவுனியா நகரில் 13.07.2015 (திங்கட்கிழமை) காலை 9.00 மணிக்கு கோலாகலமாக திறக்கப்படவுள்ளது.

"இங்கு மகாராஜா உற்பத்தி பொருட்களையும் பெற்றுக்கொள்ளலாம்."

கிளைகள்
இல 18/3 டாக்டர் க.ஏ. குரே மாவத்தை கொழும்பு 06-0112360926
இல 513 காலி வீதி கொழும்பு 06 - 0114378160
இல 225 கஸ்தூரியார் வீதி யாழ்ப்பாணம்-0212224338/0214925024
இல 170 மத்திய வீதி கொழும்பு 12-0766908971
இல 288 ஜோர்ஜ் ஆர் டி சில்வா மாவத்தை கொட்டாஞ்சேனை கொழும்பு 13-0114378163
இல 49 சமாது ஒழுங்கை திருகோணமலை-0264931068
இல 137/4 திருகோணமலை வீதி மட்டக்களப்பு-0654926837
இல 25 கந்தசாமி கோவில் வீதி வவுனியா-0244930200
இல G-2 146 தீகொழும்பு வீதி வத்தளை-0112938152



வடமாகாணக் கல்வித்திணைக்களம் நடத்தும் மாகாணமட்ட தடகளத் தொடரின் நான்காம் நாளான நேற்றையதினம் நடைபெற்ற நிகழ்வுகளில் விசேட தேவை உடையவர்களுக்காகவும் சில நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன. அவற்றின் சில பதிவுகள். (ம)




வடமாகாணக் கல்வித்திணைக்களம் நடத்தும் மாகாணமட்ட தடகளத் தொடரின் நான்காம் நாளான நேற்றையதினம் நடைபெற்ற நிகழ்வுகளில் ஒன்றான 17வயதுக்குட்பட்ட பெண்களுக்கான தட்டெறிதலின் ஒரு பதிவு. (ம)

A/L தமிழ்
கருத்தரங்கு
ஆசிரியர்:
K.சந்திரலிங்கம்
பகுதி I யூலை 16, 17, 18
பகுதி II யூலை 21, 22, 23
ஆரம்பம்:- 15/07/2015 2மணி
D.C.M யாழ்நகர்.

உதயன் விளம்பரங்களுக்கு
advt@uthayan.com
0215671111

## சானியா – ஹிங்கிஸ் சம்பியன்

### விம்பிள்டனில் வரலாற்றுச் சாதனை



விம்பிள்டன் ரென்னிஸ் தொடரின் மகளிர் இரட்டையர் ஆட்டத்தில் இந்தியாவின் சானியா சுவிட்சர்லாந்தின் மார்டினா ஹிங்கிஸ் இணை கிண்ணத்தைக் கைப்பற்றி அசத்தியுள்ளது. இதன் மூலம் முதன்முறையாக விம்பிள்டன் ரென்னிஸ் கிண்ணம் வென்ற இந்திய வீராங்கனை என்ற சாதனையை சானியா படைத்துள்ளார்.

மிர்ஷா ஹிங்கிஸ் இணையை எதிர்த்து ரஷ்யாவின் இகன்ட்ரினா மகரோவா, இலினா வெஸ்னியா இணை மோதியது. முதல் செற்றினை 5–7 என்று சானியா இணை இழந்தாலும் பின்னர் எழுச்சி கண்டு இரண்டாவது செற்றினை 7–5 என்றும் மூன்றாவது செற்றினையும் அதேபோல் 7–5 என்றும் கைப்பற்றி முடிவில் 2–1 என்ற செற் கணக்கில் சானியா இணை கிண்ணத்தை சாதித்தது. கிண்ணம் வென்று வரலாற்றுச் சாதனையைப் படைத்த சானியாவுக்கு இந்தியப் பிரதமர் மோடி, ஜனாதிபதி பிரணாப் முகர்ஜி உள்ளிட்ட பல பிரபலங்கள் தமது வாழ்த்துக்களைத் தெரிவித்து வருகின்றனர். (ம)

A/L PHYSICS
English medium & Tamil medium
Personal classes / Group classes
for 2016 and 2017students.
GATEWAY
39, College Road, Jaffna
0215675555

கணித, விஞ்ஞான
வினாடி வினாப் போட்டி - 2015

யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியின் 125ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு K.V.Printers அனுசரணையுடன் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி பழையமாணவர் சங்கம் கொழும்பும் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி Puiz கழகமும் இணைந்து நடத்தும் யாழ். மாவட்ட பாடசாலைகளுக்கு இடையிலான கணித விஞ்ஞான வினாடி வினாப்போட்டி

போட்டி பிரிவுகள்:- பிரிவு -I (தரம் 8, 9)
பிரிவு -II (தரம் 10, 11)

அணி விவரம்:-
- ஒவ்வொரு பிரிவும் 3 போட்டியாளர்களையும் ஒரு மேலதிக (Reserve) போட்டியாளரையும் உள்ளடக்கியிருக்கும்.
- ஒவ்வொரு தரத்திலிருந்தும் தலா இருவர் பங்கேற்க வேண்டும்.

பரிசில்கள்:-
முதல் பரிசு - ரூபா 20 000 சுற்றுக்கிண்ணம், பதக்கம்
இரண்டாம் பரிசு - ரூபா 10 000 பதக்கம்
அரையிறுதியில் வெளியேறும் அணிகள் - தலா ரூபா 3000
காலிறுதியில் வெளியேறும் அணிகள் - தலா ரூபா 1500

பங்குபற்ற விரும்பும் பாடசாலைகள் போட்டியாளர்களின் பெயர் விவரங்களையும் தொடர்புகொள்ளவேண்டிய தொ.பே. இலக்கத்தோடு 30/07/2015 இற்கு முன்பதாக வினாடி வினாப் போட்டி அமைப்புக்குழு, யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்பிவைக்கவும்.

மேலதிக விவரங்களுக்கு 0776059650, 0773049831 என்ற இலக்கங்களோடு தொடர்புகொள்ளவும்.

வினாடி வினாப்போட்டி அமைப்புக்குழு
யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி.
(சி. 16874) (45.3)

அரியாலை சரஸ்வதி சனசமூக நிலையம்
96ஆவது ஆண்டு நிறைவு விழா- 2015
* வடமாகாண ரீதியிலான 50km சைக்கிள் ஓட்டப் போட்டி - ஆண்கள்
* வடமாகாண ரீதியிலான (10km) மரதன் ஓட்டம் (ஆண்கள்)
40 ஆயிரம் ரூபா பெறுமதிமிக்க பரிசில்கள் வழங்கப்படும்.
இடம் : நிலையமுன்றில் ( A9வீதி,தபால்கட்டைச் சந்தி)
காலம்: 18.07.2015 சனிக்கிழமை காலை 06 மணிமுதல்
தொடர்பு: 077 309 5745, 077 778 2192
நிர்வாகம்
அரியாலை சரஸ்வதி ச.ச நிலையம்

ஆள்கள் தேவை
சைவ உணவகத்துக்கு உடன் ஆள்கள் தேவை. நேரில் வரவும்
01. சமையல்காரர்
02. உதவியாளர்
03. ரீ மேக்கர்
04. றொட்டி மேக்கர்
05. சப்ளையர்

279, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 077 410 3245
8.30 தொடக்கம் 12.00 மணிவரை நேரில் சந்திக்கலாம்

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 13.07.2015 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.